

கல்கி

KALKI

14-9-69


40 காசு


சிங்கார்
அழகிற்கு
அழகு
செய்யும்
உன்னதமான
பிந்தி
சீக்கிரம் உலர்ந்து விடுகிறது
எரிச்சலைத் தருவதில்லை
ஊறிப் பரவுவதில்லை
கறைப் படுத்துவதில்லை
பளபளக்கும்
மிருதுவான ஃபினிஷ்
பெயர்ந்து போவதில்லை
விரிசல் விழுவதில்லை
எந்த உடைக்கும், எந்த
சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற
விதவிதமான
பல வர்ணங்கள்.
Shingar
Shingar
ஹேமினா ப்ராடக்ட்ஸ்,

மெய்சிலிர்க்கும் கணம் !

மெய்சிலிர்க்கும் விளையாட்டுப் பந்தயங்கள், கொண்டாட்டம் நிறைந்த ஆட்டங்கள் இவற்றைப் படம் பிடிப்பதில் ஏற்படும் பரபரப்பையும் பரவசத்தையும் ரசிக்காதவர் யார் ? அத்தகைய மேன்மையான கணத்தை தெள்ளத்தெளிவான பிளாக் அண்ட் ஒயிட் படமாகப் பிடிக்க உதவுகிறது, ஆர்வோ பிலிம். ஆர்வோ பிலிம்கள் பல்வேறு எக்ஸ்போஷர்களுக்கும் சாலச் சிறந்தவை. நெகடிவ் பிலிம்களின் உன்னதமான நன்மைகளில் இதுவும் ஒன்று. ஆர்வோ பிலிமில் எடுக்கப்படும் புகைப்படங்கள் எல்லோரையும் இன்பத்தில் ஆழ்த்துகின்றன. எனவே, ஆர்வோ பிலிம்தான் வேண்டுமென்று உங்கள் வியாபாரியைக் கேளுங்கள் !

ஆர்வோ—130 நாடுகளில் பதிவும் பாதுகாப்பும் பெற்றது.
ஆர்வோ பிலிம்கள்—ஜெர்மன் டெமோக்ராடிக் ரிபப்ளிக்கின் போட்டோ கெமிகல் தொழில் துறையின் தரமான தயாரிப்பு !






ORWO Film

விநியோகஸ்தர்கள் :
ஆர்வோ பிலிம்ஸ் சவுடர்ன் யூனிட், சென்னை மற்றும் கல்கத்தா.
ஆர்வோ பிரைவேட் லிமிடெட், பம்பாய் மற்றும் டெல்லி.
தயாரிப்பாளர் :
வெப் பிலிம்பேப்ரிக் உல்ப்பென், ஜெர்மன் டெமோக்ராடிக் ரிபப்ளிக்.

JAISONS 12269



இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப் படுத்தும்—இதர நோய்கள் பாதிக்கவும் இடமளிக்கும்.

வாடர்பரீஸ் காம்பவுண்ட் அருந்தி ஆரோக்கியமாகவும் சக்தியுடனும் திகழுங்கள்



இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைப்பதால், இதர நோய்கள் உங்களைப்பாதிக்கக்கூடும். எனவே தவறாது வாடர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிட்டு வாருங்கள். பசியைத் தூண்டி, இழந்த சக்தியை மீட்டு, உடலுக்கு நோய்த்தடுப்புச்சக்தியை அளிக்கும் ஊட்டப்பொருள்கள் அடங்கியது வாடர்பரீஸ் காம்பவுண்ட். அதிலுள்ள க்ரியோஸோட் மற்றும் க்வயாகால் இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றன.

வாடர்பரீஸ் காம்பவுண்ட்—மிகவும் நம்பகமான டானிக்


வார்னர்-ஹிந்துஸ்தான் லிமிடெட்

WH 8075 TM

கல்கி பொருளடக்கம்


சௌமிய, ஆவணி 29 ★ 1969, செப்டம்பர் 14

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பார்கோ

கேஸ் மான்டில்கள்





உன்னத ஒளி கூட்டி நீடித்து உழைப்பவை

தயாரிப்பாளர்கள்:

ஃபார்கோ மான்டில் ப்ராடக்ட்ஸ்

சர்வோதயா பவன், 38/40, ஆதர்ஷ் காலனி
லிபர்ட்டி கார்டன் சமீபம்
மலாட் (மேற்கு) பம்பாய் - 64 (என். பி.)


"மிக்க நன்றி, இனி நாங்கள் அறுவடை செய்து கொள்கிறோம்!"
சர்க்கார் உடைமை
PK


சோஷலிஸம்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 □ இதழ் 7

தொழில் துறை தழைக்க....

பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் ஸ்திர நிலை இருந்து வந்தால்தான் தேசம் வேகமாக முன்னேற்றமடைய முடியும். இன்று இந்த இரண்டுமே சீர்கெட்ட நிலையில் இருந்து வருகின்றன. இப்போதைய போக்கு நீடித்தால் மத்திய ஆட்சியிலும் மாநிலங்களிலும் பல வகைக் குழப்பங்கள் ஏற்படலாம். பாங்குகள் அரசுடைமையானதை அடுத்து என்ன நடைபெறுமோ என்ற நிச்சயமற்ற நிலைமை தேசத்தில் ஏற்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தில் இருந்து வரும் மேற்கு வங்காளத்திலும், கேரளத்திலும் வேலை நிறுத்தங்களும் வன்முறைச் செயல்களும் அதிகரித்து வருகின்றன. சர்க்காரிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்வோரிடையே அதிருப்தி வேகமாகப் பரவி வருகிறது. மேற்கு வங்காளத்தில் 'கேரோ'க்கள் சிறிது தணிந்திருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனால் தொழில் தொழிலாக எடுத்துக் கொண்டு, முழுமூச்சுடன் மாநிலமெங்கும் வேலை நிறுத்தங்களைச் செய்யும் போக்கும் அதிகரித்து வருகிறது. சணல் தொழிலிலும் தேயிலைத் தோட்டங்களிலும் நடந்த வேலை நிறுத்தங்களுக்கு ஏதோ ஒரு வகையில் இப்போது முடிவு கண்டிருக்கிறார்கள். வங்காளத்துக்குப் பஞ்சாலைத் தொழில் புதிது. அதுவும் பாதிக்கப்பட்டுள்ளது. கேரளத்தில் சில மலைத் தோட்டங்களையே ஊழியர் கைப்பற்றிக் கொள்ளும் அளவுக்கு அங்கு அராஜக நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தொழில்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறி வரும் சமயத்தில் நாடெங்கும் வேலைநிறுத்த வேகம் அதிகரித்து வருவது கவலை தருவதாக இருக்கிறது. தொழில் துறையில் தேசமெங்கும் அமைதியும், விலைவாசிகள் உயராமல் ஒரே சீராக இருந்து வரும் என்ற நிலைமையும் ஏற்பட்டாலொழிய எதிர்காலம் இருள் படர்ந்ததாகவே இருக்கும். இந்த இரண்டு அம்சங்களையும் கருத்தில் கொண்டு, தொழில்களில் அமைதி நிலவச் செய்வதற்கான பல சிபாரிசுகளைத் தொழிலாளர் நலக் கமிஷன் தந்துள்ளது. இதன் தலைவர் முன்னாளைய சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி கஜேந்திர கட்கர். மூன்று வருஷப் பரிசீலனைக்குப் பிறகு கமிஷன் தன் அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அதன் முக்கிய நோக்கம் வேலை நிறுத்தங்களும் கதவடைப்புக்களும் அவசியமில்லாதபடி செய்வதுதான்.

இப்பொழுது தொழிலாளர் விவகாரங்களின் பைசலுக்குப் பலவகைப்பட்ட ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அந்த அமைப்புக்களுக்குப் பதிலாகச் சில புது ஏற்பாடுகளை கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. மத்திய சர்க்காரும், மாநில சர்க்கார்களும், தொழில் தகராறுகளைக் கவனிப்பதற்காக என்று நிரந்தரமான கமிஷன்களை நியமிக்க வேண்டும், அவை சுதந்திரமாக இயங்க வேண்டும், அரசின் நிர்ப்பந்தம் கூடாது என்பது முக்கிய சிபாரிசு. நடைமுறை விதிகளைக் கவனித்துப் பைசல் செய்யத் தனி நபர் கோர்ட்டுகள் ஏற்பட வேண்டும் என்பது மற்றொரு சிபாரிசு.

தொழில் தகராறுகள் எழுந்தால் கூட்டுப் பேர அடிப்படையில் உடனடியாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று கமிஷன் கூறுகிறது. அது பலிக்காவிடில் சமரச முயற்சி, கட்டாயப் பைசல் முதலியவைகளுக்கு கமிஷன் ஏற்பாடு செய்யும். எந்த வேலைநிறுத்தமும் முப்பது நாட்களுக்கு மேல் நீடிக்க முடியாதபடி கட்டாயப் பைசலுக்கு உத்தரவிட கமிஷனுக்கு அதிகாரம் உண்டு. மத்திய சர்க்கார் நியமிக்கும் கமிஷன், தேசமெங்கும் அதன் அதிகார வரம்புக்கு உட்பட்ட தொழில்களைக் கவனித்துக் கொள்ளும். மாநிலக் கமிஷன்கள் தமது வரம்புக்கு உட்பட்டுச் செயல்படும். தமது

யோசனைகளை ஏற்றுக் கொண்டு நடத்தி வைத்தால் வேலை நிறுத்தங்களே அவசியமில்லாதபடி போய்விடும் என்கிறது தொழிலாளர் நலக் கமிஷன். ஒரே தொழிலில் போட்டிச் சங்கங்கள் இருக்கும் நிலவரத்தில், ரகசிய வோட்டெடுப்பின் மூலம் பிரதிநிதித்துவமுள்ள சங்கத்தைத் தேர்ந்தெடுத்து, பேரம் பேசும் ஏஜண்டாக அதை நியமிப்பதற்கு கமிஷன் வகை செய்கிறது.

மத்திய சர்க்காரின் தொழில் துறை ஊழியர்களுக்கு உடனடியாகச் சம்பளக் கமிஷனை நியமிக்க வேண்டும் என்பது தொழில் நலக் கமிஷனின் மற்றொரு சிபாரிசு. தேசமெங்கும் நடத்தி வைக்கக் கூடியவாறு, குறைந்தபட்ச ஊதியத் திட்டம் வரவேண்டும் என்றும், அது தேவையின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்றும் சென்ற வருஷம் கிளர்ச்சி நடந்தது நினைவிருக்கலாம். தேசம் அனைத்துக்குமாக அத்தகைய திட்டத்தைத் தயாரித்து நடத்தி வைப்பது சாத்தியமில்லை என்பது கமிஷனின் கருத்து. வெவ்வேறு பகுதிகளில் ஏற்றத் தாழ்வு நிலைகள் இருந்து வருவதால், பிரதேச அடிப்படையில்தான் இதை நிர்ணயிக்க முடியும் என்பது கமிஷனின் கருத்து. அத்தகைய ஊதியம் ரூபாய் 125 முதல் 185 வரையில் இருக்கலாம் என்பது அதன் சிபாரிசு. விலைவாசிகள் 1968ல் இருந்த நிலவரத்தில் ஸ்திரமாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான் தொழிலாளர் நலக் கமிஷனின் சிபாரிசுகள் பெரும்பாலும் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த வருஷத்தில் வேகமாக ஏறி வருகிற விலைவாசி நிலவரத்தைப் பார்த்தால் கமிஷனின் பல சிபாரிசுகளை வெற்றிகரமாக நடத்தி வைக்க முடியாதோ என்ற சந்தேகம் அதிகரிக்கிறது.

ராஜாஜியின் கருத்துக்கள்

மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் வகையில் வாய்ப் பந்தல் போடுவது ஜனநாயகத்துக்குச் சேவை புரிவதாகாது. உண்மையில் அது தீமையையே விளைவிக்கும். கம்யூனிஸ்டுகளின் வேலைத் திட்டங்களைக் காங்கிரஸ் கட்சியினர் தம்முடையதாக்கிக் கொள்வதற்கு முயன்று வருகிறார்கள். இது நிச்சயமாகக் கம்யூனிஸ்டுகளின் பலத்தையே அதிகப்படுத்தும். நமது அரசியல் சாஸனத்தைக் கட்டிக் காப்பதற்கு இது பயன்படாது. எனவே, இந்தப் போக்கைக் காணும் சிந்தனையாளர்களான நல்ல மனிதர்கள் ஜனநாயகத்தின் மதிப்பைப் பற்றியே சந்தேகப்பட ஆரம்பித்துள்ளனர். பிரதம மந்திரி போடும் வாய்ப் பந்தல் கம்யூனிஸ்ட் வகையில்தான் இருக்கிறது. இதை எதிர்த்தாக வேண்டும் என்று "மைலிண்டியா" சிறந்ததொரு கட்டுரையை எழுதியிருக்கிறது.

*

இப்பொழுதெல்லாம் சுரொட்டாகத்தான் சிந்தித்து எழுத வேண்டியிருக்கிறது. எரிந்து கொண்டிருக்கும் கப்பலின் மேல் தளத்தில் பிடிவாதமாக நின்று கொண்டிருப்பவர் காமராஜ் ஒருவர்தான் என்று வதந்திகள் கூறுகின்றன. சிண்டிகேட்டைச் சேர்ந்த மற்ற எல்லாரும் தப்பிச் செல்லும் படகுகளை நாடுபவர்களாகவே காணப்படுகிறார்கள். காந்தி நூற்றாண்டு விழா வருஷத்தில் என்ன அலங்கோலத்தைக் காண்கிறோம்!

*

பத்திரிகைச் செய்திகள் சித்திரிக்கும் நிலவரம் மிக மோசமாக உள்ளது. நேபாள மன்னரின் மதிப்பையோ, அன்பையோ இந்தியாவால் பெற முடியவில்லை எனக் காண்கிறது. பாகிஸ்தான் — சீனத்தின் கூட்டுழைப்பு மிக வேகமாக வலுத்து வருவதாகத் தெரிகிறது. அமெரிக்கா நிச்சயமாக ஆசிய விவகாரங்களிலிருந்து பின்வாங்கிக் கொள்ளும் என்றும் தோன்றுகிறது.

உள் நாட்டு விவகாரங்களைப் பார்ப்போமானால், நமது சர்க்கார் உற்பத்தியைப் பெருக்காமலே — உற்பத்திப் பெருக்கத்தைக் குலைக்கும் நடவடிக்கைகளை எடுத்தவாறே — சோஷலிஸ சமத்துவத்தை உடனடியாகச் சாதிக்க சங்கற்பித்திருக்கிறது! நமது கட்சித் தலைவர்களையும் புறக்கணித்து இவ்வழியில் தனியாகச் செல்லத் துணிந்துவிட்ட அம்மையாரின் கையில் சர்க்கார் இருக்கிறது!

*

காந்திஜியின் நூற்றாண்டு விழாவாகிய அக்டோபர் 2ந் தேதி மக்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ள ஏற்பாடாகி வருகிறது. அரசியல் சாஸனத்தில் இடம் பெற்ற உறுதி மொழிகளே சர்க்காரால் தகர்க்கப்படும் போது, மக்கள்மீது உறுதி மொழிகளைத் திணிக்காமலிருப்பதே சிலாக்கியம். இந்த யோசனையை மறுக்க விரும்பாததாலேயே மக்கள் உறுதி மொழி எடுத்துக் கொள்வர். ஆனால் அது வாயளவிலேயே நிற்கும். வீணாக ஆஷாடபூதித்தனம் அதிகரிக்கும்.

நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை ஒட்டி காந்தி நிதி நிறுவனத்தாருக்கு என் மனப்பூர்வமான யோசனையைக் கூறுகிறேன்: அதாவது கத்தோலிக்கர்களின் இயேசு சங்கம் (Society of Jesus) போல் காந்தி சங்கம் ஒன்று அமைக்க வேண்டும். இதன் அங்கத்தினர்கள் இந்திய மக்களுக்குப் பல விதங்களில் இலவசச் சேவை புரிய வேண்டும். இலட்சியத்தில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள பிரமச்சாரிகளாக வாழ்ந்து காந்தி நிதியிலிருந்து வாழ்க்கைச் செலவுக்கு அத்தியாவசியமான வருமானம் பெறவேண்டும். பிரம்மச்சாரிகளுக்கும், பிரம்மச்சாரிணிகளுக்கும் மட்டுமே சங்கத்தில் சேர அநுமதி இருக்க வேண்டும். அநுமதி விதிகளும், பயிற்சி — ஒழுங்குப்பாடு முறைகளும் இயேசு சங்கத்தின் ரீதியில் இருக்க வேண்டும். ஆடவர்களும் பெண்டிரும் இரு தனிப் பிரிவுகளாகச் செயலாற்ற வேண்டும்.

இப்போது காந்தி சதாப்திக்குச் செய்கிற பல நினைவுச் சின்னங்களை விட இதுவே அவருக்கு உகந்த ஞாபகார்த்தமாக இருக்கும்.

என்ன சேதி?

ஹோ - சி - மின்

வட வியட்நாமின் ஜனாதிபதி ஹோ - சி - மின் தமது 79வது வயதில் காலமானார்.

அவர் உலக கம்யூனிஸ்ட் தலைவர்களில் முக்கியமானவர். பெரும் தேசபக்தர். பிரஞ்சு ஏகாதிபத்தியத்திலிருந்து தாய்நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த தீரர்.

ஒவ்வொரு நாடு சுதந்திரம் பெற ஒவ்வொரு தலைவர் ஒவ்வொரு வழி சிறந்தது என்று கருதுவார்கள். காந்தி மகான் அஹிம்சா மார்க்கத்தில் ஒத்துழையாமையைக் கடைப்பிடிப்பதே விடுதலைக்கு ராஜபாட்டை என்று கருதினார். ஆனால் உலகில் பெரும்பாலான வீரர்கள் அஹிம்சா மார்க்கத்தை நம்பவில்லை. ஹோசி மின் கம்யூனிஸ வழியே தம் நாட்டு விடுதலைக்கு உற்ற வழி என்று கண்டு லெனின், டிராட்ஸ்கி போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு விடுதலைப் போராட்டம் நடத்தி, சிறைவாசமும், பலப் பல இன்னல்களும் உற்றார். கடைசியில் அவர் கனவு நனவாகியது. 1954ல் வியட்நாம் பிரிக்கப்பட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது.

ஆதிக்கம் செலுத்தி வந்த பிரஞ்சு அரசாங்கம் ஒரு நிபந்தனையின் பேரில் வியட்நாமுக்கு விடுதலை அளிக்க இணங்கியது. அந்த நிபந்தனைக்கு ஹோ சி மின்னும் ஒப்புக் கொண்டார். அதன் விளைவாக வியட்நாம் வட வியட்நாம், தென் வியட்நாம் என்று இரு கூறுகப் பிரிந்தது. இந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்ட பின் ஹோ சி மின் தென் வியட்நாமில் நிலவி வந்த ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சிகளைத் தூண்டி விட்டு, அச் சக்திகளுக்கு மறைமுகமாகவும் பகிரங்கமாகவும் ராணுவ உதவி முதலியன அளித்ததுதான் அவரது செய்கைகளில் ஒப்புக்கொள்ள முடியாத அம்சமாகும்.

ஹோ-சி-மின் திருமணம் செய்துகொள்ளாதவர். கவிஞர், பல மொழிகள் தெரிந்தவர். எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர். நகைச்சுவை உணர்வு பெற்றவர். வியட்நாம் மக்கள் அவரை "மாமா ஹோ" என்று அன்புடன் உறவு கொண்டாடி அழைத்து வந்தார்கள்.

சீனக் கம்யூனிஸம் சிறந்ததா, ருஷ்யக் கம்யூனிஸம் சிறந்ததா என்ற வாதங்களில் ஈடுபடாமல், ஹோ - சி - மின் தனி வழியைக் கடைப்பிடித்து வந்தார். இனி வட வியட்நாம், ஹோ-சி-மின் காட்டிய கம்யூனிஸப் பாதையில் செல்லுமா அல்லது இரு கம்யூனிஸ்ட் வல்லரசுகளில் ஒன்றின் ஆதிக்கத்தில் சிக்கிக்கொள்ளுமா என்று உலகம் கவலையோடு பார்க்கிறது.

சென்னையில் அசுர சாதனை

சமீப மாதங்களில் சென்னை நகர மக்கள் பெருந் தண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கு உள்ளாகி உற்ற அவதி கொஞ்ச நஞ்சமல்ல. பருவ மழையை எதிர்பார்த்து எதிர்பார்த்து மக்கள் ஏமாற்றம்தான் அடைந்தார்கள். இதே நிலை நீடித்தால் வரும் அக்டோபர் மாதம், கொஞ்சம்கூடத் தண்ணீர் இல்லாத, தாங்கமுடியாத நிலை ஏற்பட்டு விடும் என்பதை உணர்ந்து, தமிழக அரசாங்கம், சென்னை நகரம் முழுதிலும் பேட்டைக்குப் பேட்டை தெருவுக்குத் தெரு குழாய்க் கிணறுகளை ஏற்படுத்தி மக்களின் தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்க முயன்றிருப்பதைப் பாராட்ட வேண்டும். சுமார் ஒரு வார காலத்தில் 10,000க்கு மேல் குழாய்க் கிணறுகள் இறக்கி அசுர சாதனை புரிந்திருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து பராமரிக்கும் பணியையும் தமிழக அரசாங்கம் மேற்கொண்டிருப்பதை வரவேற்க வேண்டும். சென்னை பொதுமக்கள், இந்தக் குழாய்க் கிணறுகளை நல்லபடியாகப் பயன்படுத்திப் பயனடைய வேண்டும். ஏற்கனவே இக் குழாய்க் கிணறுகளின் உறுப்புக்கள் திருடு போவதாகவும் அப்பகுதிகளை அசுத்தப்படுத்துவதாகவும் குறைகள் வரத் தொடங்கி விட்டன. இவையெல்லாம் நடைபெறாமல் தங்கள் சொந்தச் சொத்தைப்போல் பொதுச் சொத்தையும் பேண வேண்டியது சென்னை நகர மக்களின் கடமையாகும்.

டோக்கியோ செல்லும் ஜெயின்

இந்த மாதம் டோக்கியோவில் நடக்கவிருக்கும் அகில உலக விளம்பரதாரர்கள் சங்கத்தின் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க இந்திய விளம்பரக் கம்பெனியான ஜெய்ஸன்னின் தலைவர் ஹரீஷ் ஸி. ஜெயின் அவர்களை அழைத்திருப்பது இந்தியாவுக்குப் பெருமை அளிக்கும் விஷயமாகும். அகில உலக விளம்பரதாரர்கள் சங்கத்தின் தலைமைப் பீடம் அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ளது. இச்சங்கத்தின் மகாநாட்டுக்கு ஓர் இந்தியரைத் தலைமை தாங்க அழைப்பது இதுவே முதல் தடவையாகும். திரு ஜெயின் தலைமை தாங்கும் விளம்பரக் கம்பெனியான ஜெய்ஸன்ஸுக்கு உலகில் எண்பது நாடுகளுடன் தொடர்பு உண்டு. அந்நியச் செலாவணி சம்பாதித்த இந்திய விளம்பர ஸ்தாபனங்களில் ஜெய்ஸன்ஸ் முன்னணியில் நிற்கிறது என்பது நேயர்களுக்கு மகிழ்வூட்டும். திரு ஜெயின் வெற்றியுடன் திரும்புவாராக!



திரு ஹரீஷ் ஸி. ஜெயின்





வெள்ளி விழாவும் தங்கமான வாய்ப்பும்!

"ஆஹா! திருநெல்வேலி தோசை மாதிரி அல்லவா இருக்கிறது?" என்றார் 'ரசிகமணி'.


இந்த உவமானத்தின் உள் மதிப்பை அப்போது திரு கேதாரேசுவர சர்மாவினால் உணர முடியவில்லை. பிறகு ஒரு சந்தர்ப்பத்தில், குற்றாலம் போயிருந்த போது, டி. கே. சி.யின் இல்லத்திலேயே அன்புடன் வார்த்துப் போடப்பட்ட தோசைகளைச் சுவைத்து உண்ட பிறகுதான் முன்பு ஒரு நாள் கேட்ட உவமானத்தின் பெருமதிப்பை உணர்ந்தார்!

ரசிகமணி டி. கே. சி., தோசைக்கு எதை ஒப்பிட்டார் தெரியுமா? சென்னை புரசவாக்கத்தில் உள்ள சிமாட்டி முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத்தான்! வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி!

இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன் புரசைவாக்கவாசிகள், தங்கள் பெண் குழந்தைகளுக்கேற்ற ஓர் உயர்நிலைப் பள்ளி இந்த வட்டாரத்தில் இல்லாததைத் தீவிரமாக உணர்ந்தார்கள். அப்போது முத்தையா செட்டியார் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி சீரிய முறையில் நடைபெற்று வந்தது. அதன் போஷகர் வணிகத் துறை மேதை எம். ஸிடி. சிதம்பரம் செட்டியார், தலைமை ஆசிரியர் வி. எஸ். கோபாலகிருஷ்ணய்யர், டிரஸ்டிகள் கே. எஸ். ராஜகோபால அய்யங்கார், எஸ். கே. யக்ஞநாராயணய்யர் முதலியவர்களின் கண்காணிப்பின் கீழ் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அந்த நிர்வாகக் குழுவையே அந்த வட்டார வாசிகள் சிலர் அணுகி, 'தங்கள் பிரச்னைக்கு ஒரு வழி காண வேண்டிக் கொண்டார்கள்.

எம். ஸிடி. எம். சிதம்பரம் செட்டியார் தம் தாயார் தெய்வயானை ஆச்சியை அணுகி, புரசைவாசிகளின் அவாவைத் தெரிவித்தார். அவருக்குத் தம் தந்தை முத்தையா செட்டியாரின் பெயரால் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி இயங்கி வருவது போல், தாயின் பெயராலும் ஒரு பெண்கள் பள்ளி உருவாக வேண்டும் என்ற ஆர்வம் தோன்றி விட்டது. தெய்வயானை தம் மகனின் மனத்தைப் புரிந்து கொண்டு ஒப்புதல் அளித்துவிட்டார்.

பணமும் மனமும் சேரும்போது தாமதத்துக்கு இடமில்லைதான். ஆனால் பள்ளிக்கூடம் நடக்க இடம் இந்தப் பகுதியில் வேண்டுமே! அந்தப் பிரச்னையைச் சமாளிக்க வள்ளல் அழகப்ப செட்டியார் உதவினார். பெண்கள் பள்ளிக்கான நிரந்தரக் கட்டடம் எழும் வரையில், அந்தப் பள்ளி, தம்முடைய 'ஸ்டிராத்தன்டேல்' மாளிகையில் இயங்க அனுமதி வழங்கினார்.



திரு எம். ஸிடி. முத்தையா

1944ம் ஆண்டு செயல்படத் தொடங்கி வெள்ளி விழாக் கொண்டாடும் பள்ளியில் அன்று முதல் இன்று வரை உற்சாகத்துடன் பணியாற்றி வரும் நால்வர்: தமிழாசிரியர் வ. கை. கேதாரேசுவர சர்மா, சம்ஸ்கிருதப் பண்டிதர் கோபால தேசிகர், சங்கீத ஆசிரியை திருமதி ராஜலட்சுமி, சாரணர் இயக்கப் பொறுப்பேற்றிருக்கும் ஸ்ரீமதி விசாலாட்சி.

1947ல்தான், பள்ளி இறுதித் தேர்வுக்கான பரீட்சைக்கு இந்தப் பள்ளியிலிருந்து மாணவிகள் முதல் தடவையாக, அனுப்பப் பட்

முதல் பக்கம்: 1. பள்ளி கரஸ்பாண்டெண்ட் திரு நரசிம்மன் 2. வெள்ளி விழாக்காலம் பணியாற்றிய நான்கு ஆசிரிய ஆசிரியைகள். இந்தப் பக்கத்தில்: 1. மாணவிகள் உடற் பயிற்சி. 2. தலைமை ஆசிரியை ஸ்ரீமதி ஜி. சாந்தா.| 3. லேடி எம். ஸிடி. முத்தையா செட்டியார்.







டார்கள். பரீட்சை எழுதிய பத்தொன்பது மாணவிகளில் பதினாறு பேர் வெற்றி பெற்றார்கள். சராசரியாக இந்த எண்பது சதவிகித வெற்றி கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாகவே இந்தப் பள்ளியைப் பொறுத்தவரை நடைமுறையில் வந்து விட்டது. 1962ஆம் ஆண்டில் பரீட்சை எழுதிய ஐம்பத்து மூன்று மாணவிகளுமே, வெற்றி பெற்று நூறு சத வெற்றி மூலம் தங்கள் பள்ளிக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்தார்கள்.

1947–48ல் திரு அழகப்ப செட்டியாருக்கு அவர் மாளிகை தேவைப்பட்டது. பள்ளிக்கூட நிர்வாகம் அவசரத்துக்கு வேறு கட்டடத்தை வாங்கத் தயாராக இருந்தும் கட்டடம் கிடைக்கவில்லை. அந்தத் தருணத்தில் சமயோசிதமாக ஆண்கள் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த திரு வி. எஸ். கோபாலகிருஷ்ணய்யர், தம் பள்ளி வகுப்புகளில் சிலவற்றுக்கு 'ஷிப்டு' முறையைக் கொண்டு வந்தார்.

இதனால் ஆண்கள் பள்ளிக்காகக் கட்டப்பட்டிருந்த ஒரு கட்டடத்தைப் பெண்கள் பள்ளிக்கு ஒதுக்கி விட்டுவிட முடிந்தது. இந்த முறை பின்னால் வெகு காலம் நீடித்தது. ஆண்கள் பள்ளிக்கு வேறு புதிய கட்டடங்கள் எழுந்த பின்தான் 'ஷிப்டு' விஷயம் கைவிடப்பட்டது.

ஆனால் இப்போது மீண்டும் இடநெருக்கடிப் பிரச்னை தலையெடுத்திருக்கிறது.

தொடக்கத்தில் இருநூற்றி எட்டாக இருந்த மாணவிகளின் எண்ணிக்கை இன்று எண்ணூற்றை எட்டியிருக்கும் போது இந்தப் பிரச்னை எழாமல் இருக்குமா என்ன?

பள்ளி போஷகர்களான—சிதம்பரம் செட்டியாரின் குமாரர்கள் — முத்தையா அவர்களும் பெத்தாச்சி அவர்களும் இந்தப் பள்ளி வளர்ச்சியில் மிகவும் கவனம் செலுத்துகிறார்கள். அவர்களுடைய உதார குணத்தால் இப்போதுள்ள பெண்கள் பள்ளிக்குப் பக்கத்திலேயே இருந்த காலி இடத்தை ஆர்ஜிதம் செய்ய முடிந்தது. அந்த இடத்தில் படிப்படியாக, பரிசோதனைக் கூடங்களும், வகுப்பு அறைகளும் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் பூர்த்தியானால், புரசைவாக்கப் பிராந்தியத்திலுள்ள பெண் குழந்தைகளுக்கு நல்ல யோகம்தான்.

இந்தப் புதிய கட்டடத்தை அமைக்கும் பணியில் இங்கு படிக்கும் பெண் குழந்தைகளின் பெற்றோர்களும் கலைகளுக்குச் சேவை புரிய விரும்பும் மற்றவர்களும் பங்கு பெற்றால் நன்றாக இருக்கும் என்று பள்ளியின் தலைமை ஆசிரியை ஜி. சாந்தா அவர்களும் கரஸ்பாண்டெண்ட் எஸ். நரஸிம்மன் அவர்களும் கருதுகிறார்கள். இந்தப் பள்ளியின் பழைய மாணவிகளில் பலரும் இன்று வாழ்க்கையில் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களும் இதற்கு உதவ, இந்த வெள்ளி விழா ஆண்டில் ஒரு பொன்னான வாய்ப்புக் கிட்டியிருக்கிறது.



திரு எம். ஸிடி. பெத்தாச்சி

சங்கீத கலாநிதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள், இந்த மாதம் 21ம் தேதி ஞாயிறன்று பள்ளிக் கட்டட நிதி வசூலுக்காக உதவிக் கச்சேரி அளிக்க மனமுவந்து சம்மதம் தெரிவித்திருக்கிறார். இசைவாணியின் சங்கீதத்தில் லயிக்கவும் கலாவாணிக்குக் காணிக்கை செலுத்தவும் அரிய சந்தர்ப்பம்.

— பட்டினத்தார்


ஓவல்டின்
அறிமுகப்படுத்தும்
HSE
"ஒண்டர் பாய்"
அளவிலா ஆற்றலின்
அதிசய உருவம்
OVALTINE
HSE
இலவசம்!



பக்கத்து வீட்டுப் பிரமுகர்


ஸ்ரீமதி சௌந்தரா கைலாசத்தின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருப்பவர் காலஞ்சென்ற தொழில்மேதை திரு அனந்தராம கிருஷ்ணனின் குமாரி ஸ்ரீமதி கல்யாணி. ஒன்பது வருடங்களாகப் பக்கத்து வீட்டு அம்மையாருடன் ஒட்டுதலுடன் பழகி வருபவர் சொல்கிறார் :

சௌந்தரா வடபழனி கோவிலுக்குப் புறப்பட்டு விட்டாரென்றால், அன்று செவ்வாய்க் கிழமை என்று அர்த்தம். அத்தனை கறாரான பழக்கம்.

சௌந்தராவின் மனத்தில் இந்த முருக பக்தி புகுந்த நிகழ்ச்சியே சுவாரசியமானது. மனத்தில் ஒருவிதப் பிரமை. எங்கே நோக்கினாலும் அங்கே ஒரு பாம்பு ஓடுவது போல் தோற்றம். பல சந்தர்ப்பங்களில் ஸ்நான அறையிலிருந்து அலறிப் புடைத்துக்கொண்டு வெளியே வந்திருக்கிறார். இந்தப் பிரமைக்கு மருந்து திருமுருகாற்றுப் படையை மனனம் செய்வதில்தான் இருக்கிறது என்று நண்பர்கள் கூறக் கேள்விப்பட்டு அதில் ஈடுபட்டார். இந்த ஈடுபாட்டை ஏற்படுத்திய நண்பர், "முருகனிடம் தீவிர ஈடுபாடு உள்ளவர்களுக்குத்தான் திருமுருகாற்றுப்படையை மனனம் செய்யக் கூடிய திறன் வரும். மற்றவர்கள் வாழ்நாள் முழுதும் புத்தகத்தைப் பார்த்துத்தான் படிக்க வேண்டும்" என்றார்.

சௌந்தரா அந்த நிமிடம் வரை திருமுருகாற்றுப்படையைப் பற்றிக் கேள்விப்பட்டதே யில்லை. ஆனாலும் அடுத்த தடவை அந்த நண்பர் வந்தபோது அவரிடம் ஒப்புவித்தும் காட்டினார். "அம்மா! உங்களுக்கு முருகன் அருள் நிறைய இருக்கிறது" என்று அவர் சொன்னதும் சௌந்தராவுக்கு உடம்பு புல்லரித்தது. பாம்பு ஓடுவது போன்ற தோற்றமும் நாளடைவில் மறைந்தது. இவர்கள் இல்லத்தின் பெயர் கூட 'முருகனடி'தானே!

காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து விடும் பழக்கம் இவர் குடும்பத்தினர் அனைவருக்குமே உண்டு. ஸ்நானத்தை முடித்துக் கொண்டு பூஜை அறையில் கூடிவிட்டுத்தான் மற்ற காரியங்களைப் பார்க்கிறார்கள்.



சௌந்தரா கைலாசம் – கல்யாணி

காலை பத்து மணி வரை இவரை வீட்டு நிர்வாகம் அசைய விடுவதில்லை. குழந்தைகள் கல்லூரிக்குப் போய், கணவரும் உயர்நீதி மன்றத்துக்குக் கிளம்பிய பிறகு ஓய்வு. இந்த ஓய்வு நேரம் மாலை நான்கு மணிவரை நீடிக்கும். அந்த நேரத்தில் புத்தகங்கள் படிக்கிறார். பிறகு சற்று நேரம் வீட்டு மேற்பார்வை. அப்புறம், இலக்கிய நிகழ்ச்சிகள் இருந்தால் அவைகளில் கலந்து கொள்ளக் கிளம்புகிறார். இல்லையோ, திரைப் படம் பார்ப்பது இருக்கவே இருக்கிறது.

இலக்கிய ஆர்வம் இவரை எப்படி வசீகரித்தது என்பது ஒரு தனிக் கதை.

இவருக்குப் பதினைந்து வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது. பதினாறு வயதில் தாய்மைப் பதவி கிட்டி விட்டது. பள்ளிப் படிப்பு பாதியிலேயே முடிந்து விட்டது. இவருடைய சகோதரர் அப்போது பச்சையப்பன் கல்லூரியில் மாணவர்.

"நீ மாலை வேளைகளில் பொழுது போகாமல் வீட்டில் சும்மாதானே இருக்கிறாய். என் கல்லூரியில் நடக்கும் சொற்பொழிவுகளை வந்து கேள்" என்று அழைத்துப் போவார். இந்த விதத்தில் பலரக இலக்கியச் சொற்பொழிவுகளையும் மாணவர்களின் சொற்போர்களையும் கேட்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

ஒரு நாள் மாணவர்கள் விவாத நிகழ்ச்சிக்கு நடுவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று நபர்களில் ஒருவர் எதிர்பாராத காரணத்தால்

வர இயலாமற் போயிற்று. மாணவர் தலைவர் சௌந்தரராவை அன்று நடுவர்களில் ஒருவராகப் பணியாற்ற வேண்டினர்.

இவர் பயந்து நடுங்கி விட்டார். ஆனாலும் அந்த வேண்டுகோளைத் தட்ட இயலவில்லை. நடுவராக மேடையில் வந்து அமர்ந்தார். ஏதும் பேச வேண்டி யிருக்காது என்றுதான் நினைத்தார். ஆனால் அன்று முதல் தடவையாக ஒரு கூட்டத்தில் பேச வேண்டிய சூழ்நிலையும் உருவாயிற்று.

இப்போதுதான் கேட்க வேண்டாமே! இவர் பேசாத தெய்விக, இலக்கிய, கலை நிகழ்ச்சிகள் அநேகமாய்க் கிடையாதே!

சென்னைக் கல்லூரி மாணவர் தமிழ் மன்றத்தின் போஷகராகப் பல ஆண்டுகள் இருந்திருக்கிறார்.

பத்து ஆண்டுகளுக்கு முன் நகரக் கல்லூரி ஒன்றில் உள்ள அரங்கத்தை, தமிழ்ச் சொற்பொழிவுகளுக்கும் அரசியல்வாதிகளின் பேச்சுக்கும் அனுமதிப்பதில்லை என்ற வழக்கம் இருந்தது. இவர் போஷகராக உள்ள மாணவர் மன்றம், அந்த அரங்கத்தில் ஒரு தமிழ்ச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்ய விரும்பியது. அவர்களுக்கு உதவி செய்ய விரும்பிய இவர், கல்வி இலாகா உயர்அதிகாரிகளையே பிடிவாதத்துடன் அணுகினர்; அனுமதியும் பெற்றுவிட்டார். ''என்னங்க! நீங்களும் மாணவர்கள் மாதிரியே பிடிவாதம் பிடிக்கிறீர்கள்!'' என்று கேட்டுவிட்டுத்தான் அதிகாரிகள் அனுமதி வழங்கினர்!

உயர் பதவி வகிக்கும் ஒருவரது மனைவி என்ற அந்தஸ்து இருந்தும், இவருக்கு 'லேடீஸ் கிளப்'புகளுடன் தொடர்பு கிடையாது. பொழுது போகவில்லையே என்ற காரணத்தினால் இவர் எந்த சிநேகிதியையும் தேடிக் கிளம்புவதில்லை. அவசியமான காரணங்கள் இருந்தால்தான் வெளியே செல்வார்.

கலைத் துறையில் குறிப்பாக, சினிமாத் துறையில் இவருக்கு ஈடுபாடு உண்டு. தணிக்கைக் குழுவிலும் உறுப்பினராகப் பணியாற்றுகிறார். சினிமா விசிறிகள் சங்கத்திலும் பதவி வகித்திருக்கிறார். 'நடிகநடிகையரின் சொந்த வாழ்க்கையையும் ஆசாபாசங்களையும் அளவுகோலாகக் கொண்டு அவர்களுடைய கலைத் திறமையை அளவிடக் கூடாது. நாம் அவர்களுடைய நடிப்புத் திறமையைக் காணத்தான் போகிறோம். அதன் மதிப்பை மாத்திரம்தான் கணக்கிட வேண்டும்' என்று அழுத்தமாகச் சொல்லுவார்.

சொற்பொழிவுகளின்போது இவர் மிகவும் புகழ்ச்சியாகப் பேசுகிறார் என்ற குற்றச்சாட்டு இவர்மேல் உண்டு. ஆனால் இவரோ, 'ஒரு பாராட்டு விழா என்றால் சம்பந்தப்பட்டவரைப் புகழ்ந்து பேசுவதுதான் சம்பிரதாயம். அதை விட்டு அவரைப் பற்றி விமரிசனத்தில் இறங்க முடியுமா? இல்லை! அவர் குறைபாடுகளைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் அதற்கு மேடையமைத்துப் பேசத்தான் நம்மைக் கூப்பிடுவார்களா?' என்பார்.

ஒரு சமயம் காஞ்சிப் பெரியவர் சென்னையில் தங்கியிருந்தபோது எங்கள் தெரு வழியாகப் பவனி வந்தார். அவருடைய பாததூளி தம் வீட்டில், குறிப்பாக பூஜை அறையில் பட அருள் செய்ய வேண்டும் என்று வணங்கினர். அந்த மகானும் புன்சிரிப்புடன் வேண்டுகோளுக்கு இணங்கி உள்ளே வந்தார். அந்தக் கணத்தை இன்று நினைத்தாலும் சௌந்தரராவின் உடல் சிலிர்க்கும்.

அடக்கமான ஒரு குடும்பத் தலைவி. நான்கு செல்வங்களுக்குத் தாய். சட்டம் படித்த குமாரத்தியை வழக்கறிஞருக்கும், மருத்துவம் பயின்ற குமாரத்தியை டாக்டருக்கும் மணம் செய்து கொடுத்து நிறைவு கண்டவர்.

1960ம் ஆண்டில் நாங்கள் இருவருமே எங்கள் புது இல்லங்களுக்கு வந்து பக்கத்து வீட்டுக்காரர்களானோம். என் தந்தைக்கு இவர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர்களாக அமைந்ததில் ரொம்பத் திருப்தி. பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்கு என்மீது ஒரே அன்பு. என் பையனும் அவர் பையனும் ஒரே பள்ளி மாணவர்கள்.

இலக்கியச் சுவையில் ஈடுபடாதபோது அவருக்கு இயற்கையிலும் கவனம் திரும்பும். வீட்டுத் தோட்டத்தை அக்கறையுடன் கவனிக்க ஆரம்பித்து விடுவார்.


பேட்டி : கோமதி ஸ்வாமிநாதன்

கண்ணியம் மிக்க கள்வன்!

சிறைச்சாலையிலிருந்து கைதியைக் கோர்ட்டுக்கு அழைத்து வரும் வழியில், காவலர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு துலீப் தவே தப்பியோடி விட்டான்.

ஆத்திரமடைந்த மாஜிஸ்டிரேட், போலீஸ் அதிகாரி, காவலர்கள் ஆகியோரின் அஜாக்கிரதையை வன்மையாகக் கண்டித்துவிட்டு, அன்று விசாரிக்கப்பட வேண்டிய அந்தக் குற்றவாளியை ஆஜர் செய்யும்படி உத்தரவிட்டார். அவ்வமயம்......

தலைதெறிக்க ஓடோடியும் வந்து மாஜிஸ்டிரேட்டின் எதிரில் பணிவோடு கைகட்டி நின்றான், ஒருவன். ''ஐயா! நான்தான் துலீப் தவே! இந்த வழக்கில் விசாரிக்கப்பட வேண்டியவன்!'' என்று அவன் கூறியதும், அங்கு குழுமியிருந்தோர் பிரமித்தனர்.



அவனது விசித்திரமான செய்கையின் காரணத்தை வினவினார் மாஜிஸ்டிரேட். தவே கூறினான்: ''ஒரு சைக்கிளைத் திருடிய குற்றம் என்மீது சுமத்தப்பெற்றுள்ளது. நான் சைக்கிளைத் திருடியது உண்மை தான். குற்றத்தை கோர்ட்டார் எதிரில் ஒப்புக்கொண்டு தண்டனையை ஏற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வந்தேன். ஆனால், வரும் வழியில், தெரு முனையில் நின்று கொண்டிருந்த என் தகப்பனார் என்னைப் பார்த்துவிட்டார்! தம் மகனைக் காவலர் இருவர் கைவிலங்கு பூட்டி அழைத்துச் செல்லும் அவலக் காட்சியைக் கண்ணுற்றதும், வயது முதிர்ந்த என் தகப்பனார் நினைவிழந்து தெருவில் விழுந்து விட்டார். அவருக்கு மூர்ச்சை தெளிவிக்க அருகில் யாரும் இல்லாததால், நான் போலீசாரிடமிருந்து தந்திரமாகத் தப்பித்து, என் தகப்பனார் மூர்ச்சையடைந்து விழுந்து கிடந்த இடத்துக்கு ஓடினேன். அவரை ஒரு ரிக்ஷாவில் ஏற்றி ஆஸ்பத்திரியில் சேர்த்து அவருக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்துவிட்டு, இதோ ஓடோடி வந்திருக்கிறேன்!''

அவன் திருடன்தான்; ஆனால் நாணயமுள்ளவன்!

அனுப்பியவர் : வி. எஸ். ஸங்கடன்கர்.

தமிழில் : 'பாணன்.'

அரசு செல்வருக்கு அறுபது!

''**கா**மாக்ஷி ! காமாக்ஷி!''

அந்தண மூதாட்டி ஒருத்தி இப்படி அழைத்துக் கொண்டு வந்தது அந்த வட்டாரத்துக்கே ஆச்சரியமூட்டியது; அதோடு அங்குள்ள இளவட்டங்களின் ஆவலே, ஆர்வத்தைக் கிளறி விட்டது.

காமாக்ஷியை அழைத்ததில் அப்படியென்ன ஆச்சரியம் என்று அறிய வேண்டுமாயின், அந்த வட்டாரம் இன்னது என்பதை முதலில் அறிய வேண்டும்.

அது சிதம்பரம் ஸ்ரீ மீனுக்ஷி கல்லூரியே யாகும். 'காஞ்சி காமாக்ஷி, மதுரை மீனுக்ஷி' என்று பொதுவில் சேர்த்துப் பேசப்பட்டாலும் சிதம்பரம் ஸ்ரீ மீனுக்ஷி கல்லூரியில் காமாக்ஷிக்கு இடம் இருப்பதற்கில்லை — ஏனெனில் அது ஓர் ஆடவர் கல்லூரி !

மூதாட்டியின் அழைப்புக்கு ''இதோ வந்து விட்டேன்'' என்று ஓர் ஆண் குரல் பதில் கொடுத்தது. குரலுக்கு உரியவனாக, உருண்டை முகமும், சிறிய தோற்றமும், கருகருப்பு ஒளியும் கொண்ட வைத்திய சுப்பிரமணியன் வந்து நின்ருன்.

அவனுடன் உரையாடிவிட்டு அன்னை நகர்ந்தாளோ இல்லையோ மாணவர் கூட்டம் அவனைச் சுற்றி நெருக்கிக் கொண்டு, ''நீதான் காமாக்ஷியாடா?'' என்று ஏக ரகளை செய்யலாயிற்று. கலாசாலை கலாட்டாசாலை ஆயிற்று.

அடுத்த முறை அன்னை கலாசாலைக்கு வந்த போது வைத்திய சுப்பிரமணியன் அவளிடம் கடுகடுப்புடன் சொன்னுன்: ''இனிமேல் என்னைக் காமாக்ஷி என்று கூப்பிடக் கூடாது, அதுவும் காலேஜ் காம்பவுண்டுக்குள்.''

அம்மாவின் கண்களில் நீர் நிறைந்தது. '' அதெப்படியடா அவள் பெயரைச் சொல்லாதிருக்க முடியும்? அவள்தானே நம் குலதனம்! அதனுல்தானே அவளுடைய பிச்சையாகப் பிறக்கும் தலைச்சன் குழந்தை ஆணு பெண்ணு என்றுகூடப் பாராமல் அவள் பெயரை வைத்துக் கூப்பிடுகிரேம்?''

வைத்திய சுப்பிரமணியனுக்கும் கண் கசிந்தது; கருத்து கனிந்தது.

பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள இடையாற்று மங்கலக் கிராமத்தின் அதிதேவதையாக விளங்குபவள் காமாக்ஷியம்பிகை. ஆதி காலத்தில் காஞ்சியிலிருந்து ஸ்ரீ பகவத்பாத சங்கரரிடமிருந்தே ஒரு பக்தர் பெற்று வந்த ஸ்ரீ சக்ரரூபிணியாக அக்கிராமத்தில் காமாக்ஷி விளங்கி வந்தாள். காலக்கிரமத்தில் அவளது கோயிலின் பெருமை குன்றிவிட்டது. வழிபாடு மங்கி விட்டது. எனினும், இந்தக் குடும்பத்தில் மட்டும் அவளுடைய பக்தி மங்காத மங்கல விளக்காக இருந்தது.

நீண்ட நெடுங்காலத்துக்குப் பிறகு ஸ்ரீமான் வைத்திய சுப்பிரமணிய அய்யர் அவர்கள் அந்தக் காமாக்ஷி ஆலயம் இடிபாடு அடைந்தது பற்றி மனமிடிந்து ஸ்ரீ காமகோடி பெரியவாளிடம் முறையிட்டார்.

காஞ்சி முனிவர் என்ன அகக் கண்காட்சி பெற்ருரோ ?

''அந்தச் சக்கரத்தை அப்படியே பெயர்த்துக்கொண்டு வா!'' என்று ஆக்ஞையிட்டார்.

அவ்வாறே செய்தார் ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யர்.


ஸ்ரீ பெரியவாள் தாமே இன்னொரு சக்கரம் அநுக்கிரஹித்தார்.

''இந்த இரண்டு சக்கரங்களையும் சேர்த்துப் பிரதிஷ்டை செய்து, அஷ்டபந்தன சாந்து பூசி அப்படியே மூடிப் பிரதிஷ்டை செய்துவிடு'' என்று உத்தரவிட்டார்.

உத்தரவுப்படியே செய்யப்பட்டது. புனிதச் சக்கரங்கள் கண் பார்வைக்கு மறைந்து விட்டன. ஆனுல் அப்புறம்தான் அம்பாளுக்கு அதிர்ஷ்டச் சக்கரம் சுற்றத் தொடங்கியது! சக்கரங்களுக்கு மேல் தேவியின் பிரதிமை பிரதிஷ்டை ஆயிற்று. ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யர் அவர்கள் அவளுக்குச் சிறிய நேர்த்தியான கற்கோயிலை எழுப்பினுர்.

ஆயினும் அவர் உள்ளத்தில் ஒரு குறை. காஞ்சி முனிவரை அணுகினுர். ''அம்பாளுக்கு நல்லபடியாகக் கோயில் கட்டிவிட்டேன். ஆனுல் அந்தக் குக்கிராமத்தில் கோயில் தரிசனத்துக்கு வருவதற்குக்கூட

ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யர் அவர்களின் குடும்பம்.





காமகோடியின் கனிந்த பக்தர்

மனிதர்கள் இல்லையே!'' என்று வருத்தப் பட்டுக் கொண்டார்.

''இதற்கேன் கவலைப்படுகிறாய்?'' என்றார் ஸ்ரீ பெரியவாள். ''கூட்டம் கூட்டமாக ஜனங்கள் வந்தால்தானா? என்றைக்கோ ஒரு நாள் ஒரு சாது அங்கே வந்து தரிசனம் பண்ணுவார். அதுவே ஆலயம் நிர்மாணித்ததற்குப் பூர்த்தியான பலன், போ!'' என்றார்.

அப்படிப்பட்ட அடியாரின் அடியிணை என்றைக்குத் தம் ஆலயத்தில் படுமோ என்று அடிக்கடி எண்ணி ஏங்குவார் ஐயர்.

காலம் ஓடிற்று. 1963ஆம் வருடம் ஏப்ரல் மாதம். ஐயர் அலுவல் நிமித்தமாக வடநாட்டில் இருந்தார். அவருக்கு ஒரு தந்தி வந்தது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய மடத்திலிருந்து வந்திருந்த தந்தி அது.

''தஞ்சையிலிருந்து ராமேசுவரம் செல்லும் வழியில் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் இடையாற்று மங்கலம் காமாக்ஷி கோயிலுக்குச் செல்கிறார்'' என்பது அதன் வாசகம்.

ஐயரவர்கள் எவ்வளவு உவகை பெற்றிருப்பார் என்று சொல்லத் தேவையில்லை. தமது கோயிலுக்கு ஒரு சாது எழுந்தருளி அதன் நிர்மாணத்துக்குப் பூரண பலன் தருவார் என்று ஆசாரியர் கூறியதை எண்ணி எண்ணி நெகிழ்ந்தார் அவர்.

மீனாட்சி கல்லூரியில் 'காமாக்ஷி' படித்த காலத்திலிருந்து பல்லாண்டுகள் தாண்டி வந்து விட்டோமே! பழைய கதைக்குப் போவோம். அவர் கல்லூரியில் சேர்வதற்கும் முந்தைய கதையைப் பார்ப்போம்.

அப்போது வைத்திய சுப்பரமணியனுக்கு வயது பதின்மூன்று. பட்டுக்கோட்டையில் ஒரு பரபரப்பான சம்பவம் அவனையும், அவனது தோழர் இருவரையும் கவர்ந்தது.

தேசபக்தரும் தெய்வ பக்தருமான சுப்பிரமணிய சிவாவின் தலைமையில் அந்நியத் துணி பகிஷ்கரிப்பு நடைபெற்றது. அந்நியத் துணிகள் ஜ்வாலையில் பொசுங்கின. கதரை உடுத்தினர் காந்திய வாதிகள்.

வைத்திய சுப்பிரமணியனுக்கு அரசியல் போராட்டம் பற்றி ஏதும் தெரியாது. அதற்கு முன்பு அவனுக்கு அதில் தொடர்பு இல்லை; அதற்குப் பின்பும் இன்று வரை அவருக்கு அரசியலில் தொடர்பு இல்லை. ஆனால் அந்த ஒரு நிமிடத்தில் ஏதோ ஒரு வேகம் வந்தது.

'' இனி கதர்தான் உடுத்துவது '' என்று பிரதிக்ஞை பூண்டான் — அது நாளது வரை செயல்பட்டு வருகிறது.

அவனது தோழர் இருவரும் அதே போல் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர். இதில் விந்தை யாதெனில் அவர்கள் இருவரும் போலீஸ் அதிகாரிகளின் புதல்வர்கள்! அவர்களில் ஒருவர் இன்று திட்டக் கமிஷனில் அங்கம் வகிக்கும் ஸ்ரீ ஆர். வேங்கடராமன்.

மனத்தாலும் தனத்தாலும் இன்று பெரியவராக விளங்கும் ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய ஐயரவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் சாமானியமான ஒரு குடியில் பிறந்தவரே! பதினைந்தாம் வயதில் தந்தையை இழந்தார். அடைக்கத்தேவன் கிராமத்தைச் சேர்ந்த அம்மையின் குடும்பத்தோரால் பேணி வளர்க்கப்பட்டார். வைதிக சிம்மமாக விளங்கிய அல்லூர் கனபாடிகளின் நெருங்கிய பந்துவான தமது தாய்வழிப் பாட்டனாரிடமிருந்து ஆழ்ந்த வைதிக சிரத்தையை 'மாதுரார்ஜித'மாகப் பெற்றார். ஸ்ரீ மீனாட்சி கல்லூரியில் உபகாரச் சம்பளம் பெற்று பி. ஏ. பட்டம் பெற்றார்.

ரெவினியூ இலாகாவில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. இதே சமயத்தில் கல்லூரிப் பேராசிரியர் எம். ஏ. வகுப்பில் சேருமாறு அவரை வற்புறுத்தினார்; மாதம் முப்பது ரூபாய் உபகாரச் சம்பளம் வழங்குவதாகவும் கூறினார். ரெவினியூ இலாகா குமாஸ்தா சம்பளமும் இதே முப்பது ரூபாய்தான்.

எனவே, வேலைக்கு ராஜிநாமா கொடுத்துவிட்டு மேற்படிப்புக்கு வந்தார் வைத்திய சுப்பிரமணியர்.

அப்போதுதான் அவருக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது. அவர் மேற்படிப்பு மேற்கொள்ளுவதாயின் ஹாஸ்டலில் இருந்தாக வேண்டும் என்பது விதி. அவரது வீட்டு நிலைக்கும், ஆசார நெறிக்கும் இது ஒத்து வராததாக இருந்தது. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாக மேற்படிப்பை நம்பிச் சர்க்கார் உத்தியோகத்தையும் விட்டோமே என்று வருந்தினார்.

அப்போது ஸ்ரீ மீனாட்சி கல்லூரி, 'அண்ணாமலை சர்வகலாசாலை'யாகப் பரிணமித்து

விட்டது. அதன் துணை வேந்தர் ஸ்ரீ எஸ். ஈ. ரங்கநாதன், வைத்திய சுப்பிரமணியரிடம் பரிவும் பரிதாபமும் கொண்டார். சர்வகலாசாலையின் போஷகரும், செட்டிநாட்டரசருமான ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்தனுப்பினார். ராஜா ஸர் அவர்கள் அப்போது இம்பீரியல் பாங்கு கவர்னராக இருந்தார். வைத்திய சுப்பிரமணியனுக்கு அந்தப் பாங்கில் குமாஸ்தா வேலைக்குப் பரிந்துரைத்திருந்தார் ஸ்ரீ ரங்கநாதன்.

அவருக்குப் பாங்கு வேலை கிடைக்கவில்லை. அவரது மனப் பாங்குக்கு உரிய பெரிய அதிர்ஷ்டத்தைக் குல தேவதை காமாக்ஷி நிர்ணயித்திருந்தாள்.

அறிவொளியும், அடக்கமும், ஆசாரக் களையும் கலந்து நிற்கும் அந்த இளைஞரைக் கூர்ந்து கவனித்தார் ராஜா ஸர்.

''பாங்கில் வேலையில்லா விட்டால் போகட்டும். என்னிடம் வேலைக்கு வருகிறாயா?'' என்றார், மனமார.

''ஆஹா'' என்றார் வைத்திய சுப்பிரமணியரும், மனமார.

இந்த மனமார்ந்த தொடர்பு ஏற்பட்டது 1930 மே மாதத்தில். அன்றிலிருந்து முப்பத்தொன்பது வருடங்களாக நலியாது மெலியாது பொலிந்து வருகிறது இந்தத் தொடர்பு.

''அன்றிலிருந்து என் சொந்த சரிதம் ஏதுமே இல்லை. ராஜா ஸர் குடும்பத்தின் — ஸ்தாபனங்களின் — கதைதான் என் கதையும்'' என்கிறார் ஸ்ரீ ஐயர், இதய ஆழத்திலிருந்து.

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களிடம் குமாஸ்தாவாக வேலையில் சேர்ந்த அய்யர் தமது திறமையாலும், விசுவாசத்தாலும் அவரது அன்பிலும் மதிப்பிலும் ஓங்கினார்; ஸ்தானமும் ஓங்கியது. செட்டிநாட்டரசரின் நிறுவனங்கள் அனைத்துக்கும், சட்ட சம்பந்தமான வழக்குகள் அனைத்துக்கும், எண்ணிறந்த தரும ஸ்தாபனங்கள் அனைத்துக்கும் வைத்திய சுப்பிரமணிய அய்யரே முக்கியமான பொறுப்பு ஏற்றார். அவரது அந்தரங்கக் காரியதரிசியாகி அந்தரங்கசுத்தமுடன் பணியாற்றினார்.

ராஜா ஸர் அவர்கள் அய்யரை முதன் முறை பர்மாவுக்கு அழைத்தபோது, அய்யர் தயங்கினார். அதிபரின் அன்புக்கும், இல்லத்தினரின் ஆசாரத்துக்கும் உரசல் ஏற்பட்டுவிடப் போகிறதே என்று கலக்கம் அடைந்தார். பிறகு மனத்தில் ஓர் உறுதி செய்து கொண்டார்.

கல்கத்தாவுக்குச் செல்வதாக வீட்டில் கூறினார். வெளியிடங்களில் உண்ணாமல் இருப்பதற்காக நிறைய சத்துமா இடித்து எடுத்துக் கொண்டார். பர்மாப் பிரயாணம் முழுதும் சத்துமாவில் தயிரைப் பிசைந்து சாப்பிட்டே காலம் கடத்தினார்!

ஒரு நாள்கூட விடுமுறை எடுத்துக் கொள்ளாமல் பதினெட்டாண்டுகள் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குப் பணி புரிந்த



சிருங்கேரியின் சீரிய சீடர்

ஸ்ரீ அய்யர் அவர்களுக்குச் செட்டியாரின் மறைவு மகத்தான துக்க சம்பவமாயிற்று. மனத்தில் வெற்றிடம் தட்டிவிட்டது.

''நான் விடைபெறுகிறேன்'' என்றார் அய்யர், புதிய செட்டிநாட்டரசரும், அண்ணாமலைச் செட்டியாரின் மூத்த புதல்வருமாகிய முத்தையா செட்டியார் அவர்களிடம்.

''நீங்கள் ஏன் விடைபெற வேண்டும்? நீங்கள் விலகுவதானால் நானும் விலகிவிட வேண்டியதுதான்'' என்றார் முத்தையா செட்டியார்.

அடுத்த தலைமுறையிலும் அன்புத் தொடர்பு நீடித்தது; கடந்த இருபத்தொரு ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது.

செட்டி நாட்டரசரின் ஸ்தாபனங்களைப் போலவே மற்றொன்றுடனும் பின்னிப் பிணைந்துவிட்டவர் ஸ்ரீ வைத்தியசுப்பிரமணிய அய்யர் அவர்கள். அதுதான் வைதிக தர்மம் என்பது. நோயுற்ற வைதிகத்துக்குத் தெம்பும் திடமும் ஊட்டும் வைத்தியர்களில் முக்கியமான ஒருவர் ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யரவர்கள். 'நாளைக்கு வாருங்கள்' என்று கூறாமல், அன்று கையில் என்ன இருக்கிறதோ அதை அப்படியே தானம் தருகிற வள்ளல் அவர். அவரது வள்ளன்மை எந்த நல்ல காரியத்திலும் வெளிப்படுமெனினும், வைதிகக் காரியத்தில் உதவினால் அவருக்கு இதயமே நிரம்பி விடுகிறது.

இவரது வேத தர்மப் பணிக்கு பிரத்தியட்ச உருவமே சென்னை ராஜா அண்ணாமலைபுரத்



''மணி'யைக் கரெக்டா சொல்லு!''
''சரியாக இருபத்தொன்பது ரூபா, தொண்ணூற்றெட்டு பைசா!''

தில் அமைந்துள்ள ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸநாதன தர்ம வித்யா ஸமிதி. அநுதினமும் சத்கதா காலக்ஷேபங்களும், வேத சாஸ்திர போதனைகளும் நடைபெற்று வரும் இப்புனித மன்றமும், இதன் மைய கேந்திரமான விநாயகர் — சாரதாம்பிகை — ஆதிசங்கரர் சந்நிதிகளும் சென்னையின் முக்கியமான ஆஸ்திகப் பண்ணைகளில் இடம் பெறும்.

சமிதி அமைந்துள்ள விரிந்த மனைக்கட்டை அய்யரவர்கள் நன்கொடையாக அளித்தது அவரது வாழ்விலே ஒரு முக்கியமான சம்பவம். ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி சங்கராசாரிய ஸ்வாமிகள் 1965 இறுதியில் சென்னைக்கு வருகை தந்திருந்தபோது அவர்களின் திருமுன்னர் இந்த மனைக்கட்டில்தான் கோலாகலமான ஸஹஸ்ர சண்டி — அதிருத்ரம் ஹோமங்கள் நடைபெற்றன. தீபாவளியன்று அதிருத்ரம் நிறைவு பெற்றது. அன்றே ஸ்ரீ சிருங்கேரி ஆசாரியர்களின் ஜயந்தி தினமும் ஆகும். அந்தத் திருவிழாவுக்கு அப்போது சென்னை கவர்னராக இருந்த மைசூர் மன்னர் விஜயம் செய்தார். மன்னருக்குப் பூரண கும்பம் கொடுத்து மேடைக்கு அழைத்து வந்து, வரவேற்புரை நிகழ்த்தத் தொடங்கினார், ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யரவர்கள்.

அவர் வெறும் வரவேற்புரைதான் நிகழ்த்தத் தொடங்கினார். ஆனால் அவருக்குள் ஏதோ ஓர் அருட் சக்தி புகுந்து கொண்டு ஓர் அற்புதமான அறிவிப்பைச் செய்யுமாறு உந்தியது. ''புண்ணிய காரியங்கள் பல நடைபெற்ற இந்த மனைக்கட்டில் தொடர்ந்து ஆஸ்திக காரியங்கள் நடைபெற வேண்டும். அதற்கே இம்மனையைக் காணிக்கையாக அளிக்கிறேன்'' என்று அவர் கூறிய போது கூடியிருந்த ஏராளமான மக்களும் அவரது தாராளத்தை வியந்து வாழ்த்தினர். பிற்பாடு ஸ்ரீ சிருங்கேரி ஆசாரியாள் நிறைந்த மனத்துடன் அவரிடம் சொன்னார்: ''இந்த மனையை விலைக்கு வாங்கி இங்கு நிரந்தரமாக ஓர் ஆஸ்திக நிறுவனம் ஏற்படுத்தலாமா என்று எண்ணினேன். மனையின் விலை லட்ச ரூபாய்க்கு மேல் போகும் என்று தெரிந்தது. உங்களிடம் சொன்னால் அப்படியே நன்கொடையாகத் தந்து விடுவீர்களே என்பதால்தான் சொல்லாமல் இருந்தேன். ஆனால் நீங்களாக இதைச் செய்து விட்டீர்கள்!''

வைத்திய சுப்பிரமணிய அய்யரின் சகதர்மிணி ஸ்ரீமதி நாராயணி அம்மாள் அவரிடம் குறைப்பட்டுக் கொண்டார்கள்: ''மனையை நன்கொடை தருவதாக ஏன் என்னிடம் முன்னமே சொல்லவில்லை? நான் என்ன, கூடாது என்று சொல்லியிருப்பேனா? நீங்கள் மேடையில் அறிவிக்கும் போதுதான் எனக்கு விஷயமே தெரிய வந்தது என்று சொன்னால் யாரும் நம்பமாட்டேன் என்கிறார்கள்.''

மனை தானம் பற்றி மனைவி இப்படிச் சொல்ல, அய்யர் சிரித்து விட்டுச் சொன்னார்: ''உனக்கு மட்டும் என்ன? எனக்கே மேடையேறி அறிவிப்புச் செய்யும் போது தான் அவ்விஷயம் தெரியும்.''

நாராயணி அம்மாளுக்குத் தெரியாமல் செய்த தர்மம் இருக்கட்டும்; அந்த அம்மாள் பெயரிலேயே ஒரு பெரிய தர்மம் நடைபெற்று வருகிறது. அண்ணாமலைபுரத்திலுள்ள 'நாராயணி அம்மாள் கலியாண மண்டபம்' தான் அது.

ஸ்ரீ காஞ்சி ஆசாரியாளின் திரு உள்ளப்படி கலியாண மண்டபப் பணியை மேற்கொண்டார் அய்யர்.

மண்டபம் கட்டியாகி விட்டது.

அன்று அதிகாலையில் கொட்டுகிற மழையில் எதிர்பாராமல் அய்யரின் வீட்டு வாசலுக்கே வந்து விட்டார் ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு.

''என்றாவது ஒரு நாள் பெரியவாள் பாதம் மண்டபத்தில் பட வேண்டும்'' என்று விக்ஞாபித்தார் அய்யர்.

''என்றாவது என்ன? இப்போதே போவோம்'' என்று புறப்பட்டு விட்டார் ஸ்ரீ பெரியவாள்.

''அந்த வேளையில் மண்டபத்தில் பெரியவாளுக்குப் பூரண கும்பம் கொடுக்கக்கூட யாரும் இல்லை. நான் பூட்டை உடைத்தாக்கும் பெரியவாளை உள்ளே அழைத்துச் சென்றேன்! அவர்கள் வந்த முகூர்த்தம் மண்டபத்தில் எப்போதும் சுபமுகூர்த்தங்கள் தான்'' என்று பூரிப்புடன் தெரிவிக்கிறார் ஸ்ரீ அய்யர்.

[கலியாண மண்டபம் எழுப்பிய ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யரவர்களும், கலியாண மண்டபத்துக்குப் பெயர் தந்த ஸ்ரீமதி நாராயணி அம்மாள் அவர்களும் செப்டம்பர் 11ல் அவர்களது அறுபதாம் கலியாணம் நிகழவிருப்பதையொட்டி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளைத் தரிசித்து ஆசி பெறச் சென்றனர். அப்போது ''வாஞ்சிதாதிகதான சிந்தாமணி'' என்ற விருது வழங்கி ஆசாரியாள் ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யரை ஆசீர்வதித்தார்கள். மணிவிழாவுக்குப் பாத்திரமாக விளங்கும் 'மணமகனா'ரின் உருவத்தை இவ்விதழ் அட்டையில் மகிழ்ச்சியுடன் பிரசுரித்து, அவருக்கு அன்னைத் தெய்வத்தின் அருட்செல்வத்தை எந்நாளும் வேண்டுகிறோம்.

— 'ராகபதி'

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும், புதுமையுடனும் இருங்கள்



அன்றலர்ந்த மலர்களின் புதுமையுடனும் சுகந்தத்துடனும்கூடிய காஷ்மீர் பொக்கே டால்க் உங்களைச் சூழ்ந்து பரவி இருக்கட்டும்... உங்களைச் சுற்றி அதன் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தையும், வசீகரிக்கும் நறுமணத்தையும் உணர்ந்து அனுபவியுங்கள். பலமணிகளுக்குப் பிறகும், காஷ்மீர் பொக்கே டால்க்கின் குன்றாத நறுமணமும், புதுமையும், மலர்க்கொத்துகள் போன்று உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள்.

காஷ்மீர் பொக்கே ஒரு உன்னதமான அழகுசாதன டால்க் மட்டுமல்ல, குழந்தைக்கும் ஏற்ற அற்புத டால்க். அது இருவருமே உபயோகிக்கக்கூடிய சௌகரியமான ஒரு பவுடர்!





காஷ்மீர் பொக்கே

ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ள டால்கம் பவுடர்

கால்கேட்டின் தரமான தயாரிப்பு

ராமாயணம்


ராஜாஜி

சுமித்திரை கௌசல்யைக்கு மேலும் கூறுவாள்: ''லக்ஷ்மணனும் அவனுடன் சென்றானே என்று என் மகனைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். வனவாசத்தின் கஷ்டங்களை நன்றாகத் தெரிந்தும் ஜானகி உன் மகனுடன் சென்றிருக்கிறாளே! ராமனுடைய கீர்த்தி மேலோங்கிப் பிரகாசித்து உலகமெல்லாம் ஒளி வீசும். நாம் துக்கப்படலாகாது. மகாத்மாவான உன் மகனுடைய பரிசுத்தமும் உத்தம குணங்களும் அவனுக்குப் பூரண கவசமும் காப்புமாகும். சூரியனுடைய வெய்யில் அவன் உடல்மேல் பட்டாலும் அது சுடாது. காற்றும் அவன் மேல் குளிர்ந்து வீசும். இரவில் தூங்கும்போது அவனுடைய புண்ணிய தேகத்தைச் சந்திரனுடைய கிரணங்கள் பெற்ற குழந்தையைத் தகப்பன் தழுவி ஆலிங்கனம் செய்வது போல் அவன் மேல் வீசிக் காப்பாற்றும். நம்முடைய வீரராகவனைப் பற்றி நீ கவலைப்படாதே. எந்தப் பகைவனும் அவனை எதிர்த்து உயிருடன் மீள முடியாது. நம்முடைய ராமன் சர்வ கல்யாண குணங்களும் பொருந்தியவன். சூரன். அவன் நிச்சயம் திரும்பி வந்து அயோத்தியாபதியாகிச் சிம்மாசனம் ஏறுவான். லோகநாதனே ராமன். உன் மருமகள் சீதை அவனுடன் சென்றிருக்கிறாள். சீதை வேறு. லக்ஷ்மி வேறல்ல. திரும்பி வந்ததும் பூதேவியையும் ராமன் அடைவான். நீ சந்தேகப்படாதே. அவன் வனம் போவதைக் கண்ணுற்ற நகரத்து ஜனங்களுடைய அநுதாபத்தைப் பார்த்தாய். என் வீர மகன் வில்லும் கத்தியும் கையில் தாங்கி அவனைக் காக்கவே கூடப் போயிருக்கிறான். ராமனுக்கு ஒரு குறையோ பயமோ கிடையாது. செய்த பிரதிக்ஞையை அவன் முடித்து விட்டு அவன் திரும்பி வருவதை உன் கண்ணாலேயே பார்ப்பாய். சோகத்தை விடு. நான் சொல்வது சத்தியம். சந்திரனைப் போல் பூரண கலையுடன் திரும்பி வந்து உன் பாதங்களைத் தொட்டு வணங்கி நிற்பதைப் பார்ப்பாய். அப்போது உன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகும். என் அன்புக்குரிய கௌசல்யே! துக்கம் வேண்டாம். மூவரும் திரும்பி வருவார்கள். துக்கப்படும் அந்தப்புரத்து ஜனங்களுக்கு ஆறுதலும் தைரியமும் நீ சொல்ல வேண்டும். அப்படியிருக்க நீயே மனமுடைந்து நிற்கிறாய். வேண்டாம். இந்த உலகத்தில் ராமனைப் போல் தருமத்தில் உறுதியாய் நிற்பவன் வேறு யார்? அதைப் பற்றி நாம் துக்கப்படலாமா? நீ பெருமைப்பட வேண்டும்.''

இவ்வாறு சுமித்திரை தேற்றினாள். சுமித்திரா தேவியின் தைரியமான வார்த்தைகளைக் கேட்டுக் கௌசல்யா தேவியின் துக்கம் ஓரளவு அகன்றது.

* * *

ராமனுடைய தேருடன் கூடவே நகரத்து ஜனங்கள் பெருங் கூட்டமாகத் தொடர்ந்து சென்றார்கள்.



"வனம் போக வேண்டாம். திரும்புங்கள்" என்று ரதம் போவதைத் தடுத்துக் கொண்டு ஓடினார்கள்.

"தகப்பனாரைச் சத்தியசந்தராகச் செய்வதற்காக நான் வனம் செல்கிறேன். இதற்கு நீங்கள் துக்கப்படலாகாது. என்னை நிறுத்த வேண்டாம்" என்று எவ்வளவு கேட்டுக் கொண்டும் அவர்கள் விடவில்லை. கூடவே சென்றார்கள். ராமன் பேரில் அவர்களுக்கிருந்த அளவற்ற பிரியத்தினால் என்ன சொல்லியும், "வனம் போக வேண்டாம்! வனம் போக வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டு ரதத்தோடு ஓடினார்கள்.

ராமன் ரதத்தை நிறுத்தி அன்பு நிறைந்த பார்வையுடன் அவர்களுக்குச் சொன்னான்:

"அயோத்தி நகரத்து மக்களே! என்மேல் நீங்கள் வைத்திருக்கும் பிரியமும் கௌரவமும் நான் அறிவேன். அதையெல்லாம் நீங்கள் இனி பரதன் மேல் செலுத்த வேண்டும். அதுவே எனக்கும் திருப்தி தரும். சீலமும் சகல கல்யாண குணங்களும் பொருந்தியவன் பரதன். அவன் மனம் திருப்தியடையுமாறு நடந்து கொள்ளுங்கள். அவனுக்குச் செய்ய வேண்டியதையெல்லாம் சரியாகச் செய்யுங்கள். வயதில் சிறியவனாக இருந்தாலும் ஞானத்தில் முதிர்ந்தவன் அவன். வீரமும் மென்மையும் இரண்டும் கலந்த சிரேஷ்டமான உள்ளம் பெற்றவன். உங்களை க்ஷேமமாகக் காப்பாற்றும் சக்தி அவனுக்கு உண்டு. அவனே உங்கள் நாதன். தகப்பன் சொல்லைச் சத்தியவாக்காகச் செய்வதற்கு நான் வனம் போகிறேன். பரதனை யுவராஜனாக அரசன் நியமித்திருக்கிறார். அவன் அந்தப் பதவிக்குத் தகுந்த குணங்களைப் பெற்றவன். மகாராஜா விதித்தபடி நானும் நீங்களும் எல்லோரும் நடக்க வேண்டும். தந்தைக்கு உண்டாகும் துயரத்தைப் போக்க நீங்கள் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும்."

இப்படி ராமன் அவர்களுக்குப் புத்திமதியும் நல்ல வார்த்தையும் சொன்னான். ஆனால், அவர்



களோ, ராமனுடைய வார்த்தைகளில் நிறைந்திருந்த தருமமும் நீதியும் அன்பும் கண்டு முன்னை விட அதிகமாகவே அவனை விரும்பினார்கள்.

சிரேஷ்ட குணம் பொருந்தியவர்களும் வயதில் மிக முதிர்ந்தவர்களுமான பிராமணர்கள் சிலர் வேகமாகப் போகும் தேரைப் பார்த்து, "ஹே, குதிரைகாள்! ஏன் எங்கள் ராமனை வனம் கொண்டு போகிறீர்கள்? வேண்டாம். குதிரைகளுக்கு ஓசைப் புலன் மிகக் கூர்மையானது என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். நாங்கள் சொல்வதைக் காதில் வாங்கி நின்று ராமனைத் திருப்பிக் கொண்டு வந்து எங்களிடம் விட்டு விடுவீர்களாக!" என்று புலம்பினார்கள்.

இப்படி வயோதிக அந்தணர்கள் இறைஞ்சுவதைக் கண்டு ராமன் தேரை நிறுத்தினான். மூவரும் தேரிலிருந்து இறங்கிக் காலால் நடந்து சென்றார்கள்.

பாமர ஜனங்களும் நகரத்து முக்கியஸ்தர்களும், ஞானமும் வயதும் விரத நியமங்களால் சித்தியும் அடைந்த அந்தணர்களும் அயோத்தியில் பறக்கும் பறவைகளும் கூட ராமனை வனம் போக வேண்டாம் என்று வற்புறுத்தி வருவதைப் பார்த்து தமஸா நதி குறுக்கே வந்து தடுத்தது போல் தோன்றியது. தமஸா நதிக் கரையில் தேர் நின்றது. சுமந்திரன் குதிரைகளை அவிழ்த்துத் தண்ணீர் காட்டிப் புல் மேய விட்டான்.

"லக்ஷ்மணா! இதுவே நம்முடைய வனவாசத்தின் முதல் ராத்திரி. இந்தப் புண்ணிய நதிக் கரையில் இன்று தங்குவோம். வனவாசம் ஒன்றும் கஷ்டம் இல்லை. பார், வனத்தில் உள்ள பட்சிகளும், மிருகங்களும், மரங்களும் கூட நம்மிடம் அனுதாபம் காட்டுவது போல் சப்தமும் காட்சியும் அளிக்கின்றன. ஆனால் அயோத்தியையில் நம்முடைய பெற்றோர்களின் துயரத்தை நினைத்தால் கஷ்டமாகத்தான் இருக்கிறது. பரதனுடைய குணங்களை நினைத்துத் தைரியம் அடைகிறேன். அவன் நம்முடைய பெற்றோர்களைப் பிரியமாகக் கவனித்துக் கொள்ளுவான். சந்தேகமில்லை. சுமந்திரரே! குதிரைகளுக்கு வேண்டியதைச் செய்யவும்" என்றான் ராமன்.

பிறகு நதியில் மாலை வந்தனங்கள் செய்துவிட்டு ராமன், "இன்று உபவாசம் இருக்கலாம். இது நம்முடைய வனவாச ஆரம்ப ராத்திரி. லக்ஷ்மணா! நீ என்னுடன் இருக்கிறபடியால் எனக்கொரு கவலையும் இல்லாமலிருக்கிறது" என்றான்.

ராமனுக்கும் சீதைக்கும் படுப்பதற்குப் புல் பரப்பி அமைத்துக் கொடுத்து லக்ஷ்மணன் சுமந்திரனுடன் பேசிக் கொண்டே இரவைக் கழித்தான்; தூங்கவில்லை.


அதிகாலையில் விடிவதற்கு முன்னால் ராமன் எழுந்திருந்து சுமந்திரனைப் பார்த்து, "நகரத்து ஜனங்கள் ஆற்றங்கரையில் எங்கெங்கோ படுத்து ஓடி வந்த களைப்பினால் நன்றாகத் தூங்குகிறார்கள். எங்கள் பேரில் இவர்கள் வைத்திருக்கும் அன்பைப் பார்த்து எனக்குத் துக்கமாக இருக்கிறது. எப்படியாவது என்னை நிர்ப்பந்தித்துத் திருப்பி அழைத்துப் போவதே இவர்கள் எண்ணம். ஆகையால் நாம் இப்போதே கிளம்புவோம்" என்றான்.

குதிரைகளைப் பூட்டி மெள்ள நதியைத் தாண்டி அக்கரை சேர்ந்தார்கள். அங்கே நின்று ராமன் சுமந்திரனுக்குச் சொன்னான்: "தேரை மறுபடியும் ஜனங்கள் தூங்கும் அக்கரைக்குச் செலுத்தி அங்கிருந்து அயோத்தியை நோக்கிக் கொஞ்ச தூரம் ஓட்டிப் பிறகு தேரைத் திருப்பி இவ்விடம் ஓட்டி வந்தால், ஜனங்கள் விழிப்பதற்கு முன் நாம் ஏறிச் செல்வோம். தேரின் சுவடு பார்த்து நாம் நகரத்துக்குத் திரும்பிப் போய் விட்டதாக எண்ணி அவர்களும் ஊர் திரும்புவார்கள். இல்லாவிடில் இந்த ஜனக் கூட்டம் நம்மை விடாமல் பின் தொடர்ந்து வரும்" என்றான்.

சுமந்திரனும் அப்படியே செய்தான். தேர் திரும்பியதும் மூவரும் ஏறித் தெற்கு முகமாகச் சென்றார்கள். **(தொடரும்)**

புதுக்கோட்டையில் புண்ணியப் பணி

புதுக்கோட்டையில் உள்ள புராதனமான வரதராஜஸ்வாமி ஆலயத்தைப் புதுப்பிக்க நன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவன் பெயரே வரதன். கேட்கும் வரம் யாவும் தருபவன். அப்படிப்பட்டவன் பக்தர்களைப் பெருமைப்படுத்துவதற்காக அவர்களது திரவிய கைங்கரியத்தைப் பெறுகிறான். இப்பணியில் ஈடுபட்டு வரதனின் அருளைப் பெற விரும்புவோர் பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: திரு பி. வி. கோவிந்தராஜுலு நாயுடு, திருப்பணிக் குழுத் தலைவர், ராஜாமணி டிரான்ஸ்போர்ட், புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம்.



நெருங்கி உறவாடும்,




நெஞ்சைக் கவரும் நறுமணமுள்ள


லக்மே டால்கம்

உங்கள் இதயம் கவரும் நறுமணத்தை மணிக் கணக்கில் வீசிக்கொண்டிருக்கும் டால்கம்—நெஞ்சை விட்டகலாத லக்மே! அந்த இணையற்ற இன்பத்தை அனுபவிக்கத் தாமதமேன்? இன்றே உங்கள் மேனியின் மீது இம்மணம் கமழும் லக்மே டால்கம் தூவுங்கள். அது பட்டுப்போன்ற மென்மையானது; சேர்த்தியானது; இணைபிரியாதது. ஒரு நாளை 'லக்மீ' வாசமாகத் துவக்க, இதை விட இன்பம் தருவது வேறென்ன இருக்கப் போகிறது?

இது ஐவகை மணம் வீசி, உங்களை அன்புடன் அணைய வருகிறது. லேவெண்டர், வெட்டிவேர், பீர்வாண், சந்தனம் ஆகிய நான்கும், மீடியம் மற்றும் எகானமி சைஸ்களிலே வருகின்றன. ஐந்தாவதான ஃப்ளோரல் பீஸ்ட் பெரிய ஃபேமிலி சைஸில் வருகிறது. எல்லாமே நீங்கள் எளிதில் வாங்கக்கூடிய விலையில், எல்லாமே இன்ப மணம்; எல்லாமே இன்ப மயம்!



ASP/L-66



பிரபாகரும் கோபியும் பேசிக் கொண்டிருப்பதைத் திரை மறைவில் நின்று கேட்ட சோனியா வந்த காரியத்தை மறந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அப்பால் நகர்ந்தாள். சில தினங்களில் செவ்வாய் கிரக விஞ்ஞானிகள் பச்சைக் கிரகத்தின் வாயு மண்டல அழுத்தத்தைத் தாங்கக் கூடிய உலோகக் கலவையைக் கண்டு பிடிப்பதில் வெற்றி கண்டனர். பிரபாகரும் கோபியும் பச்சைக் கிரகப் பயணத்துக்குப் பயிற்சி பெற்றனர்.
அம்புலிக்கு அப்பால்... (23)
கதை: புஷ்பா
படம்: விஜயா
சுழலும் இயந்திரம் ஒன்று அவர்களை விநாடிக்கு இருமுறை தட்டாமாலை சுற்றியது.
விசேஷ ரசாயனக் கலவையாலான விண்வெளி உடை அணிந்து எடையற்ற நிலையில் மிதந்து பழகினர்.
புதிய உலோகக் கலவையிலான ராக்கெட் தயாரானது. பலவாறான பயிற்சிகள் முடிந்த மறு நாள்....
சோனியா! நாங்கள் கிளம்ப வேண்டிய தருணம் வந்து விட்டது விடை கொடு!
பிரபாகர், கோபி! எங்களது விஞ்ஞானிகள் உங்களுடைய தைரியத்துக்கும் திறமைக்கும் உதவலாம். ஆனால் அசட்டுத் துணிச்சலுக்கு உதவ முடியாது! திட்டமிட்டதற்கு மாறாக எதையும் செய்யாதீர்கள்!
அதை மறக்க மாட்டேன் சோனியா! உனக்கு எப்படி நன்றி சொல்வேன்!
நீங்கள் பத்திரமாகத் திரும்பி வருவதே எனக்குச் செலுத்த வேண்டிய நன்றி கூட, கோபி!
சற்று நேரத்தில் கோபியும் பிரபாகரும் ஏறியிருந்த ராக்கெட் கிளம்பி விண்வெளிக்கு விரைந்தது.



பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !



நவ-தால்


நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற் சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப் பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற் கேற்ற முறையில் செய்யப் பட்டது நவ-தால். பித்தளை. எஃகினுலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்கு கிறது. தயாரிப்பவர்கள் : கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்ப தில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடைய வர்கள்.

3 சைஸ்கள் :
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் எப்போதும் நங்கூரம் மார்க் பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்

பொன்னியின் செல்வன்

அமரர்
கல்கி



அத்தியாயம் நாற்பத்தெட்டு

'கலபதி'யின் மரணம்

குதிரைமீது வந்த பெண்மணி யார் என்பது இளவரசருக்கு உடனே தெரிந்து போயிற்று. குதிரை நின்ற இடத்தை நோக்கி அவர் விரைந்து சென்றார். அவருடன் பூங்குழலியும் போனாள். மற்றவர்களும் சற்றுத் தூரத்தில் தயங்கித் தயங்கிப் போனார்கள்.

ஊமை ராணி அதற்குள் குதிரையிலிருந்து இறங்கி விட்டாள். பின்னால் கூட்டமாக வந்தவர்களைச் சற்றுக் கவலையுடன் பார்த்து விட்டுப் பூங்குழலியிடம் சமிக்ஞை பாஷையில் ஏதோ சொன்னாள். "பெரியம்மா காட்டில் ஏதோ அதிசயத்தைப் பார்த்திருக்கிறாள். அந்த இடத்துக்கு நம்மை வரும்படி அழைக்கிறாள்!" என்றாள். இளவரசர் அக்கணமே போவதென்று தீர்மானித்து விட்டார். மற்றவர்களும் தம்முடன் வரலாமா என்று கேட்கச் சொன்னார். ஊமை ராணி சிறிது யோசித்து விட்டு, சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

போகும்போது எல்லோரும் அவள் ஏறி வந்த குதிரையைப் பற்றியே பேசிக் கொண்டு போனார்கள். அது அரபு நாட்டிலிருந்து வந்த அற்புதமான உயர் ஜாதிக் குதிரை. இந்த மூதாட்டிக்கு எப்படிக் கிடைத்தது? சமீப காலத்தில் இந்தப் பிரதேசத்தில் சைன்யம் எதுவும் வந்து இறங்கவில்லை; போர் ஒன்றும் நடக்கவில்லை. அப்படியிருக்கும்போது இக்குதிரை இந்தப் பெண்மணிக்கு எப்படிக் கிடைத்திருக்க முடியும்?

தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தின் அருகில் சோழ நாட்டுக் கப்பல் ஒன்று கரை தட்டிப் புதைந்திருந்ததைப் பார்த்தோம். அங்கிருந்து சிறிது தூரம் வரையில் இலங்கைத் தீவின் கரை தென் கிழக்குத் திசையாக வளைந்து நெளிந்து



சென்றது. அடிக்கடி கடல்நீர் பூமிக்குள் புகுந்து சிறிய நீர்நிலைகளையும் பெரிய நீர் நிலைகளையும் உண்டாக்கியிருந்தது. இத்தகைய வளைகுடா ஒன்றுக்குள்ளிருந்துதான் வந்தியத்தேவன் முதலியவர்கள் அன்று காலையில் பார்த்த கப்பல் வெளியே வந்து கடலில் சென்றது.

இப்போது ஊமை ராணி தென் கிழக்குத் திசையிலே அவர்களை அழைத்துக் கொண்டு சென்றாள். அடர்ந்த காட்டுக்குள்ளே புகுந்து சென்றாள். போகப் போக, இளவரசரின் ஆர்வம் அதிகமாயிற்று. ஏதோ ஒரு முக்கியமான சம்பவம் நடந்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் நம்மை இம் மூதாட்டி அழைத்துப் போக மாட்டாள் என்று எண்ணினார். திடீரென்று அச்சம்பவம் அவர்களுடைய கண் முன்னால் வந்து நின்றது!

காட்டில் சிறிது இடைவெளி ஏற்பட்டதும் நீர் நிலை ஒன்று தெரிந்தது. அதன் கரையில் மனிதர்கள் சிலர் இறந்து கிடந்தார்கள். பிணங்களின் நாற்றத்தோடு காய்ந்து போன மனித இரத்தத்தின் நாற்றமும் கலந்து வந்தது. எத்தனையோ போர்க்களங்களின் அநுபவம் பெற்ற அந்த மனிதர்களுக்கு உயிரில்லா மனித உடல்களும் காய்ந்த இரத்தமும் புதிய அநுபவங்கள் அல்ல. எனினும், ஏதோ அதிசயமான, மர்ம பயங்கரமான காரியம் இங்கே நடந்திருக்கிறது என்ற எண்ணம் எல்லாருடைய மனத்திலும் ஆர்வத்தோடு அருவருப்பையும் உண்டாக்கியது.

அருகிலே சென்று பார்த்தால் உயிரற்றுக் கிடந்த உடல்கள் எல்லாம் தமிழ்நாட்டு மாலுமிகளின் உடல்கள் என்று தெரிய வந்தது. "சீக்கிரம்! சீக்கிரம்! யாருக்காவது இன்னும் உயிர் இருக்கிறதா என்று பாருங்கள்!" என இளவரசர் கூறினார். அவருடன் வந்தவர்கள் ஒவ்வோர் உடலுக்கு அருகிலும் சென்று பரிசோதிக்கத் தொடங்கினார்கள்.

இளவரசரை ஊமை ராணி மறுபடியும் கையினால் சமிக்ஞை செய்து அழைத்துப் போனாள். உடல்கள் கிடந்த இடத்துக்குச் சிறிது தூரத்துக்கப்பால் இருந்த மரத்தடிக்கு அழைத்துப் போனாள். அந்த மரத்தடியில் ஒரு கோர ஸ்வரூபம் சாய்ந்து படுத்திருந்தது. படுத்திருந்தவன் மனிதன்தான். ஆனால் அதை நம்புவது கஷ்டமாயிருந்தது. உடம்பெல்லாம் காயங்கள். மண்டையில் பட்டிருந்த காயங்களிலிருந்து இரத்தம் முகத்தில் வழிந்து மிகப் பயங்கரமாகச் செய்திருந்தது. ஒவ்வொரு கணமும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அம்மனிதனுடைய முகத்தில் இளவரசரைக் கண்டதும் மலர்ச்சியின் சிறிய அறிகுறி தோன்றியது. அவன் வாய் திறந்து ஏதோ பேச முயன்றான். ஆனால் அவன் வாயிலும் இரத்தமாயிருந்த படியால் அவனுடைய முகத்தின் கோரம் அதிகமாயிற்று.

இளவரசர் பரபரப்புடன் அவன் அருகில் போய் உட்கார்ந்தார். "சீக்கிரம் தண்ணீர் கொண்டு வாருங்கள்!" என்று கத்தினார்.



அம்மனிதன், "வேண்டாம்' இளவரசே! சற்று முன்னால் தான் இந்தப் பெண்மணி தண்ணீர் கொடுத்தாள். அவள் அச்சமயம் வராதிருந்தால் இதற்குள் என் உயிர் பிரிந்திருக்கும். ஐயா! தங்களுக்குத் துரோகம் செய்ய வந்ததின் பலனை இங்கேயே அநுபவித்து விட்டேன். மறு உலகில் இதற்காக மறுபடியும் கடவுள் என்னைத் தண்டிக்க மாட்டார்" என்றான்.

இளவரசர் அவன் குரலைக் கேட்டதும் முகத்தை உற்றுப்



பார்த்தார், ''ஆ! கலபதி!* இது என்ன பேச்சு! இதெல்லாம் எப்படி நடந்தது? எனக்கு நீர் என்ன துரோகம் செய்வதற்காக வந்தீர்? அதை நான் நம்பவே முடியாது!'' என்றார்.

''ஐயா! தங்கள் உத்தம குணத்தினால் அப்படிச் சொல்கிறீர்கள். பழுவேட்டரையர்களின் சொற்படி தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போக வந்தேன். இதோ கட்டளை!'' என்று சொல்லி, மடியிலிருந்து ஓலை ஒன்றை எடுத்துக் கொடுத்தான், சாகுந்தறுவாயில் இருந்த கலபதி.

ஓலையைக் கண்ணோட்டமாக இளவரசர் ஒரு விநாடியில் பார்வையிட்டார். ''இதில் உமது துரோகம் என்ன? சக்கரவர்த்தியின் கட்டளையைத்தானே நிறைவேற்ற வந்தீர்? அதையறிந்து நானே விரைந்து ஓடி வந்தேன். அதற்குள் இந்த விபரீதங்கள் எப்படி நேர்ந்தன? சீக்கிரம் சொல்லுங்கள்!'' என்றார்.

''சீக்கிரம் சொல்லத்தான் வேண்டும். இல்லாவிட்டால் அப்புறம் சொல்லவே முடியாது!'' என்றான் கலபதி. பிறகு அவன் அடிக்கடி தட்டுத் தடுமாறிப் பின்வரும் வரலாற்றைக் கூறினான்:—

---

* அந்த நாளில் சேனைத் தலைவனைத் 'தளபதி' என்று அழைத்ததுபோல் மரக்கலத் தலைவனைக் 'கலபதி' என்று அழைத்தார்கள்.

சக்கரவர்த்தியின் கட்டளையைப் பெற்றுக் கொண்டு, கலபதி இரண்டு கப்பல்களுடன் நாகப்பட்டினத்திலிருந்து கிளம்பினான். அந்த வேலை அவனுக்குப் பிடிக்கவில்லைதான். ஆயினும் சக்கரவர்த்தியின் கட்டளையை மீற முடியாமல் புறப்பட்டான். புறப்படும்போது பழுவேட்டரையர்கள் அவனிடம் கண்டிப்பாகச் சில கட்டளைகளை இட்டிருந்தார்கள். அதாவது இலங்கையை அடைந்ததும் தனியான இடத்தில் கப்பல்களை நிறுத்திக் கொண்டு இளவரசர் எங்கே இருக்கிறார் என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு அவரை நேரில் சந்தித்துச் சக்கரவர்த்தியின் ஓலையைக் கொடுக்க வேண்டும். அதற்கு முன்னால் சேநாதிபதி கொடும்பாளூர் வேளாருக்கு இந்தச் செய்தி தெரியக் கூடாது. இளவரசரிடம் கட்டளையைக் கொடுத்த பிறகு அவராக வந்தால் சரி, இல்லாவிட்டால் பலவந்தமாகச் சிறைப்படுத்தியாவது கொண்டு வர வேண்டும்...இவ்விதம் சொல்லித் தங்கள் அந்தரங்க ஆட்கள் சிலரையும் பழுவேட்டரையர்கள் கலபதியுடன் சேர்த்து அனுப்பினார்கள்.

கலபதி மனத்தில் பெரிய பாரத்துடனேயே புறப்பட்டு வந்தான். அவன் கீழிருந்த கப்பல் மாலுமிகளில் பலருக்கு எதற்காக இலங்கை போகிறோம் என்பது தெரிந்திருக்கவில்லை. இதனால் அவனுடைய மன வேதனை அதிகமாயிருந்தது. அவர்களிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கினான். கப்பல்களைத் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தில் கொண்டு போய் நிறுத்திய பிறகு கலபதி இன்னும் சில மாலுமிகளோடு காங்கேசன் துறைக்குப் போனான். இளவரசர் அப்போது எங்கே இருக்கிறார் என்று விசாரித்து வருவதற்காகத்தான். தென்னிலங்கையின் உட்பகுதியில் இளவரசர் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாகக் காங்கேசன் துறையில் தெரிந்து கொண்டு திரும்பி வந்தான்.

கலபதி திரும்பி வருவதற்குள்ளே மாலுமிகளுக்கு விஷயம் தெரிந்து விட்டது. பழுவேட்டரையர்களின் அந்தரங்க ஆட்கள் சிலர் இருந்தார்கள் அல்லவா? அவர்கள் மூலம் பிரஸ்தாபம் ஆகிவிட்டது. கலபதி திரும்பி வந்ததும் மாலுமிகள் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு கலபதியிடம் கேட்டார்கள். ''பொன்னியின் செல்வரைச் சிறைப்படுத்திக் கொண்டு போகவா நாம் வந்திருக்கிறோம்?'' என்று வினவினார்கள். கலபதி உண்மையைக் கூறினான். ''நாம் இராஜாங்க சேவையில் இருப்பவர்கள். சக்கரவர்த்தியின் கட்டளையை நிறைவேற்ற வேண்டியவர்கள்'' என்றான். ''எங்களால் அது முடியாது. இது சக்கரவர்த்தியின் கட்டளையும் அல்ல; பழுவேட்டரையர்களின் கட்டளை!'' என்றார்கள்.

''பின்னே நீங்கள் என்னதான் செய்யப் போகிறீர்கள்?'' என்று கலபதி கேட்டான்.

''மாதோட்டம் சென்று இளவரசருடன் சேர்ந்துகொள்ளப்போகிறோம்.''

''மாதோட்டத்தில் இளவரசர் இல்லையே?''

''இல்லாவிடில் சேநாபதி கொடும்பாளூர் வேளாரிடம் சரண் அடைவோம்.''

கலபதி அவர்களுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பயனில்லை. கலபதியுடன் நிற்பதற்குப் பழுவேட்டரையர்களின் அந்தரங்க ஆட்கள் உள்படச் சுமார் பத்துப் பேர்தான் சம்மதித்தார்கள். பத்துப் பேரை வைத்துக் கொண்டு இருநூறு பேரை என்ன செய்ய முடியும்?

''சரி; அப்படியானால் இப்போதே போய்த் தொலையுங்கள்! பின்னால் வருகிறதையும் அநுபவித்துக் கொள்ளுங்கள்! என்னால் இயன்ற வரையில் என் கடமையை நான் செய்வேன்!'' என்றான் கலபதி.

மாலுமிகளில் பலர் இரண்டு கப்பல்களில் ஒன்றைச் செலுத்திக் கொண்டு மாதோட்டம் போகலாம் என்று உத்தேசித்தார்கள். மற்றும் சிலர் அதை ஆட்சேபித்தார்கள். ஆகவே கப்பலிலிருந்து இறங்கித் தரை மார்க்கமாகவே புறப்பட்டார்கள். புறப்படும் அவசரத்தில் அவர்கள் ஏறியிருந்த கப்பலுக்கு நங்கூரம் பாய்ச்சவில்லை. கப்பல் நகர்ந்து நகர்ந்து சென்று கரை தட்டி உடைந்து மண்ணில் புதைந்து விட்டது.

இதற்குப் பிறகு கலபதி மற்றொரு கப்பலுடன் அங்கேயிருக்க விரும்பவில்லை. காங்கேசன் துறையில் அவன் ஒரு செய்தி கேள்விப்பட்டிருந்தான். சில நாளைக்கு முன்பு முல்லைத் தீவுக்குப் பக்கத்தில் அரபு நாட்டுக் கப்பல் ஒன்று உடைந்து முழுகிவிட்டதென்றும், அதிலிருந்து தப்பிப் பிழைத்த மூர்க்க அராபியர்கள் சிலர் அந்தப் பக்கத்தில் திரிந்து கொண்டிருந்ததாகவும் சொன்னார்கள். எனவே, கரை தட்டிப் புதைந்த கப்பலுக்குப் பக்கத்தில் இன்னொரு கப்பலையும் நிறுத்தி வைக்க அவன் விரும்பவில்லை. நன்றாயிருந்த கப்பலை அங்கிருந்து அப்புறப்படுத்திக் கொண்டு போனான். கடல் அடுத்தபடியாகப் பூமிக்குள் சென்

நிருந்த குடாவில் கொண்டு போய் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தினுன்.

பின்னர் கலபதி தன்னுடன் இருந்த மாலுமிகளுடன் கரையில் இறங்கி மேலே செய்ய வேண்டியதைப் பற்றி அவர்களிடம் கலந்து ஆலோசித்தான். அவன் மட்டும் தனியாகச் சென்று இளவரசரிடம் கட்டளையைச் சேர்ப்பிப்பதாகவும் அதுவரையில் மற்றவர்கள் கப்பலைப் பத்திரமாகப் பாதுகாத்து வர வேண்டும் என்றும் சொன்னுன்.

மாலுமிகள் தங்கள் கவலைகளைக் கலபதியிடம் தெரிவித்துக் கொண்டார்கள். அவர்களுக்குக் கலபதி தைரியம் கூறிக் கொண்டிருக்கும் போதே மயிர்க்கூச்சு எடுக்கும்படியான பயங்கரக் கூச்சலைப் போட்டுக் கொண்டு சில மனிதர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு தாக்கினுர்கள். அவர்கள் அரபு நாட்டார் என்பது தெரிந்தது. தமிழ் மாலுமிகள் அச்சமயம் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. சண்டைக்கு ஆயத்தமாகவும் இருக்கவில்லை. கையில் கத்திகளும் வைத்திருக்கவில்லை. எனினும் தீரத்துடன் போராடினுர்கள். போராடி எல்லாரும் உயிரை விட்டார்கள்.

''இளவரசே! நான் ஒருவன் மட்டும் மரண காயங்களுடன் ஓடி ஒளிந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டேன். நடந்தது என்னவென்பதை யாருக்காவது சொல்ல வேண்டும் என்பதற்காகவே இதுவரையில் உயிரை வைத்துக் கொண்டிருந்தேன். இளவரசே! தங்களையே நேரில் பார்த்துச் சொல்லும்படியான பாக்கியம் எனக்குக் கிட்டிவிட்டது. தங்களுக்கு நான் துரோகம் செய்ய எண்ணியதற்குப் பலனையும் அநுபவித்துவிட்டேன். பொன்னியின் செல்வரே, என்னை மன்னித்து விடுங்கள்!'' என்ருன் கலபதி.

''கடமையை ஆற்றிய கலபதியே! உம்மை எதற்காக நான் மன்னிக்க வேண்டும்? போர்க்களத்தில் உயிரை விடும் வீரர்கள் அடையும் வீர சொர்க்கம் ஒன்று இருந்தால் அதற்கு நீரும் அவசியம் போய்ச் சேர்வீர்! சந்தேகம் இல்லை!'' என்று சொல்லி இளவரசர் அக்கலபதியின் தீயெனக் கொதித்த நெற்றியைத் தடவிக் கொடுத்தார்.

கலபதியின் கண்களிலிருந்து அப்போது பெருகிய கண்ணீர் அவன் முகத்தில் வழிந்திருந்த இரத்தத்தோடு கலந்தது.

மிக்க சிரமத்துடன் அவன் தன் கைகளைத் தூக்கி இளவரசரின் கரத்தைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

இளவரசரின் கரம் கலபதியின் கண்ணீரால் நனைந்தது. அவருடைய கண்களிலும் கண்ணீர் துளித்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் கலபதியின் உயிர் அவன் உடலை விட்டுப் பிரிந்தது.

அத்தியாயம் நாற்பத்தொன்பது

கப்பல் வேட்டை

கலபதியின் உடலையும் மாண்டுபோன மற்ற மாலுமிகளின் உடல்களையும் சேர்த்து வைத்து உலர்ந்த மரக்கட்டைகளை அடுக்கித் தகனம் செய்தார்கள்.

தீ மூட்டி எரியத் தொடங்கியபோது இளவரசர் முகத்தில் கண்ணீர் பெருகிக் கொண்டிருப்பதைச் சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரி கவனித்தார்.

''ஐயா! இந்தப் பாதகர்களின் சாவுக்காகவா கண்ணீர் விடுகிறீர்கள்? தங்களைச் சிறைப்படுத்த வந்த துரோகிகளுக்குக் கடவுளே தக்க தண்டனை அளித்து விட்டார். தாங்கள் ஏன் வருந்த வேண்டும்?'' என்ருர்.

''சேநாபதி! இவர்கள் துரோகிகள் அல்ல; இவர்களுடைய மரணத்துக்காகவும் நான் வருத்தப்படவில்லை. சோழ நாட்டுக்கு இவ்வளவு பொல்லாத காலம் வந்து விட்டதே என்று வருந்துகிறேன்'' என்ருர்.

''பொல்லாத காலம் பழுவேட்டரையர்களுடனேயே வந்து விட்டது. இப்போது ஒன்றும் புதிதாக வரவில்லையே!''

''புதிதாகத்தான் வந்திருக்கிறது. கலபதியின் கட்டளையைக் கப்பல் மாலுமிகள் மீறுவது என்று வந்துவிட்டால் அதைக் காட்டிலும் ஒரு ராஜ்யத்துக்குக் கேடு வேறு என்ன இருக்க முடியும்? சேநாபதி! இது ஒரு சிறிய அறிகுறிதான்! இதைப் போலவே சோழ ராஜ்யம் எங்கும் பிளவுகள் ஏற்படுமோ என்று அஞ்சுகிறேன்! அப்படி ஏற்பட்டால் விஜயாலய சோழர் அஸ்திவாரமிட்ட இந்த மகா ராஜ்யம் சின்னபின்னமாகிவிடுமே! இந்தக் கேடு என்னாலேயா நேர வேண்டும்? மகாபாரதக் கதை கேட்டிருக்கிறேன். துரியோதனன் பிறந்த போது நரிகளும் ஓநாய்களும் பயங்கரமாக ஊளையிட்டன என்று

பாரதம் சொல்லுகிறது. நான் பிறந்த போதும் அப்படி நரிகளும் ஓநாய்களும் பயங்கரமாக ஊளையிட்டிருக்க வேண்டும்!'' என்றார் இளவரசர்.

''ஐயா! தாங்கள் இந்த உலகில் ஜனித்த போது என்னென்ன நல்ல சகுனங்கள் ஏற்படலாமோ அவ்வளவும் ஏற்பட்டன. தங்கள் ஜாதகத்தைக் கணித்த சோதிடர்கள்....''

''போதும், சேநாபதி! போதும்! இந்தப் பேச்சைக் கேட்டுக் கேட்டு என் காது புளித்து விட்டது. என் ஜாதக விசேஷம் இருக்கட்டும். நாம் பிரிய வேண்டிய காலம் வந்துவிட்டது. சேநாபதி! தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கப்பல்களிலிருந்து கலபதியின் கட்டளையை மீறிச் சென்ற



மாலுமிகள் தங்களிடம் வந்தால் தாங்கள் அவர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. உடனே சிறைப்படுத்தி அவர்களைத் தஞ்சைக்கு அனுப்ப வேண்டும்.''

''இளவரசே! கலபதி கூறியதை மட்டுமே நாம் கேட்டோம். மாலுமிகளின் கட்சி என்னவென்று நாம் கேட்கவில்லை. ஒரு பக்கத்துப் பேச்சை மட்டும் கேட்டு எப்படித் தீர்மானிக்க முடியும்? அது நீதிக்கும் தர்மத்துக்கும் உகந்ததா? தாங்கள் என்னுடன் வாருங்கள். அந்த மாலுமிகள் வந்ததும் அவர்கள் சொல்வதையும் கேட்டு முடிவு செய்யுங்கள்.''

''ஐயா! அது சாத்தியமில்லை. தங்கள் உசிதம் போல் செய்யுங்கள். நான் இனி ஒரு கணமும் இங்கே தாமதிக்க முடியாது. உடனே புறப்பட வேண்டும். படகுக்காரன் எங்கே?'' என்று கேட்டார் இளவரசர்.

''எங்கே புறப்பட வேண்டும், இளவரசே! படகுக்காரன் எதற்கு?''

''இதைப் பற்றித் தாங்கள் கேட்கவும் வேண்டுமா? வந்தியத்தேவனை ஏற்றிச் செல்லும் கப்பலுக்குத்தான் நானும் போக வேண்டும். அந்த வீராதி வீரன் எனக்காக அல்லவோ அராபியர் வசப்பட்ட கப்பலில் ஏறிப் பயங்கரமான அபாயத்துக்கு உள்ளாகியிருக்கிறான்? அவனை நான் கைவிட்டு விடக் கூடுமா? ஏற்கனவே நான் செய்துள்ள பாவங்கள் போதாவென்று சிநேகத் துரோகம் வேறு செய்ய வேண்டுமா....?''

''ஐயா! தாங்கள் ஒரு பாவமும் நான் அறிந்து செய்ததில்லை. தாங்கள் சொன்னாலும் உலகம் ஒப்புக் கொள்ளாது. வந்தியத்தேவன் வெறும் முரடன். முன் யோசனை சிறிதும் இல்லாதவன். அவனாக வருவித்துக் கொண்ட அபாயத்துக்குத் தாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்? இதில் சிநேகத் துரோகம் என்ன? இளவரசே! எங்கிருந்தோ நெறி கெட்டு வந்த ஒரு வாலிபனைத் தங்கள் சிநேகிதன் என்று கொண்டாடுவதே எனக்குப் பிடிக்கவில்லை. சம நிலையில் உள்ளவர்கள் அல்லவோ சிநேகிதர்கள் ஆக முடியும்?''

''சேநாபதி! வீண் பேச்சில் காலங் கடத்த நான் விரும்பவில்லை. அவன் என் சிநேகிதன் இல்லாவிட்டாலும் நன்றி என்பதாக ஒன்று இருக்கிறதல்லவா? வள்ளுவர் முதல் பெரியோர்கள் அனைவரும் சொல்லியிருக்கிறார்களே? 'சோழ குலத்தார் நன்றி மறவாதவர்கள்' என்ற புகழ் என்னால் கெட்டுப் போக விடமாட்டேன். இந்த நிமிடமே புறப்பட்டுச் சென்று அந்தக் கப்பலைத் தேடிப் பிடிப்பேன்....''

''எப்படிப் புறப்படுவீர்கள், எங்கே தேடுவீர்கள், இளவரசே!''

''நீங்கள் வந்த படகில் ஏறிக் கொண்டு புறப்படுவேன்....''

''முயலை வைத்துக் கொண்டு புலி வேட்டையாட முடியுமா? ஆழ்கடலில் செல்லும் மரக்கலத்தை இந்தச் சிறிய படகில் ஏறித் துரத்திப் பிடிக்க முடியுமா? பிடித்த பிறகுதான் என்ன செய்வீர்கள்?''

''படகில் ஏறிப் போவேன். படகு உடைந்தால் மரக்கட்டையைப் பிடித்து நீந்திக் கொண்டு போவேன். வந்தியத்தேவனை ஏற்றிச் செல்லும் கப்பல் ஏழு கடல்களுக்கு அப்பால் சென்றாலும் அதைத் துரத்திக் கொண்டு போய்ப் பிடிப்பேன். பிடித்த பிறகு என் நண்பனைக் காப்பாற்ற முடியாவிட்டால்


கல்கி
அக்டோபர் 5ம் மலரில்
சாருலதா
கி.ராஜேந்திரன் எழுதும்
புதிய சமூக நாவல்
ஆரம்பமாகிறது

தானும் அவனுடைய உயிரையாவது விடுவேன்.... படகுக்காரன் எங்கே?''

இவ்விதம் சொல்லிக் கொண்டே இளவரசர் நாலாபுறமும் திரும்பிப் பார்த்தார். படகுக்காரனுடன் ஒரு பக்கமாக நின்று பூங்குழலி பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தார். அருகில் ஊமை மூதாட்டியும் நின்றாள். அவர்கள் இருந்த இடத்தை நோக்கி விரைந்து போனார்.

சமீபத்தில் சென்றதும் பூங்குழலி கண்ணில் நீர் ததும்ப அப்படகுக்காரனுடன் ஆத்திரமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தாள் என்று தெரிந்தது.

''ஆகா! இது என்ன? இன்னொரு உட்கலகமா?'' என்றார் இளவரசர்.

படகுக்காரன் திடீரென்று இளவரசர் காலில் விழுந்தான். ''இளவரசே! தெரியாமல் பாதகம் செய்து விட்டேன். பணத்தாசையால் செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்!'' என்று கதறினான்.

''இது என்ன?.... பூங்குழலி! எல்லாருமாகச் சேர்ந்து என்னைப் பைத்தியமாக்கி விடுவார்கள் போலிருக்கிறதே? நீயாவது விஷயம் என்னவென்று சொல்லக் கூடாதா?''



''இளவரசே! இத்தனை நேரம் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு சொல்லவில்லை. இவன் என் தமையன். தங்களைக் கொல்வதற்காக வந்த இரண்டு பாவிகளையும் இவன்தான் கோடிக்கரையிலிருந்து படகில் ஏற்றிக் கொண்டு வந்தான். அவர்கள் சொற்படியேதான் இவன் இதுவரை இங்கே காத்துக் கொண்டிருந்தான். அவர்களை இன்று காலையில் மறுபடியும் படகில் ஏற்றி நாம் பார்த்த கப்பலில் கொண்டு போய் விட்டானாம்! தங்கள் நண்பரும் அதிலேதான் ஏறியிருக்கிறார்....'' என்றாள்.

''பிரபு! என்னை வெட்டிக் கொன்று விடுங்கள்! அவர்கள் அத்தகைய துஷ்டர்கள் என்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் செய்திருக்க மாட்டேன். என்னைத் தங்கள் கையாலேயே கொன்று விடுங்கள்!'' என்றான் படகுக்காரன்.

''அப்பனே! இச்சமயம் உன் உயிர் எனக்கு விலை மதிப்பில்லாத பொருள். வா, போகலாம்! அந்தக் கப்பலிலேயே என்னையும் கொண்டுபோய் ஏற்றி விடு. எனக்கு நீ செய்த கெடுதலுக்கு அதுதான் பரிகாரம். புறப்படு, போகலாம்!'' என்றார் இளவரசர்.

கடற்கரையோரத்தில் சென்றதும் கரையில் கிடந்த படகைப் படகோட்டி தண்ணீரில் இழுத்துவிட்டான். இளவரசர் கடலைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். ''அதோ கப்பல் இன்னும் தெரிகிறது! பிடித்து விடலாம்!'' என்றார்.

சேநாபதியும் தூரத்தில் தெரிந்த கப்பலைக் கூர்ந்து பார்த்தார்.

''இளவரசே! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று!'' என்றார்.

''என்ன? என்ன? தங்களிடமிருந்து கூட நல்ல வார்த்தை வருகிறதே!''

''நம் கண்ணுக்குத் தென்படுவது தாங்கள் நினைக்கிறபடி வந்தியத்தேவனை ஏற்றிச்செல்லும் கப்பல் அல்ல. பார்த்திபேந்திரனுடைய கப்பல். திருகோணமலைப் பக்கமிருந்து வருகிறது. நாம் இருக்கும் திசையை நோக்கி வருகிறது. தெரியவில்லையா?''

''ஆம், ஆம்! அப்படியானால் மிகவும் நல்லதாய்ப் போயிற்று. பார்த்திபேந்திரர் வேறு ஏதோ நோக்கத்துடன் வருகிறார். ஆயினும் நல்ல சமயத்தில் வருகிறார். சிங்கத்தைக் கொண்டே சிறுத்தையை வேட்டையாடலாம்!... ஆனால் அந்தக் கப்பல் இங்கே வரும் வரையில் நான் காத்திருக்கப் போவதில்லை. படகில் சிறிது தூரம் சென்று எதிர்கொள்கிறேன்......''

''இளவரசே! தங்களுடன் படகில் வருவதற்கு....''

''ஐயா! நீங்கள் ஒருவரும் என்னுடன் வர வேண்டியதில்லை. இங்கேயே நின்றால் எனக்குப் பெரிய உதவி செய்ததாக எண்ணிக் கொள்வேன்.... திருமலை! உனக்குங்கூடத்தான் சொல்கிறேன். உனக்குத்தான் கடல் என்றால் தயக்கமாயிற்றே?''

''ஆம், ஐயா! நானும் பின்தங்குவதாகவே இருந்தேன். இலங்கைத் தீவில் இருக்கும் வரையில் தங்களைப் பார்த்துக் கொள்ளும்படிதான் எனக்குக் கட்டளை. முதன் மந்திரி மதுரையில் இருக்கிறார். அவரிடம் போய் இங்கு நடந்தவற்றைச் சொல்ல வேண்டும்....''

''அப்படியே செய்! பூங்குழலி! நீயும் இங்கே நிற்க வேண்டியதுதான். உன் தமையனைப் பற்றிக் கவலைப்படாதே. நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வந்த

படகை எங்கேயோ விட்டிருப்பதாகச் சொன்னாயல்லவா? அதில் ஏறி இனி உன் வழியில் போகலாம். நீ எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்கமாட்டேன்.... சேச்சே! கண்ணீரைத் துடைத்துக் கொள்! பார்க்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?''

இவ்வாறு கூறி விட்டு இளவரசர் ஊமை ராணியின் அருகில் சென்று அவளுடைய பாதத்தைத் தொட்டு வணங்கப் போனார். அந்த மூதாட்டி அவரைத் தடுத்து நிறுத்தி உச்சி மோந்து ஆசீர்வதித்தாள்.

அடுத்த நிமிஷம் இளவரசர் கடலில் ஆயத்தமாக நின்ற படகில் பாய்ந்து ஏறிக் கொண்டார்.

கரையில் நின்றவர்கள் படகைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

இளவரசரும் போகின்ற படகிலிருந்து அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

எல்லாரையும் பொதுவாகப் பார்த்தாலும் அவருடைய கண்கள் பூங்குழலியின் கண்ணீர் வழிந்த முகத்திலேயே நிலைத்து நின்றன. அதிசயம்! அதிசயம்! தூர விலகிப் போகப் போக, உருவங்கள் சிறியனவாக வேண்டுமல்லவா? கரையில் இருந்த மற்றவர்களின் உருவங்கள் சிறியனவாகித்தான் வந்தன. ஆனால் பூங்குழலியின் முகம் மட்டும் வரவரப் பெரிதாகிக்கொண்டேயிருந்தது. இளவரசரின் அருகில் நெருங்கி வந்து கொண்டேயிருந்தது.

இளவரசர் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டார். கண்களை வேறு பக்கம் திருப்பினார். முதல் நாள் இரவு கண்ட கனவில் ஒரு நிகழ்ச்சி அவர் மனக்கண் முன் வந்தது. இளையபிராட்டி குந்தவை ''தம்பி! உனக்காக இங்கே வானதி காத்திருக்கிறாள் என்பதை மறந்து விடாதே!'' என்று கூறிய மொழிகள் கடல் அலைகளின் இரைச்சலுக்கிடையில் தெளிவாக அவருடைய காதில் கேட்டன.

(தொடரும்)


முதல் சந்திப்பு

11. அதிசய விருந்தில் ஓர் அறிமுகம்

காந்திஜி 1915-ல் சென்னைக்கு வந்தார். அப்போது அவருக்குச் சென்னையில் இருந்த ஒரே நண்பர் ஜி. ஏ. நடேசன்தான். இவர் கடிதம் மூலமே காந்திஜியுடன் அவர் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது நண்பரானவர். சென்னையில் ஜி. ஏ. நடேசன் காந்திஜிக்கு அறிமுகப்படுத்தியவர்களில் முக்கியமானவர்கள் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்காரும், ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும் ஆவர். அப்போது ஸ்ரீநிவாஸ அய்யங்கார் மிகப் பிரபலமான வக்கீல்.



ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் வீட்டுத் தோட்டத்தில் விருந்துக்கு ஏற்பாடாகி யிருந்தது. வெந்த மணிலாக் கொட்டை, தேங்காய் வழுக்கல், ஆப்பிள், ஆரஞ்சு முதலிய பழங்கள், பேரிச்சம் பழம், நீர் மோர், இளநீர் இவை தயாராக வைக்கப்பட்டிருந்தன. விருந்துக்கு வந்தவர்கள் எல்லோரும் இந்த அதிசய விருந்தைக் கண்டு ஒருவிதத்தில் ஏமாந்தனர் என்றே சொல்ல வேண்டும்.



இந்த விசித்திர விருந்துக்கு ஏற்ப காந்திஜியும் ஒரு விசித்திர புருஷராகவே காணப்பட்டார். குஜராத்தித் தலைப்பாகை அணிந்து ஒரு வடநாட்டுக் குடியானவர் போலத் தோற்றம் அளித்தார்.

''எனக்குப் பிடித்தமான பொருள்களை இவ்விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்களே! பலே! இது யார் வேலை?'' என்று கேட்டார் மகாத்மா. நடேசன், ஸ்ரீநிவாஸய்யங்காரைச் சுட்டிக் காட்டினார். ஸ்ரீநிவாஸய்யங்கார், ''எனக்கு எதுவும் தெரியாது. எல்லாம் என் மனைவி செய்த ஏற்பாடு'' என்றார். நடந்தது என்னவென்றால் ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் மனைவி காந்திஜியின் மனைவியை முதல் நாள் சந்தித்தபோதே காந்திஜிக்கு என்ன ஆகாரம், அவருக்கு என்னவெல்லாம் பிடிக்கும் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தார்.

மற்றொரு சமயம் காந்திஜி ஸ்ரீநிவாஸ அய்யங்காரைக் காண வந்தபோது அவருடைய மனைவியைப் பார்த்து, ''உங்கள் புருஷர் அட்வகேட் ஜெனரல் பதவியை ராஜிநாமா செய்து விட்டது குறித்து வருத்தப் படுகிறீர்களா?'' என்று கேட்டுவிட்டு, ''இதற்காக என் மீது குற்றம் சுமத்தாதீர்கள்'' என்று சொல்லிச் சிரித்தார்.

— ஜனன்



பற்றின்மையிலும் பற்றில்லை!

ரா. கணபதி

செந்தூர்மேவும் செவ்வேளாகிய முருகப் பெருமானின் செக்கச் சிவந்த திருமேனியில் சொக்கி நின்றார் ஸ்ரீ சங்கர பகவத்பாதர்.

''குங்குமம் அப்பிய திருமேனியுடன் வள்ளியம்மை உன்னைத் தழுவியதால் இப்படி உன் உடல் சிவந்ததா ? இல்லாவிடில் பக்தர்களிடம் உனக்கு உள்ள அநுராகத்தின் பிரதிபலிப்பிலேயே சிவந்து காண்கிறாயா ?'' என்று வினவினார்.

அநுராகம் என்றால் அன்பு என்று பொருள். ராகம் என்பதற்கும் ரக்தம் (ரத்தம்) என்பதற்கும் வேர்ச் சொல் ஒன்றே. ரத்தத்தின் சிவந்த தன்மை போல் அன்பும் சிவந்த தன்மை பெற்றது. உள்ளச் செம்மை என்று தமிழில் சொல்வதே 'ராகம்' அல்லது 'அநுராகம்.'

தத்துவங்களையும் உருவங்களாகக் காணும் திவ்விய திருஷ்டி மகான்களுக்கு உண்டு. அப்போது அமைதி வெண்மையாகத் தெரியும்; அன்பு செப்பாகத் தெரியும்; வெறுப்பு கறுப்பாகத் தெரியும்.

அன்பே உருவான ஆறுமுகன் சிவப்பாக இருப்பதன் காரணத்தைப் புரிந்து கொண்டு அவனது பூரித்த திருமேனியை வணங்கிப் புஜங்கத் துதி பாடினார் ஆதிசங்கரர்.

குங்குமம் அப்பிய பொங்குயர் ஈகிலான்
மூழ்கி உன்மேனி செங்கனல் ஆச்சோ?

அநுதினம் அடியவர்க்(கு) அநுராகம் அளிக்க
உனும் மனச்செம்மையில் தனு
சிவந்ததுவோ?

அன்பு என்று பக்தர்கள் புகழ்ந்து சொல்வதைக்கூட ஞானிகள் விசேஷமாகக் கருத மாட்டார்கள். அவர்களுக்கு அமைதியின் வெண்மையில்தான் ஈடுபாடு. அதுவே ஸத்வ குணம். 'சிவப்பு' அதற்குக் கீழ் நிலையிலுள்ள ரஜோகுணம்தான். இப்படியிருக்க பரம அத்வைத ஞானியான ஆதிசங்கரர் சிவப்பைப் புகழுவாரா ?

அநுராகத்தைப் போற்றுவதில்தான் அவருடைய மகத்தான விராகம், அல்லது வைராக்கியமே மிளிர்கிறது. ஆசை அல்லது பற்றுக்களை அறவே களைந்து துறவியான விராகி ஆதி சங்கரர். வைஷ்ணவர்களுக்குரிய சிறப்பியல்புகளில் ஒன்றாக நாராயண மேதா குறிப்பிடும் 'த்ருட வைராக்ய'த்துக்கு ஆதிசங்கரரையே ஆதரிசமாக வரைந்திருக்கிறார் ஒவியர் கணுதேசாய்.

வாஸ்தவம்தான் ! எட்டாவது வயதில் அன்னையை நீத்து, தன்னந் தனியாக உலகுக்கு ஞான ஒளி வீசப் புறப்பட்ட சங்கரரைப் போன்ற விராகியைக் காண முடியாதுதான்.

ஆனால் அப்படிப்பட்டவர் இங்கு ஏன் செந்திலாண்டவனின் அநுராகத்தைப் பராவுகிறார் ? முருகனன்பை எண்ணிக் கண்ணீர் வடிக்கிறார் ?

அதனினும் அதிசயம் ! இதோ அவர் வடிக்கும் கண்ணீரில் அன்பின் ஆனந்தம் வற்றுகிறது. விலாவை அழுத்திக் கொண்டு, தாள முடியாத நோவில் முருகனை நோக்கிக் கண்ணீர் பெருக்குகிறார்.

ஐயனின் பாதத்திலிருந்து விபூதியை அள்ளி எடுத்துப் பன்னீர் இலையில் வைத்து ஆசாரியர்களிடம் நீட்டுகிறார் அர்ச்சகர்.

அன்பு என்பது அனைத்துக்கும் ஜீவரசம் தருகிற ஈரமான ஒன்று. விபூதியோ அனைத்தும் எரிந்து முடிவில் கிடைக்கும் பொருள். அமைதியின் வெண்மை நிறம் கொண்டது.

பன்னிரு கையனின் பஸ்மத்தைப் பன்னீர் இலையில் காண்கையில் பன்னீராக ஆசாரியரின் கண் பனித்து, பன்னீராகவே சொல்லும் வந்தது. "கொடிய ரோகங்கள் அனைத்தும், பேய் பிசாசு முதலியனவும்கூட, பன்னீரிலையில் வைத்த உன்து பஸ்மத்தைக் கண்ட மாத்திரத்தில் பஸ்மமாகி விடுமே!" என்று துதித்தார்.

விலாவை அழுத்திப் பிடித்த கை தளர்ந்தது. உள்ளே குடைந்தெடுத்த நோவும் மந்திர ஜாலம் போல் மறைந்தது.

தொடர்ந்து பாடினார் ஆசாரியர் :

கண்ணில் உன் உருவம், காதில் உன் கதை
வாயில் உன் விமல வரலாற்றின் வாசம்,
கையில் உன் பூசை, காயம் உன் காரியம்
கருத்தினே குகனே! இருத்திடேன் நின்பால்

இதய குகையில் ஒளிரும் பிரம்மம்தான் குகன். கருத்துக்கள் யாவும் அங்கு லயித்து விட்டால் வெளி உணர்வே அற்ற அத்வைத பிரம்மாநுபவம்தான்.

ரொம்ப சரி. ஆனால் இதற்கு முன் பாட்டில் இந்த மகாஞானி உடல் உபாதையை அவ்வளவு பெரிதாக மதித்துப் பாடியது ஏன்?

விராகி அநுராகத்தைப் போற்றுகிறார் ! உள்ளக் குகையில் ஒடுங்குபவர் உடலின் உபாதையைப் பெரிதாகப் பேசுகிறார் !

முரணாகத் தோன்றுகிறதல்லவா ?

இதில்தான் ஆசாரிய சங்கரரின் தனிப்பட்ட வைராக்கியத்தைக் காண்கிறோம். மற்ற வைராக்கியசாலிகள் உலகப் பொருள்களிடம் பற்றைத் துறந்தனர்; ஆனால் தாம் கண்ட தத்துவத்தில் அவர்களுக்குப் பற்று விடவில்லை. தமது தத்துவ தரிசனம் ஒன்றே சத்தியம் என்று உலகுக்குப் பறைசாற்றினர்.

ஆனால் ஆதிசங்கரர் ! ஆஹா, அவர் இவர்களுக்கெல்லாம் எவ்வளவு மாறுபட்டவர், எவ்வளவு மேம்பட்டவர் ! 'பிரம்மமும் ஜீவனும் ஒன்றே, பிரம்மத்தையன்றி உண்மைப் பொருள் ஏதும் இல்லை, உலக



வாண்டு மாமா
எழுதும்
சிலையைத் தேடி...
சித்திரத் தொடர் கதை
அக்டோபர் 5 கல்கி மலரில்
ஆரம்பமாகிறது...

ளும் உலக வாழ்வும் வெறும் மாயை' என்று அநுபவித்து அறிந்தவர் அவர். அவர் கண்ட சத்திய தரிசனமே அத்வைதம்.

ஆனாலும் அவர் அத்வைதத்தை மட்டுமா பேசினார், பாடினார், வாழ்ந்தார்? அல்ல, அந்த ஞான நிலைக்கு உயருவதற்கு முன் உள்ள அன்பு நிலையையும் போற்றினார் — அதனால்தான் அநுராகத்தைத் துதித்தார். அது மட்டுமல்ல, உண்மையான பக்தி நிலைக்கும் கீழே இந்த உடலைப் பேணுவதற்காக இறைவனை வேண்டிக் கொள்வதைக்கூட அநுமதித்தார். அதனால்தான் சகல ரோக நிவாரணியாகப் பன்னீரிலைப் பஸ்மத்தைப் புகழ்ந்தார்.

சத்தியத்துக்கு உள்ள இறுதியான, உறுதியான அத்வைத ஞான நிலையை அநுபவித்த அவர், அந்தச் சத்தியத்தின் சாயலில் ஏற்படும் கீழ் நிலைகளையும் அந்தந்த மட்டத்தில் ஒப்புக் கொண்டார். அந்தக் கீழ்மட்டத்துக்குத் தாமும் இறங்குவதுபோல் காட்டிக் கொண்டார் — அந்தத் தாழ் நிலையிலுள்ளவர்களை மேல் நிலைக்குக் கையைப் பிடித்து அழைத்துச் செல்வதற்கே!

வங்காளத்தில் சங்கர பகவத்பாதர் குறித்து வழங்கும் ஒரு வரலாற்றுத் துணுக்கு, சத்தியத்தில் பல நிலைகளை அவர் ஒப்பியதற்குக் காரணம் காட்டுகிறது:

சங்கரர் ஒரு நாள் காசி மணிகர்ணிகை கட்டத்தில் கங்கா ஸ்நானம் செய்யச் செல்கிறார். போகும் வழியில் ஒரு பிணத்தைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள் பெண் ஒருத்தி.

வழியிலிருந்து பிணத்தை அகற்றுமாறு அவளைப் பணிக்கின்றனர் ஆசாரிய சீடர்கள்.

அவள் கேட்கிறாள்: "எல்லாம் பிரம்மம் என்கிறார் உங்கள் ஆசாரியார். இந்தப் பிணத்துக்குள் உயிர் இருக்கும் வரையில்தான் அது பிரம்மமாக இருந்ததா? உயிர் சக்தி, அல்லது சைதன்யம்தான் பிரம்மம் என்று வைத்துக் கொண்டால், இப்போது இங்கே இருக்கிறதே, இந்தச் சவம் பிரம்மம் அல்ல. அப்படியாயின், பிரம்மத்தைத் தவிர, வேறு ஏதோ ஒன்று உள்ளது என்றல்லவா ஆகிறது?"

சீடர்கள் அவளிடம் ஆத்திரம் அடைந்தனர். ஆசானோ ஆனந்தம் அடைந்தார்.

அம்பாளேதான் அப்படிப் பேசுகிறாள் என்று கண்டார். "தேவி! மாயை ஒழிந்தால் ஞானம் பிறக்கும். ஆனால் ஒரே பிரம்மத்தைப் பலவாறான பிரபஞ்சமாகக் காட்டுகின்ற மாயா சக்தியான நீயோ ஞானாம்பிகையாகவும் இருக்கிறாய்! நீ ஒரு புதிர். உன்னை எந்த மூளை வாதத்தாலும் அறிய முடியாது. அறிவும் உயிரும் இல்லாத மண்ணும் கல்லும் பிரம்மமாயின், சவமும் பிரம்மம்தான். ஆனால் சவத்தில் ஜீவன் இருக்கும் போது பிரம்ம சக்தியை அதிகமாக விளங்கிக் கொள்ள முடிகிறது. ஒன்றேயான உண்மை அதிகமாகவும், குறைவாகவும் பலப் பல மட்டங்களில் வெளியாகிறது என்று காண்கிறேன். இப்படிப் பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களையும் உச்ச ஸ்தானமாகிய அத்வைதத்துக்கு அழைத்துச் செல்ல அருள் புரிவாய். அவர்களை அநுதாபத்துடன் நான் அணுகுவதற்கு அநுகூலமான மனப்பான்மையை அருள்வாய்!" என்று வேண்டிக் கொண்டார். அவரது பிரார்த்தனையைத் தேவி மறுப்பாளா?

இதன்பின் ஆதிசங்கரருக்குத் தமது தத்துவம் ஒன்றிடமே உள்ள பற்றுதலும் அற்று விட்டது. 'அத்வைதம் அத்வைதம்' என்று முழக்கிக் கொண்டிருந்தால் போதாது எனக் கண்டார். துவைத உலகுக்கு இறங்கி, அதிலுள்ள தாற்காலிக உண்மையை மதித்து அதைச் செம்மை செய்து, அதன் பின்பே அத்வைதத்தைப் போதிக்க உளம் கொண்டார்.

இச்சமயத்தில் ஆசாரியாரிடம் பொறாமை கொண்ட மாற்றுச் சித்தாந்தி ஒருவர் அவரது உடலைப் பாதிப்பதற்கு ஆபிசாரம் செய்தார். உடல் உணர்வு அற்றவர் ஆசாரியார். எனவே, ஆபிசாரப் பிரயோகத்தை அவர் பொருட்படுத்தவே தேவை இல்லை.

அல்லது, பொருட்படுத்தினாலும், தமது யோக சக்தியால் தாமே உடலைக் குணப்படுத்திக் கொண்டிருக்கலாம்.

ஆனால் அவர் இப்படியெல்லாம் செய்யவில்லை. இந்தத் துவைத உலகிடம் அநுதாபத்தை அம்பாளின் அநுக்கிரகமாகப் பெற்றிருந்தார் அல்லவா? அதற்கேற்ப, சாமானிய மக்கள்போல் உடல் உபாதையை ஒரு பிணியாகவே ஏற்று, க்ஷயத்தில் துடித்தார். நோயுறும் மக்கள் யாவரும் தாமாக யோக சக்தி பெற்றுக் குணமடைய முடியாதல்லவா? அப்படிப்பட்டவர்கள் பரமன் அருள் பெற்றே நோயிலிருந்து விடுபட முடியும் என்பதை உலகோருக்கு உணர்த்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம் எனக் கருதினார். எனவேதான் செந்திலாண்டவனை அடைந்து துதி செய்து, விபூதி பெற்று அதன் வழியே உடல் குணமுற்றார்.

உடலே பொய் என்று போதிக்கும் அத்வைத ஆசாரியார் உடல் நோவு பொறுக்க முடியாமல் முருகனிடம் முறையிடுவது பலருக்கு விசித்திரமாக இருந்திருக்கலாம். ஆனால் அவரோ ஒளிவு மறைவின்றி இந்தப் 'பாமர' வழியைப் பின்பற்றினார். தமது தத்துவத்திலும் பற்றுவிட்ட விராகமே இதற்குக் காரணம் என்பதை அறிந்தால் இதில் விசித்திரம் ஏதுமில்லை.

நிலையற்ற உலகிடம் பற்றை விட்டு நித்திய சுகம் எய்தும் விராகத்தைவிட, உலகினரின் பொருட்டு நித்திய சுகத்தில் பற்றுவிட்டு நிலையற்ற உலகத்தின் உலைப்புக்கு ஒருவர் ஆளாவது பெரிய விராகமல்லவா?

இந்தப் பெரிய விராகத்துக்குப் பெயர்தான் அநுராகம். முருகனின் அநுராகம் அதுவே. மாயையாகவும், ஞானமாகவும் உள்ள அம்பாள் என்ற புதிரைத் திறக்கும் சாவியும் அந்த அநுராகமே. அதனால்தான் அவனைத் துதிக்கும் ஆசாரியார்,

புவன முழுதற்கும் அவனம் அளித்திட
சிவத்தின் சிவத்த அருள் சிறந்
தோங்கக் காணீர்!

(ஜகத்தராதும் சம்போ: ஜயதி கருணா காசித் அருணா) என்று பாடினார்!



இவள்தான் ஸாரா. பிறக்கும்போதே குறைந்த எடையோடு பிறந்த குழந்தை. வேறொரு குழந்தை உணவு அருந்திக் கொண்டிருந்த இவள் இப்பொழுது அமுல்ஸ்ப்ரே சாப்பிட்டு வருகிறாள்

இப்பொழுது அவளைப்பாருங்கள்!

"அவள் எடை கூடி இருக்கிறது. அமுல்ஸ்ப்ரே தொடங்கியதிலிருந்து அவள் வளர்ச்சி அபாரம்" என்கிறார், 15 மாதக் குழந்தையான ஸாராவின் தந்தை திரு. ஸைரஸ் கஸ்தூர்.



உங்கள் குழந்தை முதலாண்டிலேயே வெகு வேகமாக வளருகிறது — இக்காலத்திற்குள், அது பிறந்தபோது இருந்த எடை மும்மடங்காக வேண்டும். எனவேதான் உங்கள் குழந்தையின் உடல் வளர உதவும் புரத சத்தை அதிகமாகக் கொண்டிருக்கிறது அமுல்ஸ்ப்ரே. குழந்தை உணவுகள் தயாரிக்க அமெரிக்காவில் உபயோகிக்கப் படும் உன்னதமான ஸ்ப்ரே—ட்ரையிங் செய் முறையிலும் ஆக்கம் பெற்றது அது. பாலிலுள்ள புரதத்தின் தரம் குறையாமல் இருப்பதற்காக, ஸ்ப்ரே—ட்ரையிங் செய்முறையில், குறைந்த வெப்பத்தில் பால் பதன மாக்கப் படுகிறது. அமுல்ஸ்ப்ரே ஒரு சீரான சரி விகித உணவு. அதில் விடமின்கள், கார்போஹைட்ரேட்டுகள், தாதுப் பொருள்கள்—ஏன், உங்கள் குழந்தை வேகமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதற்குத் தேவையான அனைத்தையுமே கொண்டது அது.

ஆயிரக்கணக்கான தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் பிறந்த முதல் வாரத்திலிருந்தே அவற்றிற்குத் தாய்ப் பாலுக்குப் பதிலாகவோ அல்லது உபரி உணவாகவோ அமுல்ஸ்ப்ரே புகட்டி வருகிறார்கள். அதனால்தான், தயாரிக்கத் தொடங்கிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச விற்பனையுள்ள குழந்தை உணவாகிவிட்டது

அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது!



அத்தியாயம் 7

அடுத்த நாள் சங்கரன் எழுந்திருக்கும்போது வெகுநேரமாகி விட்டது. ரமணியின் வீட்டில் நிறைய பேர் பேசும் அரவம் கேட்டது.

சங்கரன் பல்லைத் தேய்த்து விட்டு, முகம் கழுவிக் கொண்டு, வாசலுக்கு வந்தான்.

''மிஸ்டர், சங்கரன்...'' என்று ரமணி கூப்பிட்டான். சங்கரன் ரமணியின் அறைக்குள் நுழைந்தான். இவன்தான் உஸ்தாத் போலிருக்கிறது. கொடுவாள் மீசை, லக்னௌ ஜுப்பா, தொளதொள வென்று பைஜாமா... கண்கள் இரத்தச் சிவப்பாக இருந்தன. மட்டரகமான ஸெண்ட் வாசனை.... சாந்தினிசௌக் குண்டா மாதிரி இருந்தான்.

''உஸ்தாத் ஹமீத் கான்... இவர் தான் போலோ ராம், இவர் சிஷ்யன்... இவர்தான் தெரியும் உங்களுக்கு. சம்பு ராம் மகராஜ்...இவதான் ஹமீத்கான் ஸிஸ்டர் ஷம்மி....''

சங்கரன் ஷம்மியை முதலில் கவனிக்கவில்லை. அவள் பின்னால் மோடாவில் உட்கார்ந்திருந்தாள்.

''மிஸ்டர் சங்கரன்...! ஹமாரா மாலிக் ஹை(ங்)'' என்றான் ரமணி அவர்களிடம்.

''மாலிக்கா?'' என்று கேட்டான் சங்கரன்.

''சும்மா சொன்னேன். இவங்ககிட்டெல்லாம் இப்படித்தான் பேசணும்.''

''பைடியே, சாஹப்...'' என்றாள் ஷம்மி.

ஷம்மி ரோஸ் நிற வெல்வெட் அணிந்திருந்தாள். கோபுவின் வருணனை தவறில்லை. ஆணுக்குப் பெண் வேஷம் போட்ட மாதிரிதான் இருந்தாள்.... இவளுக்கா ராஷ்டிரபதியின் முன்னால் நடனம் ஆடுவதற்கு 'சான்ஸ்' வாங்கித் தரப் போகிறான் ரமணி?....

பஞ்சு அடிக்கும் இடத்தில் உருண்டு புரண்டது போல் உடம்பெல்லாம் பூனை

மயிர். அவள் சிரிக்கும்போது, முகம் கோணலாகி இதழ்கள் ஒரு முற்றுப்புள்ளியில் முடிந்தன. அங்கு ஓர் ஆணி வைத்து அடித்து மூடி விடலாமென்று தோன்றிற்று சங்கரனுக்கு.

உஸ்தாத் ஒரு கருட்டைப் பற்றவைத்துக் கொண்டான். அப்பொழுது ரமணி ஐந்தாறு கண்ணாடித் தம்ளர்களைக் கொண்டு வந்தான்.

அவன் சங்கரனைப் பார்த்துக் கேட்டான்: ''கொஞ்சம் 'சந்திரா!'...''

''என்னது?''

''சந்திரா..'லோக்கல் ப்ராடெக்ட்''' என்று சிரித்தான்.

ரமணியின் சாமர்த்தியத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தான் சம்புராம் மகராஜ். உள்ளூர்க்காரர்களாலேயே தாக்குப் பிடிக்க முடியாத 'சந்திரா'வில் நீந்தி விளையாடுவதில் ரமணி நிபுணனும்.

''கமால் ஹை, பாய்...'' என்றான் ஹமீத்கான்.

ஷம்மி சிரித்துக் கொண்டே யிருந்தாள். அவள் சிரிப்பதைப் பார்க்கச் சங்கரனுக்கு அருவருப்பாக இருந்தது.

பார்கள்? இந்த விருந்து எப்பொழுது முடியப் போகிறது?...

புல்தரையில் இரண்டு பூனைக் குட்டிகள் ஒன்றை யொன்று துரத்திக் கொண்டு ஓடின. ஒரு சின்னக் குழந்தை—ஒன்றரை வயதிருக்கும் — அது இந்தக் காட்சியைப் பார்த்துச் சிரித்தது. அதுவும் தான் உட்கார்ந்திருந்த 'ஆடு குதிரை'யை விட்டுப் பூனைக்குட்டிகளைத் துரத்திக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி ஓடியது.

அந்தக் குழந்தை சங்கரனைப் பார்த்ததும் நின்றது. அவன்தான் பூனைக்குட்டிகளுக்குச் சொந்தக்காரன் என்று நினைத்ததோ என்னவோ, அவனைப் பார்த்துக் கொண்டே நின்றது.

''பேபி இதர் ஆவ்...'' என்றான் சங்கரன். குழந்தை தன் வீட்டுக்குத் திரும்பியது. போகும்போது சங்கரனைத்

தேடல்கள்

இந்திரா பார்த்தசாரதி

ரமணி ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு கண்ணாடி தம்ளரைக் கொடுத்தான். சங்கரன் வேண்டாம் என்று மறுத்தான்.

''ஏ பிராமண் ஹை...'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் ரமணி.

சங்கரனுக்கு எரிச்சலாக வந்தது. ஆனால் அந்தக் கூட்டத்தில் எது பேசினாலும் அதனால் பலனில்லை என்பதை அவன் உணர்ந்தான்.

அவன் அந்த அறையை விட்டு வெளியே வந்தான்.

ரமணியின் மனைவியும், கோபுவும் உள்ளே என்ன செய்து கொண்டிருப்

திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு சென்றது. சங்கரன் மனத்தில் சற்று முன்னால் ஏற்பட்டிருந்த அருவருப்பு உணர்ச்சி நீங்கி உற்சாகம் தோன்ற ஆரம்பித்தது.

காலை சூரியன், சுறுசுறுப்பை நடையில் காட்டிப் பள்ளிக்கூடத்துக்கோ, கல்லூரிக்கோ விரையும் இளைஞர்கள், பூனைக் குட்டிகளின் விச்ராந்தியான விளையாட்டு — அந்த ஒன்றரை வயதுக் குழந்தையின் மிரண்ட பார்வை... உலகத்தில்வெறுப்பதற்கு என்னஇருக்கிறது?

சங்கரன் தன் அறைக்குள் சென்றான். குளித்துவிட்டு ஆபீஸ் போக

வேண்டும். டவலை எடுத்துக் கொண்டு குளியலறையை நோக்கிச் சென்றான்.

பின்கட்டு வராந்தாவில் சுவரின் மீது சாய்ந்த நிலையில் கோபு நின்று கொண்டிருந்தான்.

''ஹல்லோ... குட்மார்னிங் கோபு'' அவன் பதில் சொல்லவில்லை. பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

''என்ன பேசாமெ நிக்கறே?..... கோபமா?'' என்றான் சங்கரன்.

''ஐ ஆம் கோயிங் டு கில் ஹிம்...''

சங்கரன் திடுக்கிட்டு நின்றான். ரமணியின் காதுகளில் விழுந்துவிட்டால்?... பாவம், இந்த அசட்டுப் பையன் இப்படியா பேச வேண்டும்?

''இப்படிப் பேசக் கூடாது...'' என்றான் சங்கரன் மெதுவாக.

அப்பொழுது கோபுவின் அம்மா ஒரு பெரிய தட்டில் வறுவல் எடுத்துக் கொண்டு போனாள். அவள் சங்கரனைப் பார்த்ததும் இலேசாகப் புன்னகை செய்தாள். அந்தப் புன்னகை சங்கரனைப் பிழிந்து எடுத்தது.

''பார்த்தேளா?... இந்தத் தடியன்களுக் கெல்லாம் எங்கம்மா வேலைக்காரியா?'' என்றான் கோபு. அவன் குரல் அடைத்துக் கொண்டது.

சங்கரனால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. குளியலறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான். எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும். அருவி போல் மேலே விழுகின்ற தண்ணீரின் குளுமைதான் இந்தக் கணத்தின் சத்தியம். வேறு ஒரு நினைவும் வரக் கூடாது. ரமணி எக்கேடு கெட்டுப் போனால் தனக்கென்ன?... தான் இந்த வீட்டில் வாடகைப் பணம் கொடுத்துக் கொண்டிருக்கும் குடித்தனக்காரன்.

ரமணி ஏன் இப்படி இருக்கிறான்? சிலந்தி போல் தன்னைச் சுற்றி ஒரு வெறுப்புத் திரையைப் படர விட்டுக் கொண்டு உள்ளிருந்து எட்டிப் பார்ப்பதுதான் அவனுக்கு இன்பத்தைத் தருகின்றதா?.... அவன் தன்னைத் தானே வெறுக்கிறான் என்பதற்கு இதைத் தவிர, வேறு நிரூபணம் எதற்கு? வெறுப்பு அவனிடமிருந்தே புறப்பட்டு அவனையே மூடி மறைக்கிறது. சிலந்தி என்று சொன்னது சரிதான். ரமணியைப் பார்த்தபோது தனக்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட உள்ளுணர்வு சரிதான்... பாவம், இவன்தான் அநுதாபத்துக்குரியவன்!....

சே.. இவர்களைப் பற்றி நினைக்கக் கூடாது என்று தீர்மானித்தாலும் மனம் திரும்பத் திரும்ப இவர்களைச் சுற்றியே வளைந்து வருகிறது...

சங்கரன் குளித்து விட்டு வெளியே வந்தான். கோபு நின்ற இடத்திலேயே இருந்தான்; அசையவில்லை.

உள்ளே உஸ்தாத் ஹமீத்கானின் பலமான சிரிப்பு கேட்டது. அதைத் தொடர்ந்து ஷம்மியின் கிறீச்சிட்ட குரல் எழுந்தது.

''கோபு! உள்ளே போய்ப் படுத்துக் கொள்...'' என்றான் சங்கரன்.

கோபு பதில் சொல்லவில்லை. அவனுடைய மௌனம் அந்த வீட்டையே நிறைத்து, வீட்டையும் வீட்டிலுள்ளவர்களையும் அஸ்திவாரத்தோடு ஆட்டும் பூகம்பத்தைப் போலிருந்தது. மௌனத்துக்கு இவ்வளவு சக்தி இருக்குமா?... சங்கரன் அதை இப்பொழுதுதான் உணர்ந்தான்.

சங்கரன் கோபுவின் தோள்களைத் தொட்டான். அவன் கீழே குனிந்து கொண்டான்.

''கெட்டவா யாருன்னு கேட்டேளே? இவாதான் கெட்டவா... இவாளை...''

கோபு பற்களைக் கடித்தான். மண்டை ஓடு சிரிப்பது போலிருந்தது. சங்கரன் தன் அறைக்குள் நுழைந்தான்.

சங்கரனுக்கு அன்று ஆபீஸில் வேலையே ஓடவில்லை. வராந்தாவில் நின்றுகொண்டு கோபு பற்களைக் கடித்த காட்சி அவன் மனத்தைவிட்டு அகலவில்லை.

மத்தியானத்துக்கு மேல் அனுமதி பெற்றுக் கொண்டு நேரே சினிமாவுக்குப் போனான். 'வொய்ல்ட் வெஸ்ட்' படம். அவனுக்கு இத்தகைய படங்களைப் பார்ப்பதில்தான் ஆர்வம் அதிகம். படத்தில் விறுவிறுப்பான நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும். குழந்தைத்தனமான ரஸனை இது என்று அவனுக்குத் தெரிந்ததுதான்.

ஸ்டீவன்ஸனைப் பற்றி அன்று கோபுவுக்குச் சொன்னது தனக்கும் பொருந்தும். ஸ்டீவன்ஸன் ஓரிடத்தில் எழுதியிருப்பது அவன் நினைவுக்கு வந்தது. ''பைபிளைக் கையில் வைத்துக்கொண்டு 'அன்பே கடவுள்' என்று முணுமுணுக்கும் பாதிரி, மானசீகக் குதிரை மேல் ஏறிக் கையில் கத்தி, கேடயத்துடன் எதிரியுடன் கற்பனையில் சண்டை போட்டுக்கொண்டிருக்க மாட்டாரென்பது என்ன நிச்சயம்?''


அவனுக்கு டிக்கட் கிடைக்கவில்லை. தியேட்டரை விட்டு வெளியே வந்தான்.

''தோ ரூப்யா டிக்கட் பாஞ்ச் ரூப்யே, சாஹிபே?''

அவன் டிக்கட்டை வாங்கிக் கொண்டு மறுபடியும் உள்ளே போனான்.

தியேட்டர் பொங்கி வழிந்தது. சோம்பேறிகள் நிறைந்த நாட்டில்,

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன்ட் செய்யப்படுகிறது அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக



கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோ ஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுர வேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.



புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' <u>அதிவேகமாக</u> **வலியை வெளியே இழுத்துவிடுகிறது.**

நிகோலஸ் (N) தயாரிப்பு

AG.37.TAM

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

இந்த விறுவிறுப்பான படங்களுக்கு மவுசு இருப்பதில் ஆச்சரியமில்லை. படங்களிலாவது சுருசுருப்பு இருக்கிறதே!

படம் ரசிக்கவில்லை. ஒரு பாதிரி எடுத்த படம் போலிருக்கிறது. குதிரைகள்தான் செத்தன. மனுஷன் ஒருவன்கூடச் சாகவில்லை.

'ரீகலில்' ஆறும் நம்பர் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தான் சங்கரன். கூட்டம் அதிகமில்லை. பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒருவனும் தூங்கி வழிந்து கொண்டிருந்தான். ராஜஸ்தானி போல் இருக்கிறது; தொழிலாளி. வேலை செய்த களைப்பாக இருக்கும்.

புதுடில்லி நகரசபைக் கட்டடத்தில் மணி ஒன்பதாகி யிருந்தது. சங்கரன் தன் கடிகாரத்தைப் பார்த்தான். அது ஓடவில்லை. சாவி கொடுக்கச் சோம்பலாக இருந்தது. லோதி ரோட் வந்ததும் சங்கரன் கீழே இறங்கினான்.

''ஹலோ...''

சங்கரன் திரும்பிப் பார்த்தான்.

சுந்தரம்!

''நீயும் இந்தப் பஸ்ஸிலேதான் வந்தியா?'' என்று கேட்டான் சங்கரன்.

''ஆமாம்... நீ 'ரீகல்லே' ஏறினே. பார்த்தேன். நான் கரோல்பாகிலிருந்து வரேன். நீ 'டிரைவர்' பக்கத்திலே உட்கார்ந்தே... எதுக்காகச் சத்தம் போடணும்னு விட்டுட்டேன்... என்ன சினிமாவா?'' என்று கேட்டான்.

''ஆமாம்... ரீகல்லே ஓடறதே...''

''நீ ஒரு சரியான ஆள்டா! படிக்கிறது என்னவோ, சாத்ரே, காஃப்கா, சாந்தியாயனுன்னு. பார்க்கிறதோ, வெஸ்டர்ன்!''

சங்கரன் சிரித்தான்.

சுந்தரம் கேட்டான்: ''படத்திலே எவ்வளவு பேர் செத்தா?''

''ஒருத்தரும் சாகல்லே. குதிரை தான் செத்தது...''

''அந்தோ, பரிதாபம்! நிஜமா கேட்கிறேன், நீ ஒரு 'சாடிஸ்ட்'டோ?''

''அது கிடக்கட்டும்... எங்கே உன்னை இத்தனை நாளா காணலே?''

''யாரைக் காணலே?...யூ ஆர் வெரி பிஸி வித் ரமணீஸ்...''

''உன்னோட நிறையப் பேசணும்...'' என்றான் சங்கரன்.


''ஆல் ரைட்... ரூமுக்கு வாயேன்...''

''உன் ரூமுக்கு வரணும்னா அறுபத்தி நாலு படி தாண்டியாகணுமே...''

''தூக்கிண்டு போகட்டுமா?...''

சங்கரன் சிரித்தான்.

'சாடிஸ்ட்' என்று சுந்தரம் சொன்னதால் அவனுக்கு ரமணியின் ஞாபகம்



- சுதாகரன்

வந்தது. ரமணி 'சாடிஸ்ட்' இல்லை; 'மாசோச்சிஸ்ட்' என்று நினைத்தான் சங்கரன். ரமணி தன்னைத் தானே வெறுக்கிறான்... அவன் செய்யும் காரியங்கள் அனைத்தும் இந்த வெறுப்பை அடிப்படையாகக் கொண்டவை.

''ரமணி ஒரு 'மாசோச்சிஸ்ட்'னு நினைக்கிறேன்'' என்றான் சங்கரன்.

''ரமணியா?... எப்படிச் சொல்லறே நீ?... அவன் ஒரு அயோக்கியன்னு?''

''திட்டமிட்டு அயோக்கியத்தனம் பண்ணறவா எல்லாருமே 'மாசோச்சிஸ்ட்'ங்கிறது சைகாலஜி. அந்தரங்கமா எதெது பிடிக்கலியோ அதைச் செய்யறதனுலே உண்டாற வேதனையிலே இன்பம் காண்கிறவன் மாசோச்சிஸ்ட்... டான் யுவான் ஒரு மாசோச்சிஸ்ட். அவனுக்குப் பெண்களைக் கண்டால் பிடிக்காதாம். ...பெண்களைச் சுத்திண்டு அலையறவன் பெரிய துறவியாயிடறான்.''

''அப்படின்னு ரமணி ரொம்ப நல்லவங்கிறே, நீ?''

''தெரியாது. யோசிக்கிறதை மனம் விட்டுச் சொல்லறேன்...''

''அப்போ ஒவ்வொருத்தருக்குள்ளே இன்னொரு ஆள் ஒளிஞ்சுண்டு இருக்காங்கிறே...''

''இது உனக்குத் தெரியாத விஷயமில்லை.''

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டு வருவதற்குள் சுந்தரத்தின் வீடு வந்தது.

''என்ன, மேலே வரயா, சொல்லு.''

''வரேன்.''

அறுபத்தி நான்கு படிகள் என்பதோடு மட்டுமல்லாமல், ஒரே இருட்டு. இவர்கள் முதல் படியில் காலை வைத்ததும் அங்கு படுத்துக் கொண்டிருந்த ஒரு கறுப்பு நாய் வெளியே ஓடியது.

''என்னடா இவ்வளவு இருட்டா இருக்கு?'' என்று கேட்டான் சங்கரன்.

''விளக்குப் போட்டா திருடிண்டு போயிடறுங்க. நம்ப சமூகம் அவ்வளவு நாணய சமூகம்'' என்றான் சுந்தரம்.

''ஒரே தாகமா யிருக்கு'' என்றான் சங்கரன்.

''மேலே வா. 'ரம்' தரேன்.''

'' 'ரம்'முக்காக அறுபத்தி நாலு படி ஏறணுமா?''

''அப்படீன்னு இங்கேயே இரு, எடுத்துண்டு வரேன். உன் ரூமுக்குப் போவோம்...''

''என் ரூமுக்கா? நோ நோ...அந்தப் பையன் இருக்கான், கோபு... அவன் என்னையும் தெய்வமாக்கி விட்டான்.. அவன் எதிரே...''

''உன்னையும்னு?''

''அவனோட அம்மா ஏற்கனவே ஒரு தெய்வம்...''

சுந்தரம் சிரித்தான்.

''எதுக்குச் சிரிக்கறே?''

''நீயும் வேஷம் போட ஆரம்பிச்சாச்சு. பார்க்கிலே பார்த்த ஒரு பையன் அபிப்பிராயத்திலே நீ உயரணும்னு என்ன தீவிரம்! ரமணியோடு போட்டி போடப் போறியா, வைதிக சமாஜ் காரியதரிசி பதவிக்கு...?''

சங்கரன் சொன்னான்: ''உன்னைக் கண்டா இதான் எனக்குப் பிடிக்கல்லே. யு ஆர் வெரி குருட்....''

''அப்படிச் சொல்லாதே. உன் மூஞ்சிக்கெதிரே கண்ணாடியைப் பிடிச்சுண்டு நிக்கறேன். உனக்கு உன் மூஞ்சியையே பிடிக்கலே...''

''ஆல் ரைட்... மேலே ஏறு.''

''இங்கேதானே?''

''ஆமாம்.''

மாடியில் நான்கு அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் ஒரு குடும்பம். சுந்தரம் மட்டும் தனியாக இருந்தான்.

சுந்தரத்துக்குக் கிடைக்கும் சம்பளத்துக்கு அவன் நல்ல இடமாகப் பார்த்துக்கொண்டு போகலாம். ஆனால் அவன் ஒரு பிடிவாதக்காரன். சோம்பேறி. ஓர் இடத்தில் இருந்தானானால், அப்புறம் அவனை அசைக்க முடியாது.

சுந்தரத்தின் அறைக்குப் பக்கத்திலிருந்த குடும்பத்தில் ஏழெட்டுப்பேர். ஐந்தாறு குழந்தைகள், கணவன் மனைவி.

''நமஸ்தே அங்கிள்ஜி!'' ஓர் ஆறு வயதுப் பெண் சுந்தரத்தைப் பார்த்துக் கைகூப்பினாள்.

அழுக்குச் சட்டை. தலை மயிர் சடை சடையாகத் தொங்கியது. தாயிடம் பால் சாப்பிட்டுக் கொண்டிருந்த கைக் குழந்தையின் கால் விரல்களுடன் அச்சிறுமி விளையாடிக் கொண்டிருந்தாள். சங்கரன், சுந்தரம் ஆகிய இருவரையும் கண்டதும், தாய் புடவையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். குழந்தையின் தலை மறைந்தது.

சங்கரன் உள்ளே நுழைந்ததும் கட்டிலில் உட்கார்ந்தான்.

''இரு... கிளாஸ் தம்ளர் வாங்கிண்டு வரேன்...''

''எங்கிருந்து?''

''கீழ் வீட்டுக்கார அய்யங்கார் வாங்கிண்டு போனார் நேத்திக்கு...'' சுந்தரம் இலேசாகக் கண்ணைச் சிமிட்டி விட்டுச் சென்றான்.

மேஜையின் மீது பத்திரிகைகளும், புத்தகங்களும் தாறுமாறாகக் கிடந்தன. சுந்தரம் பட்டினி கிடப்பானே தவிர, மாசம் ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் புஸ்தகங்கள் வாங்கத் தவறமாட்டான்.

மேஜையின் கீழே அழுக்குத் துணி மூட்டை கூடையில் வைக்கப் பட்டிருந்தது. பாரம் தாங்காமல் கூடை சாய்ந்திருந்தது. எழுந்து போய்க் கூடையைச் சரியாக எடுத்து வைத்தான் சங்கரன். கூடைக்குள்ளிருந்து ஒரு சுண்டெலி வெளியே ஓடியது.

தம்ளர்களை வாங்கிக் கொண்டு வந்தான் சுந்தரம். கையில் இரண்டு பொட்டலங்கள். ஒரு சின்னக் கூடையில் சோடா.

சங்கரன் அவற்றைப் பார்ப்பது கண்டு அவன் சொன்னான்: ''சிப்ஸ்... அய்யங்கார்கிட்டே சோடா கடன்.''

சுந்தரம் மூலையிலிருந்த 'ஸ்டூலை' நகர்த்திக் கட்டிலுக்கெதிரே போட்டான். பெட்டியைத் திறந்து, 'ரம்'மை எடுத்து இரண்டு தம்ளர்களிலும் ஊற்றினான். சோடா பாட்டிலை உடைத்துச் சோடாவை அவற்றுடன் கலந்தான்.

''சியர்ஸ்...''

''சியர்ஸ்...''

''என்னமோ நிறையப் பேசணும்னு சொன்னியே, பேசு...'' என்றான் சுந்தரம்.

''நிறைய எலி இருக்காடா இங்கே? நான் அந்தக் கூடையை நகர்த்தினேன். சுண்டெலி ஓடித்து...''

'' 'வீ கோ—எக்ஸிஸ்ட்'...பார்க்கப் போனா அதுகளெல்லாம் எனக்கு முன்னாலிருந்து இந்த வீட்டிலே இருந்துண்டு வரது. உரிமை ஜாஸ்தி!''

''ஏன் நீ வேறே ரூமுக்குப் போகக் கூடாது?'' என்று கேட்டான் சங்கரன்.

''அது கிடக்கட்டும், என்னவோ சொல்லணும்னே நீ. இப்போ பேச்சை மாத்தறே...''

சங்கரன் சிரித்தான். ''ஆல்ரைட். பேசுவோம்'' என்றான் அவன். **(தொடரும்)**

உங்களுக்கு விருப்பமான
ஹார்வி துணியைத் தேர்ந்தெடுங்கள்



ஹார்வி

டுவின் டஸ்கர்

அதிநேர்த்தியான தரமுள்ள துணிகள் — பாப்ளின்கள், டிரில் வகைகள், லாங் கிளாத் முதலியன — விலையில் சுபமானவை, உறுதியானவை. நீடித்து உழைப்பவை. பல சலவைகளுக்குப் பிறகும் அவைகளின் மிருதுவான அமைப்பும் 'புதுத் தன்மையும்' குன்றிருக்க வேண்டி சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டவை.

ஹார்வி

ஸாராடோகா

'டெரீன்' காட்டன் ஷர்டு துணிகள்

மாசற்ற செசவும், பகட்டான தோற்றமுமுள்ள இந்த ஷர்டு துணிகள் மனதுக்குப் பிடித்த பற்பல வண்ணங்களில் அளிக்கப் படுகின்றன.





ஹார்வி

ஸாராபாண்ட்

'டெரீன்' இணைந்த ஸூட்டிங் துணிகள்

ஆடவர்களின் சீருடைக்கு என்றைக்கும் ஏற்றவை. தேர்ந்தெடுக்க வசதியாக, நேர்த்தியான வெள்ளை நிறத்திலும் மற்றும் லேசான க்ரே முதலிய பல நிறங்களிலும் இவை வழங்கப்படுகின்றன.

Bensons-1066 [ITAM

தயாரிப்போர்:
மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்

அத்தியாயம் 3

இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன.

இந்த இரண்டு மாத காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களில் முதலாவதாக நிகழ்ந்ததும், முதலாவதாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதும், ஆர். கே. ராமலிங்கம்பிள்ளை வீடு மாற்றியதுதான். விஜயாவும் ரங்கராஜனும் சந்திப்பது — தூரத்தில் நின்று பார்ப்பதும்கூட — அந்த இருவருக்கு மட்டுமின்றி, இரண்டு வீடுகளிலும் உள்ள ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதத்தில் வேதனை செய்யும் என்று அவர் கருதினார். அந்தச் சமயத்தில் மணல்ரோட்டில் இருந்த அவருடைய பங்களாவின் கீழ்ப் பகுதி காலியாயிற்று. அதன் மாடி எப்பொழுதும் ராமலிங்கம் பிள்ளையின் உபயோகத்திலேயே இருந்து வந்தது.

''நீங்கள் சந்திப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இங்கே இருந்துகொண்டே அந்த அம்மாளைப் பார்க்காமல் உன்னாலே இருக்க முடியுமா?.... வா, போகலாம். எப்படியும் இந்த ஊரில் தான் இருக்கப் போகிறோம். அன்னிய நாட்டுக்குப் போயிடப் போறதில்லை. என்ன சொல்லறே, விஜயா?''

அவள் எதுவும் சொல்ல முடியாமல் அழுதாள். பிறகு நிதானமாக யோசித்தாள். கடைசியில் தந்தையின் தீர்மானம் சரியான தீர்மானமே என்று தெளிந்து இணங்கினாள்.

அப்போது ரங்கராஜனிடம் வந்து சொல்லிக் கொண்டு விடைபெறவும் அவர் விரும்பவில்லை.

அடுத்த வாரம் சுந்தரி தன் குழந்தையோடு திருச்சியிலிருந்து வந்தாள். தமையனுக்கு அனுதாபமும் காட்டினாள்; புத்திமதியும் சொன்னாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவனை வற்புறுத்தித் தன்னோடு திருச்சிக்கு அழைத்துக் கொண்டு சென்றாள். ரங்கராஜன் அங்கே போய் மூன்று நாட்கள்தான் இருந்தான். அதற்கு மேல் அவனால் அங்கே இருக்க முடியவில்லை. பெற்றோரையும், சித்தப்பா குடும்பத்தையும் மீறி எதுவும் செய்யக் கூடாது என்ற உபதேசத்தையே சுந்தரி அல்லும் பகலும் அவனுக்குச் செய்து கொண்டிருந்தாள். அவனுக்குக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய் விட்டது. நான்காம் நாள் அவளைப் பார்த்து, ''சுந்தரி! எனக்கு மனசு நிம்மதியே இல்லை. எங்கேயாவது குற்றாலம் கொடைக்கானல்னு புறப்பட்டுப் போய் ஒரு பத்துப் பதினைந்து நாள் இருந்துட்டு வர்றேன்'' என்று சொல்லிக் கொண்டு அப்பொழுதே புறப்பட்டான்.

குற்றாலத்துக்குப் புறப்படுமுன் அவன் அம்மாவுக்கு ஒரு கார்டு எழுதிப் போட்டான், தன்னைக் குற்றாலத்துக்கு யாரும் தேடி வரவேண்டாம் என்று.

தனியாக இருந்து ஒவ்வொன்றையும் சாவதானமாக ஆலோசித்துப் பார்த்த




பின், உண்மை பயங்கர உருவத்தில் முகம் காட்டியது. புதையல் எடுப்பதற்காகத் தோண்டியவன் பூதத்தைப் பார்ப்பது போல் ஆகிவிட்டது.

'விஜயாவைக் கல்யாணம் செய்து கொள்வது என்பது இந்த ஜன்மத்தில் சாத்தியமில்லை. சித்தப்பா பேச்சை அப்பா மீற மாட்டார். அப்பா நினைப்பதைத்தான் சித்தப்பா பேசுகிறார். அப்பாவையும் அம்மாவையும் தனித் தனியே பிரிப்பது பாவம் என்பது ஒரு புறம் இருக்க, அதற்கு ராமலிங்கம் பிள்ளையும் தயாராக இல்லை. கடைசியில்..... சாத்தியமே இல்லை.

இந்த உண்மை புலப்பட்டதும் அவன் முதலில் செயலற்றுச் சோர்ந்தான். பிறகு விரக்தியும், ஆக்ரோஷமும், ஆத்திரமும் ஏற்பட்டன. யார்மீது ஆத்திரம் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அந்த ஆத்திரம் அவனையும் அறியாமல் அவன் மீதும் திரும்பியது. யார் மீது திரும்புவதற்கும் தயாராக இருந்தது. விஜயாவைப் பற்றி நினைக்கும்போது ஆத்திரம் இல்லை என்றாலும், அதை அடிப்படையாகக் கொண்டுதான் நினைக்க முடிந்தது..... ''அவள் பணக்காரன் மகள்.... நல்ல சுபாவம்தான்...எளிமையாகவும் இருந்தாள். ஆனால் எத்தனை நாட்களுக்கு? மனசில் சந்தோஷம் பிறந்ததும், எளிமையை உதறி விட்டாள். 'எப்பொழுது' என்று காத்திருந்தவள் மாதிரி பணக்காரி வேஷம் போட்டுக் கொண்டு என்னைத் திருப்பரங்குன்றத்துக்கு அழைத்துச் சென்றாள். மனப்பான்மையும் அதற்குத் தக்கபடியே மாறி விட்டது. முந்நூறு ரூபாயை ஏழைகளுக்குக் கொடுக்க மாட்டாளாம்! ஏழைகள் கஷ்டப்படுவதற்கு அவர்களுடைய சோம்பேறித்தனமே காரணமாம்!.... அந்தப் பைத்தியக்காரனிடம் நான் பிரியமாகப் பேசுவதே அவளுக்குப் பிடிக்கவில்லை. சன்னாசிப்புதூர் நிர்மலாவுக்கு நான் பணம் கொடுத்தது தெரிந்தால் என்ன செய்வாள்? ..... ஒன்று நிச்சயம். இப்பொழுது அவள் என் மனைவியாக இருந்தால் நான் இரக்கப்படுவதெல்லாம் தப்பு என்று சீறியிருப்பாள்.... ஒரு வகையில் அவளும் சித்தப்பாவும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள்....''

ரங்கராஜன் மதுரைக்குத் திரும்பி வந்தபோது அவனுடைய பெற்றோர்கள் வீட்டில் இல்லை. சமையற்காரக் கிழவிதான் இருந்தாள். அவன் இருக்கும் விலாசம் தெரியாமல் அவனுடைய தந்தை தவித்ததையும், பெற்றோர்கள் இருவரும் முந்தின நாள்தான் ஒரு கல்யாணத்துக்காக ஸ்ரீவில்லிபுத்தூருக்குப்




தாயிடமிருந்து மகளுக்கு வரும்
உட்வர்ட்ஸ் அறிவுரை

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

கிரைப் வாட்டர்

தலைமுறை தலைமுறையாக புத்திசாலித் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர். குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புக் கோளாறுகள் ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ்



காத்துக் கொள்வீர் கண்டிப்புடனே.
எப்போதும் ஒரு புட்டி
உங்கள் கைவசமிருக்கட்டும்



உட்வர்ஸ் கிரைப் வாட்டர்
நூறு ஆண்டுகளுக்கு மேலாக
புத்திசாலித் தாய்மார்களால்
உபயோகிக்கப் பட்டு வருகிறது.

AT. 30 TM

புறப்பட்டுப் போனதையும், அப்படியே சாத்தூருக்கு வந்து இரண்டு நாட்கள் இருந்து விட்டுத்தான் மதுரைக்குத் திரும்புவார்கள் என்ற செய்தியையும் கிழவி சொன்னாள்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் கல்யாணம் என்றால், அது சித்தப்பாவின் மனைவி வகையில் உறவினர்களாக உள்ளவர்கள் வீட்டுக் கல்யாணமாகத்தான் இருக்க முடியும் என்று ரங்கராஜன் தெரிந்து கொண்டான்.

அம்மா இல்லாத வீடு பாலைவனமாக இருந்தது. விஜயாவின் வீட்டில் வேறு யாரோ வந்து குடியிருந்தார்கள். தெருவே பாலைவனமாய்ப் போய்விட்டது. அவனுக்குக் கண்ணீர் வந்தது. அது அவனுடைய ஆத்திரத்தையும் விரக்தியையுமே அதிகப்படுத்தியது. 'சமயம் வரட்டும்' என்று மனசுக்குள் கறுவிக் கொண்டவன்போல் அன்று மாலையில் முத்துக்குமார் வீட்டுக்குப் போனான் ரங்கராஜன். அங்கே அவன் எதிர்பாராத விதமாகத் திண்டுக்கல், பாலுவைச் சந்தித்தான். அவனைப் பார்த்த மாத்திரத்தில் ரங்கராஜனின் ஆத்திரமும் விரக்தியும் தணிந்துவிட்டன. உள்ளம் நெகிழ்ந்தது; உருகியது. அன்றிரவு பாலுவைத் தன் வீட்டிலேயே வந்து தங்கும்படி அழைத்தான்.

அத்தியாயம் 4

ரங்கராஜனும் பாலுவும் இரவில் சாப்பிட்டு விட்டு, மாடிக்குப் போய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஐந்து ரூபாய் மணியார்டரைத் தனக்கு அனுப்பி யிருக்க வேண்டாம் என்றும், அதைக் கடனாகத் தான் பாவிக்கவில்லை என்று ஏற்கனவே சொல்லிவிட்டதை மீண்டும் நினைவுபடுத்தியும் பேச்சைத் தொடங்கிய ரங்கராஜன், சிறிது நேரத்தில் பாலுவின் குடும்ப வரலாற்றையே விவரமாகக் கேட்டான்.

''மாசா மாசம் சம்பளம் வாங்குறீங்க. அப்படியிருக்க என்ன கஷ்டம்? என் கிட்டே சும்மா சொல்லலாம்'' என்று ரங்கராஜன் தூண்டவே, முதலில் தயங்கிய பாலு அப்புறம் அளவுக்கு மேலேயே கதையை விரித்துச் சொல்ல ஆரம்பித்து விட்டான். அதில் அவனுக்கு ஓர் ஆறுதல் தென்படவே, கதை நள்ளிரவுக்கு அப்பாலும் நீண்டது.

பாலுவின் அப்பா திருச்சி ஜில்லாவிலிருந்து பிழைப்புத் தேடித் திண்டுக்கல்லுக்குக் குடும்பத்துடன் வந்ததையும், வேலை கிடைத்த பிறகு அவர் சூதாடியாக மாறியதையும், அதன் காரணமாக அவருக்கும் அவனுடைய தாயாருக்கும் ஓயாத சண்டையாக இருந்ததையும், மனைவியின் இம்சையையும், கடன் தொல்லையையும் பொறுக்க முடியாமல் அவர் எங்கோ போய் விட்டதையும் சொன்னான் பாலு.

தன்னுடைய மூத்த தங்கை கல்யாணமாகி மணப்பாறையில் குடியும் குடித்தனமுமாக இருப்பதைச் சொன்னான். தனக்கு மூன்று பெண் குழந்தைகள் இருப்பதையும், தன் மனைவிக்கும் தனக்கும் நிரந்தர மனஸ்தாபம் இருந்து வருவதையும் சொன்னான்.

கடன் தவணைகளுக்கு மாதா மாதம் பணம் கட்டுவது, வைத்தியச் செலவு உட்படக் குடும்பச் செலவுகளுக்குச் செலவழிப்பது, சம்பளம் போதாமல் மேலும் மேலும் அநியாய வட்டிக்குக் கடன் வாங்குவது, தன் தாயார் சம்பளப் பணத்தில் அவ்வப்போது பெருந் தொகைகளை வாதாடி வழக்காடிப் பறித்துக்கொண்டு போய் மணப்பாறையில் உள்ள மகள் குடும்பத்துக்குச் செலவழிப்பது, மூத்த தங்கையும் அவள் கணவனும் கூடிப் பேசிக் கொண்டு அம்மாவிடம் ஆயிரம் பஞ்சப் பாட்டுப் பாடிப் பணத்தை வாங்கிக் கொண்டேயிருப்பது — இத்தனை விவரங்களையும் சொன்னான் பாலு. அப்போது நள்ளிரவு ஆகிவிட்டது.

பாலுவின் கதையைக் கேட்கக் கேட்க ரங்கராஜனுக்கு மனசு தாங்கவே இல்லை. சன்னசிபுதூர் விதவை நிர்மலா அடிக்கடி ஞாபகத்துக்கு வந்து கொண்டேயிருந்தாள். இப்படிக் கஷ்டப்படுகிறவர்கள் எல்லாம் உலகத்தில் இருக்கத் தன் மனக் கஷ்டத்தைப் பெரிதாக நினைப்பதையும், தனக்காகத் தன் தந்தையும் சித்தப்பா குடும்பமும் படும் மன வேதனையைப் பொருட்படுத்துவதையும் எண்ணி அவன் வெட்கினான்.

''மிஸ்டர் பாலு! உங்க இன்னொரு சகோதரி எப்படி இருக்கிறாங்க?'' என்று கேட்டான் ரங்கராஜன்.

பாலு அவளைப் பற்றிச் சொல்லத் தொடங்கியபோது அவளுடைய பெயரையும் உச்சரித்து விட்டான்.

''நிர்மலா துயரம்தான் பெரிய துயரம். அவளை நினைக்கிறப்போதான்...''

''நிர்மலாவா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் ரங்கராஜன்.

"ஆமாம். என் தங்கைதான்..."

"பேரு நிர்மலாவா!"

"ஆமாம்... அவளுக்கு வயிறு நிறையச் சோறு போடக்கூடச் சக்தி இல்லாமல் இருக்கிறேன். அவளுக்குக் கல்யாணம் பண்றது எங்கே? போதாக் குறைக்குக் கால் வேறு அப்படி ஆயிட்டது...." — பாலு அழுதுவிட்டான்.

"எனக்கு நம்பிக்கையே இல்லே, ஸார்! அவளும் 'கன்னியாகவே இருந்து சாகப் போறேன். அதுதான் என் தலையெழுத்து'ன்னு வாய்விட்டே சொல்லு!"

பாலுவுக்குப் பேச முடியாமல் தொண்டை விக்கியது.

"நடக்கவே முடியாதா, மிஸ்டர் பாலு?"

"நடப்பாள். ஆனால் இலேசாக நொண்டுவாள். யார் கல்யாணம் பண்ணிக்குவாங்க? அவளைப் பார்த்தால் என் மனசே உடைஞ்சு போகுது..."

ரங்கராஜனுக்குக் கண் கலங்கியது. அவளுக்கு இருபத்தைந்து வயது இருக்கும் என்று முன்பொரு நாள் முத்துக்குமார் சொன்னது அவன் ஞாபகத்துக்கு வந்தது.

விக்கி விக்கி முகத்தை மூடி அழுது கொண்டிருந்தான் பாலு. ரங்கராஜன் அவன் அருகே எழுந்து வந்தான். அவன் முதுகில் கை வைத்து "அழாதீங்க" என்று திரும்பத் திரும்ப ஆறுதல் சொன்னான். அவன் அழுவதை நிறுத்தவேயில்லை. ரங்கராஜன் திரும்பவும் தன் இருப்பிடத்தில் வந்து அமர்ந்து கைகளால் நெற்றியைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு கண்களையும் மூடிய வண்ணம் ஒரு நிமிஷம் மௌனமாக உட்கார்ந்திருந்தான். பிறகு ஏறிட்டுப் பார்த்து, "மிஸ்டர் பாலு! இப்படிக் கொஞ்சம் பாருங்க" என்றான்.

அவனும் கண்ணீர் வழிந்த முகத்தோடு ரங்கராஜனைப் பார்த்தான்.

"மிஸ்டர் பாலு! நீங்க கவலைப்பட வேண்டாம். உங்க தங்கையை நானே கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்று மிகவும் மெல்லிய குரலில் சொன்னான் ரங்கராஜன்.

அந்த அமைதியான நள்ளிரவு வேளையில் அவனுடைய வாசகம் சன்னமான மின்னலைப் போல், அதற்குரிய ஒளியோடும் வேகத்தோடும் பாலுவின் செவியிலும் நெஞ்சிலும் பாய்ந்தது. அவன் அதிர்ச்சியால் துள்ளி விழுந்தான். கண்களில் தேங்கியிருந்த நீர் கீழே வழியாமல், இரண்டு பெரிய துளிகளாக, கடைசித் துளிகளாகத் திரண்டு விழுந்தது. 'என்ன கேட்டோம், எங்கே இருக்கிறோம்' என்பது தெரியாமல் அவன் விழித்தான்.

ரங்கராஜன் தன் குரலை இன்னும் தாழ்த்தி, ஒலியில் ஏற்ற இரக்கமின்றி, ஏதோ சபதம் போடுகிறவனைப் போன்ற வைராக்கிய பாவனையோடு சொன்னான்: "பாலு! நீங்க நம்பல்லே! அப்படித்தானே? ஏன் உங்களால் நம்ப முடியல்லே?.... நம்புங்க. நான் சொல்லறது உண்மை; சத்தியம்."

பாலு இன்னும் திகைப்பு நீங்காமல், புரியாத பயத்தினால் கைகால்கள் நடுங்க, "ஸார்?" என்றான்.

"சரி, தூங்கலாம். நேரமாயிட்டுது. அந்தக் கட்டிலிலே போய்ப் படுத்துக் கோங்கோ" என்று ஹாலில் கிடந்த கட்டிலைப் பாலுவுக்குக் காட்டிவிட்டு ரங்கராஜன் தன்னுடைய அறைக்குப் போய்க் கதவைச் சாத்திக்கொண்டான்.

அத்தியாயம் 5

மறுநாள் காலை பாலு ஊர்திரும்பிய பிறகு ரங்கராஜன் ராமலிங்கம் பிள்ளையைப்பற்றித்தான் முதலில் நினைத்தான். நேரே அவருடைய ஆபீசை நோக்கி நடந்தான்.

ரங்கராஜன் சுமார் முக்கால் மணி நேரம் அங்கே காத்திருக்க வேண்டியிருந்தது. அப்புறம்தான் அவர் வந்தார். எழுந்து நின்று வணங்கினான் ரங்கராஜன். அவனுடைய தோற்றத்தில் காணப்பட்ட வறட்சியையும், கண்களின் சிவப்பையும் பார்த்த அவர், அவன் ஏதோ ஓர் இக்கட்டான நிலையில்தான் தன்னைப் பார்க்க வந்திருக்கிறான் என்று யூகித்துக் கொண்டுவிட்டார். ஆனால் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. வாய் திறந்து பேசிய முதல் வார்த்தையிலேயே அவர் கனிவையும் உற்சாகத்தையும் கலந்து பேசத் தொடங்கினார்:

"நமஸ்காரம் ஸார்! பார்த்து ரொம்ப நாளாச்சு. என்னை மறந்துட்டீங்களோன்னு கூட நினைச்சிட்டேன். இங்கே வரணும்னு ஒரு நாள் கூட உங்களுக்குத் தோணலை போயிட்டுது!" என்று சொல்லிக் கொண்டே அவன் கையைப் பிடித்துக் கொண்டு தம்முடைய அறைக்குள் அழைத்துச் சென்றார்.

"ஆபீசுக்கு வந்து இப்பத்தான் உட்கார்ந்திருக்கீங்க. இந்த நேரத்திலே உங்ககிட்ட பேச வந்ததற்கு என்னை

EARN 12%

Invest your money at 12% per annum in a Public Limited Company with Foreign Collaboration. Full particulars and information prescribed by the Reserve Bank of India can be made available to intending investors.

Please contact personally or write to:

M. N. DIVAKARAN
'Vanguard House'
(4th Floor)
11-12, Second Line Beach
MADRAS-1
Phone : 28300

பண்டிட்
டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதகம்
ஆரோக்யத்திற்கும், பலத்திற்கும்

அருணா
மாதர்களின் ஆரோக்யத்திற்கு

பாலப்ராஸ
குழந்தைகள் டானிக்

ரக்த சோதகா
சிறந்த ரத்தசுத்தி ஔஷதம்

சயவனப்ராசனம்
இருமலுக்கு

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட்
100, ரோட், சென்னை-17

செப்டம்பர் 15 முதல்

சிந்தை இனிக்கும் செய்தி!

மாண்புமிகு நிதியமைச்சர்
கே. ஏ. மதியழகன் துவக்கிய

தென்னகம்

கி. மனோகரன் எம். ஏ; எம். பி.,
அவர்களை ஆசிரியராகக் கொண்டு......

பேரறிஞர் அண்ணா அவர்களின்
புனித இலட்சியங்களை
கொண்டு வரும்!

புதிய கண்ணோட்டம்...
புதிய சிந்தனை...
புதிய கருத்தோட்டம்...

இவற்றோடு

கூட்டுச் சக்தியாம் கழகக் குடும்பத்திற்கு
இது ஒரு கொள்கை முரசம்!
ஒப்பற்ற வார ஏடாய் வெளிவருகிறது!

விவரங்களுக்கு:

தென்னகம்
122, டாக்டர் நடேசன் சாலை
சென்னை-5


உலோகம் கனமானது...
ஆனால் பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் இலேசானவை
உலோகத்தின் உறுதி, கண்ணாடியின் எழில், ஆனால் இவற்றின் குறைபாடுகளற்றது—அதுதான் உங்களுக்கான பிளாஸ்டிக். இலேசு, நீடித்த உழைப்பு, வண்ணங்கள், சுத்தம், வசதி, இவையனைத்தையும் உங்களுக்கென அற்புதமாக இணைத்து வழங்குகிறது பிரைட் பிளாஸ்டிக்.
பிரைட் பிளாஸ்டிக்கில் விதவிதமான வகைகள், வகை வகையான பொருட்கள். அளவிலாப் பயனளிக்கும் ஏராளமான சாமான்கள். சீப்புகள், தட்டுகள், சோப்புப் பெட்டிகள், குவளைகள், ஜாடிகள், சாமான் கூடைகள், வாளிகள், பேஸின்கள், டிரேக்கள் இன்னும் பல்பல.
பிரைட் தான் உங்கள் சரியான தேர்ந்தெடுப்பு!
பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்.,
156—ஏ, தார்தேவ் ரோடு,
பம்பாய்-34.

மன்னிக்கணும்... இப்போ நான் பேசாமல் கூடத் திரும்பிடலாம்னு நினைக்கிறேன். உங்களைப் பார்த்ததே எனக்கு இப்போ போதும். தெய்வ தரிசனம் கிடைச்ச மாதிரி இருக்கு எனக்கு. நான் போயிட்டுச் சாயங்காலம் வரட்டுமா?'' என்று கேட்டான் ரங்கராஜன்.

அவன் பேசி முடிக்கும்வரையில் காத்திருந்து விட்டு அப்புறம் கேட்டார்:

''ஸார், இப்போ மட்டுமில்லே, நான் நோய்ப் படுக்கையிலே அரை உயிர், கால் உயிரோடு படுத்திருந்தாலும் கூட நீங்க என்கிட்ட வரலாம்; பேசலாம்....''

''நீங்க என்கிட்டே இவ்வளவு அன்பு காட்ட வேண்டாம். அந்த யோக்கியதையை நானாகவே உதறிவிட்டேன். உங்கள் ஆதரவும் ஆசீர்வாதமும் இருந்தால் போதும். நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன் — ஓர் ஏழைப் பெண்ணை....''

அப்புறம் ஒரு நிமிஷம் அவனும் பேசவில்லே; அவரும் பேசவில்லே. முகத்தை முகம் பார்த்துக் கொண்டிருந்தது.

''அவள் எங்க வீட்டில் யாருக்குமே, எனக்குமே முன் பின் தெரியாதவள். அவள் வந்துட்டதனாலே என் அப்பாவும் அம்மாவும் தனித்தனியாப் பிரிஞ்சிட மாட்டாங்க. ரெண்டு பேரும் ஒரு கட்சியிலேதான் இருப்பாங்க. அத்தோட அவங்க விருப்பு வெறுப்பைப் பத்திக் கவலைப்பட வேண்டிய அவசியமும் அவளுக்கு இராது... இல்லையா?''

''சொல்லுங்க...''

''எனக்கு என்னமோ இப்படி முடிவு பண்ணணும்னு தோணிட்டது. என் வாழ்க்கையிலே நானும் ஒரு மனுஷனா வாழ்ந்தேன் என்கிறதுக்கு இந்த ஒரு நல்ல காரியத்தையாவது செய்தாகணும்னு முடிவு பண்ணிட்டேன். நிர்க்கதியா நம்பிக்கை இழந்து தத்தளிக்கிற ஒரு ஜீவனை இப்படி வாழ வைக்கிறது ஒண்ணுதான் என்னாலே செய்ய முடிகிற காரியம். அதைச் செய்தே தீரணும் என்கிற பிடிவாதம் கூட எனக்கு இருக்கு... நீங்க ஆசீர்வதிப்பீங்களா?''

ராமலிங்கம் பிள்ளை உடனே பதில் சொல்லி விடவில்லே. தலையைக் குனிந்து கொண்டு யோசித்தார். சில நிமிஷங்கள் வரை யோசித்துக் கொண்டே யிருந்தார். அவர் வாயிலிருந்து என்ன பதில் வருமோ என்று ரங்கராஜன் கலவரத்தோடு ஒரு சமயமும் சாதகமில்லாத பதில் வந்தால் அதைக் கொண்டே தன் பிடிவாதத்தை இறுகச் செய்து 'நீங்கள் இவ்வளவு சாதாரணமானவர்தானா?'



செல்லாத ஓட்டுக்கு ஜே!

கடந்த ஜனாதிபதி தேர்தலில் 4032 ஓட்டுக்களில் 80 வோட்டுக்கள் செல்லவில்லை (Invalid). காரணம், ஆந்திராவில் எம்.எல்.ஏ.க்கள் தாங்கள் தேர்ந்தெடுக்க விரும்பிய பேரைக் குறிப்பிட்டு, பிறகு ''தெலிங்கானா வி ஜெய்'' என்று எழுதியிருந்தார்கள். கேரளாவில், சில மந்திரிகள் ஜனாதிபதிக்குப் போட்டியிட்ட மூன்று பேரையும் விரும்பவில்லை என்று எழுதியிருந்தார்கள்.

ஆதாரம்: டைம்ஸ்-ஆப் இந்தியா.
தகவல்: பாண்டுரங்கன்.

என்று அவர் முகத்துக்கு எதிரிலேயே கேட்டுவிட்டு வெளியேறி விட வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு சமயமுமாகக் காத்திருந்தான்.

ராமலிங்கம் பிள்ளை நிமிர்ந்து பார்த்தார். கண்களில் சலனமில்லாமல் கேட்டார்: ''ஸார்! நீங்கள் கல்யாணச் செய்தி சொல்ல வந்திருக்கீங்க. நீங்களும் உங்கள் மனைவியும், பெற்றோர்களும் சந்தோஷமா வாழணும்கிற நல் வாழ்த்துச் சொல்லுகிறேன்... இதுக்கு மேல் என்ன சொல்லணும்? என்கிட்ட ஆசீர்வாதம் வாங்கிறது முக்கியமில்லே. உங்க அப்பா அம்மாகிட்ட ஆசீர்வாதம் வாங்குங்க. ஏற்கனவே அவங்க ஆசீர்வாதம் பண்ணி யிருந்தால் எனக்குப் பரம சந்தோஷம்...''

இவ்வாறு சொல்லி விட்டு ''அம்மா சௌக்கியமா?'' என்று அவர் கேட்டார்.

அவன் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல், ''அவள் எந்த ஏழையையும் வெறுக்க மாட்டாள் ஸார். பிச்சைக்காரனைக் கூட கலிகாரம் எடுத்துக்கிட்ட மாதிரி ஊட்டி வளர்க்கிறவள். அவளுடைய ஆசீர்வாதம் எப்பவும் எனக்கு உண்டு. அவள் என்னிக்காவது அழுதால், விஜயாவை நினைச்சுத்தான் அழுவாள்.'' என்றான்.

அவனுடைய கண்கள் கலங்கியதைப் பார்த்த ராமலிங்கம் பிள்ளை, ''விஜயா எங்கேயும் போயிடல்லே. மதுரையிலேதான் இருக்கிறாள். அவளைத் தன் மகளா நினைச்சுட்ட மாதிரி அம்மா

எப்பவோ ஒருசமயம் சொன்னுங்களாம். அவள் எப்பவும் அவங்க மகளாகவே இருப்பாள். உங்க அம்மா பேர் என்ன?''

''ஜானகியம்மாள்'' என்று, கேள்வியின் காரணம் புரியாமல் திகைத்துக் கொண்டே அவன் சொன்னுன்.

''விஜயா அவன் காலத்திலே ஒரு ஜானகியம்மாளா இருப்பாள். அந்த அம்மாளோட அன்புக்கு இதைவிட வேறு என்ன கைம்மாறு செய்யணும்?''

சட்டென்று ஏதோ ஞாபகத்துக்கு வந்தவர் போல் பேச்சை முடித்தார் ராமலிங்கம் பிள்ளை.

''கடைசியா ஒண்ணு கேட்கிறேன். கல்யாணத்துக்கு எங்களை அழைப்பீங்களா?''

''இல்லே'' என்முன் ரங்கராஜன்.

''சரி'' என்முர் அவர். பிறகு, ''நீங்கள் எப்போ நினைச்சாலும் எங்கிட்டே வரலாம். நீங்க கூப்பிட்டாலும் நான் வரத் தயாராயிருக்கிறேன்.''

ரங்கராஜன் எழுந்து விடை பெற்முன். அவர் வாசலுக்கு வந்து, ''காரிலேயே போகலாமே?'' என்முர்.

அவன்தான் மறுத்துவிட்டு நடந்தே வெளியே போனுன்.

அத்தியாயம 6

நடராஜ முதலியாரும் ஜானகியம்மாளும் சாத்தூரிலிருந்து வந்து சேர்ந்தார்கள். தங்கத்தையும் அவர்கள் கூட அழைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். ரங்கராஜன் திண்டுக்கல்லுக்குப் போய்த் திரும்பு முன்னுல் அவர்களிடம் எதுவும் கூறவில்லை.

பானுவின் தங்கை நிர்மலா கொஞ்சம் கறுப்பாகவும் மெலிவாகவும் இருந்தாள். ஆனுலும் பானுவைப் பார்த்துவிட்டு ரங்கராஜன் கற்பனே செய்திருந்த தோற்றத்தை விட அவள் அழகாகவே இருந்தாள். அந்த அளவுக்கு அவளுடைய தோற்றம் மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் என்று அவனுக்குத் திருப்தியும் ஏற்பட்டது. கால் ஊனம் கூட அவ்வளவு அதிகமாகத் தெரியவில்லை. அவளுடைய காலேப் பார்த்து இரக்கம் கொண்டதை விடக் கண்களைப் பார்த்தே அவன் அதிகம் இரக்கம் கொண்டான். கண்களில் அவ்வளவு துயரமும் இருந்தது; அவ்வளவு மகிழ்ச்சியும் இருந்தது.

மதுரைக்குத் திரும்பியதும் அவன் தாயாரிடத்தில் செய்தியைச் சொல்லிவிட்டான்.

''அப்பாவும் சித்தப்பாவும் அவள் குலம் கோத்திரத்தைக் குறை சொல்ல முடியாது. வேணும்னு, அவள் கறுப்பு, நொண்டி, ஏழை—இப்படி எதையாவது சொல்லலாம். எனக்குத் திருப்தி என்கிறபோது அவங்க எதுக்கு ஆட்சேபிக்கணும்? வச்சு வாழப்போறவன் நான்தானே?... இப்படி வச்சிக்கலாம். அவங்களுக்காக நான் விட்டுக் கொடுத்தேன்; எனக்காக அவங்க விட்டுக் கொடுத்துத்தான் ஆகணும். இல்லே, இதை விடப் பெரிய ஒரு சமாசாரத்துக்காக விட்டுக் கொடுக்க வேண்டி வரும். இவளே நான் கல்யாணம் பண்ணிக்காமல் போனுல், ஆயுள் முழுக்க நான் யாரையுமே கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லே....''

ஜானகியம்மாள் ஒன்றும் சொல்லாமல், கண்ணீர் விட்டுக் கொண்டே அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா, நீ ஏன் அழுறே?''

''எனக்கே தெரியல்லே. உங்க அப்பாகிட்டே போய்ப் பேசு, ராஜா! இதுக்கு மேலே என்கிட்ட எதுவும் சொல்லாதே!''

''நான் பண்ணின முடிவு உனக்குப் பிடிக்கவில்லையா? இப்படி நான் முடிவு பண்ணினதுக்கே நீதான் காரணம்னு உனக்குத் தெரியுமா?'' என்முன் ரங்கராஜன்.

எதற்காக அவன் அப்படிச் சொல்கிமுன் என்று அவள் கேட்கவில்லே.

''உன் குணம்தான் எனக்கு அமையணும்னு நான் ஆசைப்பட்டேன். இப்போ அது அமைஞ்சிட்டது. அம்மா, ஒரு பைத்தியக்காரனுக்கு இரக்கம் காட்டற நீ, ஓர் ஏழைப் பெண்ணுக்கும் இரக்கம் காட்டத்தானே செய்வே?''

''ராஜா! இப்போ என்னே விட்டுடு, ராஜா. இன்னெரு சமயம் வந்து பேசு'' என்று சொல்லிவிட்டு எழுந்து போய் விட்டாள் ஜானகியம்மாள்.

இரண்டாவது தடவை அவளைச் சந்தித்துப் பேசுவதற்குள் அவன் சுந்தரிக்குக் கடிதம் எழுதி அவளே மதுரைக்கு வரவழைத்து விட்டான்.

புரியாத பயத்தினுல் இடிந்துபோயிருந்த நடராஜ முதலியார் சாத்தூருக்கே போய்த் தம் சகோதரரையும், அவர் மனைவியையும் கும்பிடாத குறையாகக் கெஞ்சி அழைத்துக் கொண்டு வந்தார்.

யார் என்ன சொல்லியும் ரங்கராஜன் பிடிவாதமாக மறுத்துவிட்டதோடு தன் மனத்தை மாற்ற யாரும்

அம்மாடியோவ்!

எம்மா ஆழம்!




ஏன் பிரமிக்க வேண்டும்?

ஒர்த்திங்டன்-ஸிம்ப்ஸன்

மானோபிளாக் பம்பு செட்டுகள்

பாதாளக் கிணறுகளிலும் பணியாற்ற வல்லவை



BEACON

பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிமிடெட்

- 13/15, நார்த் பீச் ரோடு, சென்னை-1
- 6/434, திருச்சி ரோடு, கோவை
- 49-D, மதுரை ரோடு, திருச்சி

EP-B 134

விசேஷ அளிப்பு!

ஸ்டாக் உள்ளவரை



ஒவ்வொரு டின்னிலும் உள்ள போர்ன்விடாவின் அளவு எப்போதும் போல் தான் (450 கிராம் நெட்)

சக்திக்கும் வலிமைக்கும்–மற்றும் தீஞ்சுவைக்கும் காட்பரீஸ் போர்ன்விடா!

முயற்சி செய்ய வேண்டாம் என்றும், தான் சம்சாரியாக வாழ்வதா, வாழ் நாள் முழுதும் ஒண்டிக்கட்டையாக இருந்து விட்டுச் சாவதா என்பதை மட்டும் முடிவு செய்தால் போதுமானது என்றும் சொல்லி விட்டான்.

"இந்தக் கண்ணறாவிக்காகவா இவனைப் பெத்து வளர்த்தது? அரண்மனையிலே நுழையவேண்டியவன் குடிசைக்குள் நுழைஞ்சிட்டானே! தாயே மீனாட்சி!" என்று அருணாசல முதலியார் தலையில் அடித்துக் கொண்டார்.

ரங்கராஜன், "நான் எங்கேயாவது போயிடலாமான்னு இருக்கேன். உங்களோட இருக்கிற வரையில் நான் யாருக்குமே நல்லது செய்ய முடியாது. நான் மனுஷனாவும் இருக்க முடியாது. 'விஜயா ஜாதி கெட்டவள், அவள் தொட்டதைச் சாப்பிட்டாலே தீட்டு. சன்னசிப்புதூர் விதவை நடத்தை கெட்டவள். அவள் உயிரோடு இருக்கவே கூடாது. திண்டுக்கல் நிர்மலாவை நினைச்சாலே உங்களுக்கு அருவருப்பா இருக்கு. அவள் வாழ்நாள் முழுதும் துன்பப் பட்டே சாகணும்.' ஒவ்வொருத்தருக்கும் நீங்களே தலைவிதியை எழுதறீங்களே! நீங்கள்தான் கடவுளா?" என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குப் போய் விட்டான்.

ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

"கோமதி, வெள்ளம் தலைக்கு மேலே போயிட்டது. பெத்த தாயும் தகப்பனும் சும்மா இருக்கிறப்போ நமக்கு என்ன வந்தது? புறப்படு சாத்தூருக்கு" என்றார் அருணாசல முதலியார்.

"ஜானகி...!" என்று சொல்லிவிட்டு அவள் முகத்தைத் துயரம் தேம்பிய முகத்துடன் பார்த்தார் நடராஜ முதலியார். அவள் தலை குனிந்தாள்.

"நீ என்ன சொல்லறே ஜானகி?"

"ராஜாவை இன்னும் கஷ்டப்படுத்தணுமா? இது போதாதா அவனுக்கு? அவன் எங்கேயும் போயிட்ட பிற்பாடு நாம்ப என்ன செய்யப் போறோம்? உயிரோடு இருக்கணுமா?" என்று சொல்லி விட்டு, அதற்கு மேல் பேச முடியாமல் அழுதாள் ஜானகியம்மாள்.

அதைக் கேட்ட அருணாசல முதலியார், "கதை முடிஞ்சுது. இனிமேல் இங்கே நமக்கு வேலை இல்லை. இங்கே இருந்தால், நாம்ப குடியிருக்கிற ஊரிலேயும் நமக்கு மரியாதை கிடைக்காது!" என்று சொல்லி விட்டுக் கோமதியம்மாளையும் தங்கத்தையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

மூவரும் விறுவிறுவென்று வெளியே போய் விட்டார்கள்.

கந்தரி உடம்பெல்லாம் வாயாக அலறித் துடித்துக் கொண்டிருந்தாள்.

பத்து நாட்களுக்குள்ளாகவே ரங்கராஜன் ஒரு சிறு வீட்டைத் தனிக் குடித்தனத்துக்காக வாடகைக்குப் பிடித்தான். 'நான் உங்களை மீறி நடந்துக் கிட்ட மாதிரியே இருக்கட்டும். அது தான் உங்களுக்கு இப்போது நல்லது' என்று தன் பெற்றோரிடம் சொல்லி விட்டே நிர்மலாவை ரிஜிஸ்தர் கல்யாணம் செய்து கொண்டான். சாட்சிக் கையெழுத்துப் போட்டவர்கள் இருவர்: ஒருவர் முத்துக்குமார், மற்றொருவர் திண்டுக்கல்லைச் சேர்ந்த ஒரு ஹோட்டல்காரர்; சிவலிங்கம் என்று பெயர்.

மணமக்களையும் இரண்டு சாட்சிகளையும் தவிர, கல்யாணத்துக்கு வந்திருந்தவர்கள், பாலு, அவன் மனைவி மக்கள், அவன் தாயார், முத்துக்குமாரின் மனைவி ஆகியவர்கள்தான்.

ரங்கராஜனுக்கு ஒரு மாபெரும் தர்ம யுத்தத்தில் வெற்றி பெற்றது போன்ற ஒரு பெருமிதம் ஏற்பட்டது. தன் செயலை எண்ணித் தானே மகிழ்ந்தான்.

மனைவியின் சொந்தக்காரர்களை முத்துக்குமாரின் வீட்டில் விட்டு விட்டு, அவளை மட்டும் அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்கு வந்தான் ரங்கராஜன். பெற்றோர்களின் கால்களில் விழுந்து வணங்கினான்.

நடராஜ முதலியாரும் ஜானகியம்மாளும் எந்த உணர்ச்சியையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் முகமும் கோணாமல் வணக்கத்தை ஏற்றனர்.

வந்தவன் உட்காராமல் அப்படியே புறப்பட்டான். டாக்ஸியும் காத்துக் கொண்டிருந்தது.


"அம்மா! நாங்க போயிட்டு வர்றோம். சீக்கிரமா வந்து பார்க்கிறேன். இப்போ முத்துக்குமார் வீட்டுக்குத்தான் போகிறோம். தனிக் குடித்தனத்துக்கு பார்த்த வீடும் வசதியா இருக்கு" என்று சொல்லி விட்டுக் கலங்கிய கண்களைத் துளிக்க விடாமல் அடக்கிக் கொண்டான் ரங்கராஜன்.

"கொஞ்சம் இரு" என்று சொல்லி விட்டு உள்ளே போய்ப் பூவை எடுத்துக் கொண்டு வந்து மணப் பெண்ணின் தலையில் வைத்தாள் ஜானகியம்மாள்.

டாக்ஸி சென்றதும் ஜானகியம்மாள் கண்ணீரைக் கொட்டினாள்.

"ஜானகி..." என்றார் நடராஜ முதலியார்.

"நான் கொடுத்து வைக்காதவள். கல்யாணத்தைக் கண்ணாலே பார்க்க முடியாமல் போய்விட்டதே" என்று சொல்லி அழுதாள் அவள். **(தொடரும்)**



ஆண்டுதோறும் அவதியூட்டும் அரிப்பு

இதைப் போக்க என்னதான் வழி?



வேர்க்குரு - அடேயப்பா !
என்ன அரிப்பு ! என்ன எரிச்சல் !
சேர்ந்து சொறிந்து தோலே
உரிந்து போகிறது ! இதைப்போக்க
வழியே இல்லையா? ... ஏன் இல்லே?
முதலில், மருந்து கலந்த ஜான்ஸனின்
ப்ரிக்லி ஹீட் சோப் தேய்த்துக் குளியுங்கள்.
இது சருமத் துவாரங்களில் உண்டாகும்
; எரிச்சலைப் போக்கி, அரிப்பு
பரவாமல் தடுக்கிறது.
பின்னர், ஈரப் பசையை உறிஞ்சி
சருமத்திற்கு இதமளிக்கும்



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட்
பவுடரைப் பூசுங்கள். இதில்,
வேர்க்குருவை எதிர்க்கும் ஒரு
விசேஷ நச்சுத்தடை மருந்து
சேர்க்கப்பட்டுள்ளது. உடனடியாக
நிவாரணம் உண்டாகும்.

வேர்க்குருவை விரட்டியடிக்க
இதுவே சிறந்த வழி!



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் தயாரிப்புகள் !

HTA-JJ-8036

ஸப் - இன்ஸ்பெக்டர் டேவிட் ஃபைல் ஒன்றை மிகக் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் எதிரில் வந்து நின்ற சாம்பு அய்யர் ''நமஸ்காரம் சார்!'' என்று இரண்டு முறை டேவிட்டைப் பார்த்துக் கரம் குவித்தும் அவர் தம் கவனத்தைத் திருப்பவில்லை.

மூன்றாவது முறையாக, ''நமஸ்காரம், சார்!'' என்றார் சாம்பு அய்யர்.

டேவிட் தலைநிமிர்ந்தார்.

எதிரில் நின்று கொண்டிருந்த அறுபத்தைந்து வயது மதிக்கத்தக்க கிழவரைப் பார்த்தவுடன், அவர் முகத்தில் இலேசான ஆச்சரியக் கோடுகள் மின்னலிட்டன.

சாம்பு அய்யர் பேசாமல் நின்று கொண்டிருந்தார்.

சப்—இன்ஸ்பெக்டர் டேவிட், சட்டென்று தம் இருக்கையிலிருந்து எழுந்து கொண்டவர், அவரை முகம் மலர வரவேற்று நாற்காலியில் உட்காரும்படி சொன்னார்.

சாம்பு அய்யர் உட்காரும்போதே, தாம் வந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்பதை யோசிக்கலானார்.

டேவிட் இரண்டொரு நிமிஷங்கள் அவரையே கூர்ந்து பார்த்தார்.

''மன்னிக்க வேண்டும்; நீங்கள் சாம்பு அய்யர்தானே!'' என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் சாம்பு அய்யர் உடனே பதில் எதுவும் சொல்லவில்லை. ஆனால், டேவிட் யூகித்தது சரிதான் என்று தெரிந்து கொள்ளத் தலையை மட்டும் ஆட்டினார்.

டேவிட்டுக்கு மகிழ்ச்சி தாளவில்லை.

''உங்களைப் பார்த்து எத்தனை வருஷங்கள் ஆயிற்று?'' என்று உணர்ச்சி ததும்பச் சொன்ன டேவிட், சாம்பு அய்யரைத் தம்முடைய தனி அறைக்கு அழைத்துச் சென்றார்.


கிழவர் அவருடைய அறைக்குப் போகும் போது போலீஸ் ஸ்டேஷனைத் தம் குழி விழுந்த கண்களால் கூர்ந்து ஒரு முறை நோட்டமிட்டுக் கொண்டார்.

அவரின் முகம் இப்போது கவலை தோய்ந்து போயிற்று.

சாம்பு அய்யர் அறைக்குள் வந்ததும் டேவிட் தம்முடைய தொப்பியை எடுத்து



ஏன் அழவேண்டும்?



ராஜன் புத்திரன்

அங்கிருந்த மேஜையின் மேல் வைத்தார். கிழவரின் கால்களைத் தொட்டு அவர் நமஸ்கரித்தார்.

இது சாம்பு அய்யருக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு வேளை தம்மிடம் படித்த பழைய மாணவனாக இருப்பான் என்று எண்ணிக் கொண்டார்.

''உங்களுக்கு இன்னும் மேலான உத்தியோக உயர்வு கிடைக்க அந்த ஆண்டவன் அருள் நிச்சயம் உண்டு'' என்றார்.

டேவிட் அவரை அங்கிருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னார்.

''நீங்களும் உட்காருங்களேன்....'' என்று சாம்பு அய்யர் இரண்டொரு முறை வற்புறுத்தியும் டேவிட் உட்காரவில்லை. மிகப் பணிவாக அவர் அருகில் நின்று கொண்டார்.

இந்தச் சமயத்தில் அங்கு வந்த கான்ஸ்டேபிள், காப்பியைக் கொண்டு வந்து சாம்பு அய்யரின் அருகில் கிடந்த மேஜையின் மீது வைத்து விட்டுப் போனார்.

''இதெல்லாம் எதற்கு...?'' சாம்பு அய்யர் கேட்டார்.

''பரவாயில்லை, சாப்பிடுங்கள்....'' என்று காப்பித் தம்ளரை எடுத்து அவரிடம் கொடுத்தார் டேவிட்.

சாம்பு அய்யர் காப்பியைக் குடிக்க, தம்ளரை வாய் அருகே எடுத்துச் சென்ற போது, ஏதோ கவனத்துக்கு வரவே, அதை மேஜையின் மீது வைத்தவர், ''மன்னிக்கணும், இன்னிக்கு விரதம். எதையும் சாப்பிடக் கூடாது'' என்று சொல்லி அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

''குடும்பத்தில் எல்லோரும் சௌக்கியமா?'' என்றார் டேவிட்.

''எல்லோரும் சௌக்கியம்தான். போன வருஷம்தான் என் மனைவி அகிலாண்டம் தவறிப் போனாள். அவளுக்குத்தான் இன்று திதி. அதனால்தான் இன்று விரதம்'' என்ற சாம்பு அய்யர், மேஜையின் மீது இருந்த காப்பித் தம்ளரையே பார்த்தார்.

இப்போது டேவிட் தம்முடைய குடும்பத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னார்.

''என்னுடைய தந்தை ராபர்ட்டைக் கர்த்தர் அழைத்துக் கொண்டு போய் மூன்று வருஷங்களாச்சு சார்! தங்கை ரோஸியைப் பெரிய இடத்திலே கட்டிக் கொடுத்திருக்கிறேன். அம்மா தவறிப் போனதுதான் உங்களுக்குத் தெரியுமே! போன வாரம் தான் திருச்சியிலிருந்து மாற்றலாகி இங்கே 'செட்டில்' ஆனேன். குடும்பத்தை அடையாற்றில் வைச்சிருக்கேன்'' என்றார் டேவிட்.

இப்போதுதான் சாம்பு அய்யருக்கு, நாம் யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பது இலேசாகப் புரிந்தது. இனி அங்கு உட்கார அவரால் முடியவில்லை. வந்த காரியத்தையும் டேவிட்டிடம் சொல்லவில்லை.

''நேற்று இந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்த போது, நீங்கள் ஸ்டேஷன் உள்ளே நுழைவதைப் பார்த்தேன். நம் டேவிட் போலிருக்கே என்று நினைத்துக் கொண்டேன். இன்று வந்ததில் நான் நினைச்சது நூற்றுக்கு நூறு உண்மை என்று தெரிஞ்சது'' என்று சாம்பு அய்யர் 'பட்பட'வென்று ஒரு பொய்யை மிக அழகாக டேவிட்டிடம் சொன்னவர் விடைபெற்றுக் கொண்டு எழுந்து கொண்டார்.

டேவிட் அவரைப் போலீஸ் ஸ்டேஷன் வாசல் வரையில் சென்று வழி அனுப்பி வைத்தார்.

அன்று மத்தியானம் வீட்டில் டேவிட் பேப்பர் படித்துக் கொண்டிருந்த போது, சாம்பு அய்யரின் நினைவு அவருக்கு வந்தது.

கடந்தகால நினைவிலே அப்படியே ஆழ்ந்து போனார்.

சாம்பு அய்யரின் மாமனார் ஒரு சர்க்கார் டாக்டராக அப்போது இருந்தார்.

அடிக்கடி சாம்பு அய்யர், மாமனார் வீட்டுக்கு வருவதுண்டு.

டாக்டர் வீட்டில் தோட்டக்காரனாக டேவிட்டின் தந்தை ராபர்ட் வேலை பார்த்து வந்தார். அந்த நேரத்தில், டாக்டரின் காரைத் தினம் காலையில் துடைக்கும் வேலை டேவிட்டுக்குக் கிடைத்தது. மாதச் சம்பளம் முழுசாக இரண்டு ரூபாய். டேவிட் விரும்பியே இந்தத் தொழிலைச் செய்து வந்தான். எட்டாவதுக்கு மேல் அவனுடைய தந்தையால் படிக்க வைக்க முடியவில்லை.

இந்நிலையில்தான் சாம்பு அய்யருக்கும், டேவிட்டுக்கும் பழக்கம் ஏற்பட்டது.

அந்தக் காலத்தில் தாழ்த்தப்பட்டவர்களை மதிக்க முடியாத நிலையில் சமூகம் கண் மூடிக் கிடந்தது.

டேவிட்டின் தோள்மேல் கை போட்டுப் பேசும் சாம்பு அய்யரிடம் எத்தனையோ முறை டேவிட் சொல்லியும் அவர் காதில் வாங்கிக் கொண்டதில்லை.

''யாரப்பா நீ ஒரு பத்தாம் பசலியாக இருப்பாய் போலிருக்கே....'' என்று சொல்லிச் சிரிப்பது சாம்பு அய்யரின் வழக்கம்.

மேலும் அவர் உயர்நிலைப் பள்ளிக்கூடமொன்றில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்ததால், டேவிட் இப்படி எட்டாவது வரை படித்து விட்டுப் பேசாமல் இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மேற்கொண்டு பக்கத்து நகருக்கு டேவிட்டை அனுப்பி வைக்க வேண்டும் என்றால் பணம் அதிகம் செலவாகும். எத்தனையோ பள்ளிக்கூடங்களில் தாழ்த்தப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ளாமல், தள்ளியும் வைத்து விடுவது சாம்பு அய்யருக்குத் தெரியும்.

இந்த நிலையில் அவருக்குப் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது.

டேவிட் நல்ல உயரமாகவும், திடகாத்திரமான உடல் அமைப்பும் கொண்டவனாக இருப்பது சாம்பு அய்யரின் கண்ணில் பட்டது.

அவருடைய மாமனாரிடம் சொல்லி டேவிட்டைப் போலீஸ் பயிற்சிப் பள்ளியில் சேர்க்க முடிவு செய்தார்.

மாப்பிள்ளை சொன்னதால் டாக்டரும் யாரோ ஒரு வெள்ளைக்கார போலீஸ் அதிகாரியின் சிபாரிசால், போலீஸ் பயிற்சியில் டேவிட்டைச் சேர்த்து விட்டார்.

பயிற்சி முடிந்து போலீஸ் உடையுடன் சாம்பு அய்யரைப் பார்க்க அவர்

SVCF
H.O. TIRUNELVELI

உயர்வின் சின்னம்

(Estd.: 6-1-1947)

ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :
திருநெல்வேலி - 6 போன் : 274
மத்திய அலுவலகமும், முதலீடுகள் பெற்றுக்கொள்ளுமிடமும் :
36 - B, மவுண்ட் ரோடு (ஸ்பென்சர் & கம்பெனி எதிரில்)
சென்னை - 2 போன் : 84244
புதிய கிளையுடன் செயல்படுகிறது

**தணிக்கைக்குட்பட்டு 31 - 3 -1969ல் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 5 லட்சம்
மொத்த ஆஸ்திகள் 2.07 கோடி. சீட்டில் ஈடுபடுத்திய தொகை ரூ. 4.12 கோடி
செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வும் 1.88 லட்சம்**

கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க் அல்லாத நிதி கம்பெனிகள் டிபார்ட்மெண்ட் 29-10-66ல் வெளி யிட்ட நோட்டிபிகேஷன் DNBC 1/ED (S) 66/- பாரா 2 (i) (f)ன் ஸப்கிளாஸ் (x)ன் படி.

கம்பெனியின் இரு டைரக்டர்கள் காரண்டி செய்த லோன் வாங்கப்படுகிறது

தவணை	வட்டி வீதம் ரூ. 300லிருந்து ரூ. 5,000 வரை	ரூ. 5,000-க்கு மேல்
ஒரு வருடம்	$8\frac{1}{2}\%$ P. A.	9% P. A.
இரண்டு வருடம்	9% P. A.	$9\frac{1}{2}\%$ P. A.

6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி செக்குகள் அனுப்பப்படுகின்றன. அவைகளை எங்கள் எந்தக் கிளையிலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

தொழில் விபரம் :

பிரதி மாதம், மாதம் மும்முறை, தினசரி உள்ள ஏலச் சீட்டுகள் நடத்துதல், ரூ. 10,000 வரை மதிப்புள்ள ஏலச் சீட்டுகள் எங்கள் 31 ஆபீஸ்களிலும் நடத்தப்படுகின்றன.

அலுவலக நிர்வாகம்
மானேஜிங் டைரக்டர் :
ஸ்ரீ AR. ராமசாமி
டைரக்டர்கள் :
ஸ்ரீ M. A. M. கோவிந்தன் செட்டியார்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி
மத்திய அலுவலக மானேஜர் :
ஸ்ரீ K. A. ராம், B. A., B. L.

கடந்த மூன்று வருடங்களில் ஆதாயமும் டிவிடெண்டும் :

வருடம்	வரி கொடுப் பதற்குமுன் லாபம்	வரி கொடுத்த பின் லாபம்	டிவி டெண்ட் விகிதம்
1965-66	61908-72	25170-72	13%
1966-67	79686-41	27686-41	16%
1967-68	89468-38	28468-38	17%

பொறுப்புகள் 31-3-1968

செலுத்தப்பட்ட மூலதனம் & ரிஸர்வ் நிதி	ரூ. 1,40,075
பிக்ஸட் டிபாஸிட்	ரூ. 3,42,575
ஷேர் ஹோல்டர் டிபாஸிட்டுகள்	ரூ. 2,75,050
காரண்டி செய்த லோன்கள்	ரூ. 10,33,475
தற்காலிகக் கடன்	ரூ. 1,15,991
சீட்டு இதர பொறுப்பு வகைகள்	ரூ.1,33,79,414
மொத்தம்	ரூ.1,52,86,580

புதிய M. குரூப் ரூ. 25,000 மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 12, கிலோதார் தெரு, திருச்சி (போன் : 4276)லும், 43, விஸ்வநாத ராவ் ரோடு, மாதவநகர், பெங்களூர்-1 (போன்: 75955)லும் 4-A, சண்முகம் ரோடு, தாம்பரம், சென்னை-45லும் நடைபெறும்.

ஆடிட் செய்த பாலன்ஸ் ஷீட்டுகள் வேண்டுபவருக்கு அனுப்பப்படும்

K. A. ராம், பி.ஏ., பி.எல்.
மத்திய அலுவலக மானேஜர்
அனுமதித்த தேதி : 3-8-69

V. மல்லையா, எம்.ஏ., பி.எல்.
பொதுஜன தொடர்பு அதிகாரி

AR. ராமசாமி
மானேஜிங் டைரக்டர்

PARAMOUNT

ஆண்டு முழுவதும் பூத்தையல் மற்றும் பின்னல் வேலை செய்து மகிழ உறுதுணை!

புதிய கோட்ஸ் & ஆங்கர் எம்ப்ராய்டரி (பூத்தையல்) மற்றும் பின்னல் வேலை (க்ரோஷெட்) காட்லாக்கில் இப்போது கிட்டத் தட்ட 39 ஆங்கர் புத்தகங்கள் உள்ளன. இத்துடன் இணைந்துள்ள கூப்பனைக் கத்தரித்து அனுப்பி, ஒரு காட்லாக் பிரதியை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். இந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.



கோட்ஸ்
நூல் தயாரிப்பாளர்கள்.

தயவு செய்து உங்கள் இலவசக் காட்லாக்கை எனக்கு அனுப்பவும்; அதில் கண்டுள்ள எண்ணற்ற குறைந்த-விலை வண்ணப் புத்தகங்களிலிருந்து வேண்டியதைத் தேர்ந்தெடுக்க அது எனக்கு உதவும்.

பெயர் ______________________

____

முகவரி ______________________

____

ஜே & பி. கோட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மார்கெடிங் செக்ஷன், 81, பால்டன் ரோடு, பம்பாய் 1.

Bensons/2630 Tam

பணியாற்றிக் கொண்டிருந்த பள்ளிக்கூடத்துக்கே வந்து விட்டார் டேவிட்.

இந் நிலையில் இந்தியாவும் சுதந்திரம் பெற்றது. டேவிட்டும் தன்னுடைய தொழில் பக்தி, கவனம், கடமை உணர்வு ஆகியவற்றோடு இருந்து வந்தான்.

ஒரு சமயம் சென்னையில் ஏதோ பெரிய கலகம் நடப்பதாக இருந்ததால், வெளியூர் போலீஸைச் சென்னைக்கு வரவழைத்தார்கள்.

டேவிட் சென்னைக்குப் பயணமானான். இந்தச் சமயத்தில் டேவிட்டின் தந்தை ராபர்ட் படுத்த படுக்கையாக இருந்தார்.

சாம்பு அய்யர்தான் டேவிட்டுக்குத் தைரியம் சொல்லி, வழியனுப்பி வைத்து விட்டு, ராபர்ட்டைப் பார்க்க வந்து கொண்டிருந்தபோது, ஒரு பெண்ணை இருவர் பலவந்தப்படுத்துவதைப் பார்த்தார்.

அவருக்கு எங்கிருந்துதான் அவ்வளவு தைரியம் வந்தது என்று தெரியவில்லை. அங்கே கிடந்த ஒரு மரக் கிளையை ஒடித்து அவ்விருவரையும் அடித்தார். ஒருவன் ஓடிப் போய் விட்டான். மற்றொருவன் மாட்டிக் கொண்டான்.

நின்று கொண்டிருந்த பெண்ணைப் பார்த்ததும், அய்யர் திடுக்கிட்டார். டேவிட்டின் தங்கை ரோஸி அழுதுகொண்டே அவருடைய காலில் விழுந்து, சமயத்தில் காப்பாற்றியதற்கு நன்றி கூறினாள்.

அவரிடம் மாட்டிக் கொண்டவன் பேந்தப் பேந்த விழித்தான். அவனுக்கு நாலு நல்ல வார்த்தை சொல்லி, புத்தி புகட்டி அனுப்பி வைத்தார் சாம்பு அய்யர்.

ரோஸியை அவள் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு ராபர்ட்டின் உடல் நிலையை விசாரித்து விட்டுச் சென்றார்.

டேவிட் சென்னையிலிருந்து திரும்பியதும் ரோஸி நடந்த விஷயத்தை அண்ணனிடம் சொன்னாள்.

உடன் பிறப்பல்லவா? டேவிட்டுக்கு நரம்பெல்லாம் புடைத்தது. அவனுக்குள்ள



கள், உதயா பைன் ஆர்ட்ஸ் குழுவினர். நமது பாராட்டும் அப்போதே ஆரம்பமாகிவிடுகிறது. காட்சிக்குக் காட்சி திரைப்படத்தைத் துடிப்புள்ள மேடை நாடகமாக்கியுள்ள 'பத்து' (பத்மநாபன்)வைப் பாராட்டித்தான் ஆகவேண்டும். ரவியாக வரும் அவர் நடிப்பையும்தான்! ரூட்டைக் கோஸ்ஃம், காரட்டும் காலிபிளவரும் அந்நிய நாட்டுக் காய்கறிகள்தான். ஆனால் அதை முறைப்படி பக்குவம் செய்து படைக்கும்போது ருசித்து மகிழத் தயங்குகிறோமா என்ன ?

குருட்டுப் பெண் ராதாவாக நடிக்கும் குமாரி கல்பனாவுக்கு வேஷப் பொருத்தத்தோடு நடிப்பாற்றலும் இருக்கிறது. ஒவ்வொரு சிறு செய்கையையும்-ஒரு குருட்டுப் பெண் எப்படிச் செய்வாள், எங்கு எப்படித் தடுமாறுவாள் என்பதை மிகமிக நுணுக்கமாக நடித்துக் காட்டியிருக்கிறார்.

ஒரு வீட்டின் நடுக் கூடம். அதில் நடக்கும் நிகழ்ச்சிகள். அதுவும் ஓரே நாளைய நிகழ்ச்சிகள். கதாநாயகிக்குக் கண் தெரியாது. ஆனால் அந்த ஒரு புலனின் இயலாமையை மற்ற நான்கு புலன்களும் ஈடு செய்து அவளுக்கு ஒப்பற்றதோர் ஆற்றலைத் தருகின்றன. பாத்திரங்கள் மொத்தம் ஆறு பேர்தான். இரண்டு மணி நேரத்துக்குப் பார்வையாளர்களை என்னமாய்த் தம்வயப் படுத்தி விடுகிறார்கள் இந்த உதயா பைன் ஆர்ட்ஸ் நடிகர்கள்? இருள் நாடகத்தின் இத்தனை பெருமைக்கும் கருவாக விளங்குவது (wait until dark) என்ற ஆங்கிலப் படம்தான். அது அசல். இது நகல். மொழிதான் வித்தியாசம். நாடக ஆரம்பத்திலேயே மூலத்தை ஒளிக்காமல் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக ஒப்புக்கொண்டு விடுகிறார்

அவரது நயனங்களின் துடிப்பும் முகபாவமும் நெஞ்சை விட்டகலாதவை. குமாரி கல்பனாவின் விழிகளுக்குப் பதில் விரல்களே பேசுகின்றன. அப்ளாஸ்களைக் கொத்தாக எடுத்து அள்ளிக் கொண்டு போகிறார், "மிஸ்டர் இன்ஸ்பெக்டர் செல்லப்பா"வாக நடித்த திரு எம். ஆர். கிருஷ்ணசாமி. அந்த வத்தல் உடம்புக்காரரிடம் தொழில் நடிகர்களிடம் கூடக் காண முடியாத அத்தனை லாகவம் எப்படித்தான் புகுந்து கொண்டிருக்கிறதோ? எப்படி அநாயாசமாகப் பேசி இயல்பாக நடிக்கிறார்? 'இருளி'ன் வெள்ளி விழா வெற்றிக்கு ரசிகர்களைச் சிரிப்பூட்டி மகிழ்விக்கும் செல்லப்பா பாத்திரமும் ஒரு காரணம்.

'இருள்' இன்னும் பலப்பல முறை மேடை ஏறி ரசிகர்களை மகிழ்விக்க வாழ்த்துகிறோம்

கோபத்தில் ரோஸியிடம் தவறாக நடந்து கொண்ட இருவரையும் கொலை செய்தாலும் செய்து விடுவான் என்ற பயம் ரோஸிக்கு ஏற்பட்டது. இதைச் சாம்பு அய்யர் 'சொல்லாதே' என்று சொல்லி வைத்திருந்தும், டேவிட்டிடம் சொன்னது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று அவளுக்கு இப்போதுதான் புரிந்தது.

டேவிட் வெறி பிடித்தவனைப் போல் வெளியே சென்றான். ரோஸி சாம்பு அய்யரிடம் ஓடிப் போய் விஷயத்தைச் சொன்னாள்.

மைதானத்தில் அவ்விருவரையும் உருட்டிப் புரட்டிக் கொண்டிருந்த டேவிட்டைத் தடுத்து, அவன் ஆவேசத்தைச் சாந்தப்படுத்தினார் சாம்பு அய்யர்.

"எந்தத் தவற்றையும் எவனும் தெரிந்து செய்திருந்தாலும், அதை வார்த்தை அளவில் சொல்லித் திருத்துவதுதான் முறை" என்று சாம்பு அய்யர் டேவிட்டுக்குப் புத்திமதி சொல்லி, "அவர்கள் திருந்தி விட்டதாக நேற்றுத்தான் என்னிடம் சொல்லி விட்டுப் போனார்கள். அது தெரியாமல் அவர்களை அடிக்கிறாயே!" என்று சொல்லி ஒருவாறு இச் சம்பவத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இது நடந்த இரண்டு நாட்களில் டேவிட்டுக்கு ஹெட் கான்ஸ்டபிள் பதவி உயர்வு கிடைத்தது.

சாம்பு அய்யரிடம் இதைச் சொன்ன போது, "அன்று மடத்தனமாக ஆவேசத்தில் அவர்களைக் கொலை செய்திருந்தாயானால் இந்தப் பதவி உயர்வுடன் கூடிய மகிழ்ச்சியை நீ இன்று அடைந்திருக்க முடியுமா? இந்நேரம் நீ கம்பி எண்ணிக் கொண்டிருக்க வேண்டும்" என்று சொல்லிச் சிரித்த போது, டேவிட்டின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வந்து விட்டது.

இதற்குப் பிறகுதான் திருச்சிக்கு மாற்றலாகி, டேவிட் குடும்பத்துடன் அங்கு சென்று விட்டான்.

* * *

பழைய நினைவுகளில் இந்நேரம் வரை ஆழ்ந்திருந்த டேவிட், மனைவி எலிசபத் தமது தோளைப் பற்றி இலேசாக அசைத்த பின்தான் சுய உணர்வுக்கு வந்தார்.

ஒரு வாரம் கழித்துச் சைதாப்பேட்டைக் கோர்ட்டுக்குப் போயிருந்தார் டேவிட்.

திருடிய குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டவர்களுக்குக் கோர்ட்டில் விசாரணை முடிந்து தண்டனை அளிக்கப்பட்டது. டேவிட்டால் கைது செய்யப்பட்ட நான்கு குற்றவாளிகளுக்குத் தலா ஆறு மாதச் சிறைத் தண்டனை கிடைத்தது.

கோர்ட்டில் ஆஜரான டேவிட், வழக்குகள் முடிந்த பிறகு கோர்ட்டை விட்டு வெளியே வந்தார்.

அப்போது கோர்ட் வராந்தாவில் இரு போலீஸ்காரர்களுக்கிடையே கைவிலங்குடன் நின்று கொண்டிருந்த ஒரு குற்றவாளியுடன் சாம்பு அய்யர் ஏதோ பேசிக் கொண்டிருப்பதை டேவிட் பார்த்தார்.

விடுவிடென்று அவருக்கருகே வந்துவிட்ட டேவிட் ஏனோ சட்டென்று நின்று விட்டார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் திருடிய குற்றத்துக்காக டேவிட்டால் கைது செய்யப்பட்ட சுந்தரம்தான் சாம்பு அய்யரிடம் பேசிக் கொண்டிருந்தான்.

" நீங்கள் இதுவரை என்னை ஓர் அடிகூட அடித்ததில்லை. அப்படி அடித்திருந்தாலும் என் உடம்பிலேதான் காயம் ஏற்பட்டிருக்கும். ஆனால், அன்னிக்கு லாக்கப்பிலிருக்கும் என்னைப் பார்க்க ஆவலுடன் வந்துவிட்டு உங்களால் வாழ்வு பெற்ற ஒருவரிடம், 'என் மகன் லாக்கப்பில் இருக்கான். பார்க்க அனுமதி கொடுங்க'ன்னு கேட்க வெட்கப்பட்டு உடல் குறுகி ஸ்டேஷனை விட்டு வெளியே போனீங்களே..... எதற்காக என்னை நீங்கள் மகனாப் பெத்துப் போட்டீங்க? சத்தியமாகச் சொல்றேன். இனிமே நான் திருட மாட்டேன். திரும்பவும் ஜெயிலுக்கு நிச்சயம் வரமாட்டேன் அப்பா. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், நான்தான் உங்க மகன்னு யாரிட்டேயும் சொல்லாதீங்கப்பா. நான் வரேன்...." என்ற சுந்தரம் சாம்பு அய்யரிடம் விடை பெற்றுக் கொண்டான்.

சாம்பு அய்யரின் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த டேவிட்டின் கண்களும் கலங்கிப் போயின.

சுந்தரத்தைப் போலீசார் வானில் ஏற்றுவதைச் சாம்பு அய்யர் சிலையாக நின்றவாறே பார்த்துக் கொண்டிருந்தார்.

டேவிட் சாம்பு அய்யரிடம் வந்து ஆதரவாக அவர் தோளைப் பற்றினார்.

டேவிட்டைப் பார்த்த சாம்பு அய்யர், "அதோ வானில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்களே அவன்தான் என் மகன் சுந்தரம். திருடிட்டான்; ஆறு மாசம் ஜெயிலுக்குப் போகிறான். ஆனா, இப்போ திருந்திட்டான் சார். அவனை விட்டுடச் சொல்லுங்கோ சார்......." என்று சொல்லிப் பிள்ளைப் பாசத்தால் விக்கி விக்கி அழுதார்.

சட்டத்தின் பிடியில் அகப்பட்டுக்கொள்ள இருந்த டேவிட்டை, அன்று காப்பாற்றிச் சட்டக் காவலனாக ஆக்கி விட்டவர் இந்தச் சாம்பு அய்யர்தான்.

அதனால் சப் இன்ஸ்பெக்டர் டேவிட் சுந்தரத்தை ஜெயிலுக்குப் போக விடாமல் தடுத்துவிட முடியுமா என்ன?

சாம்பு அய்யர் இப்போது இலேசாகச் சிரித்துக் கொண்டார்.

"பிள்ளைப் பாசத்தால் அர்த்தமில்லாமல் அவனை விட்டு விடும்படி புலம்புகிறேன். பாருங்கள். என் மகன் சுந்தரம், இந்தத் தடவை புனிதமானவனாகத்தான் ஜெயிலுக்குப் போகிறான். நான் ஏன் அழ வேண்டும்?" என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டே புறங் கையால் கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

அவரை ஆறுதலாகத் தம் மார்பில் சாய்த்துக் கொண்டு, கோர்ட் வாசல் படிகளில் இறங்கினார் இன்ஸ்பெக்டர் டேவிட்.

குடும்ப டால்கில் ஒரு தனிச்சிறப்பையே
குடும்பத்தில் அனைவரும் எதிர்பார்க்கின்றனர்



சருமத்தை
மிருதுவாக்கி
அழகுபடுத்தும்
தன்மையை
எண்ணி
யிருக்கிறாள்
அம்மா



அவரோ இதமும்,
புத்துணர்வும்
பெற வியர்வை
போக்கும் பவுடரை
விரும்புகிறார்



சுகந்த
நறுமணம்
சோபிதமான
வண்ணப்பெட்டி
இதுவன்றோ
இவர்களின்
தேவை



ULKA-CTB-31 TA

பினகா டால்கில்
அவர்கள் விரும்பும் அத்தனையும் அடங்கியுள்ளது

பினகா—பிடித்தமான குடும்ப டால்க் C I B A Cosmetics

ஃபாஸ்ஃபோமின்



சக்தியை அதிகரிக்கிறது. பசியைத் தூண்டுகிறது.



வலிவைப் பெருக்குகிறது.



நோய்களை எதிர்க்கும் சக்தியை கூட்டுகிறது.

சுருங்கச் சொன்னால்—
குடும்பத்தில் அனைவரும் திட
ஆரோக்கியத்துடன் திகழ
உதவுகிறது ஃபாஸ்ஃபோமின்

ஃபாஸ்ஃபோமின்... 'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமின்களும்,
பலவகை கிளிஸரோஃபாஸ்பேட்டுகளும் அடங்கிய,
பழரஸ மணம் கமழும் பச்சைநிற டானிக்.



SQUIBB® ® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்காகும். ஸாராபாய் பிரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

SARABHAI CHEMICALS

Shilpi SC 30A/67 Tam



நினைப்பதில்லை

சைதை சுந்தரமூர்த்தி

மழைவந்தால் மரத்தடியில் ஒதுங்கு கின்றோம்
மழைநின்றால் மரத்தைநாம் நினைப்ப தில்லை!
குழைகின்றோம் உதவிபெறக் கொஞ்ச நேரம்
கூடிவிட்டால் அவர்களைநாம் நினைப்ப தில்லை!

மரமேறிப் பறிக்கின்றோம் தெங்கின் காயைப்
பருகிவிட்டால் மரத்தைநாம் நினைப்ப தில்லை!
வரம்வேண்டித் துதிக்கின்றோம் ஈசனைத்தான்
பெற்றபின்பு நாமவரை நினைப்பதில்லை!



காலக் கண்கள்

'ரவி'



குழந்தைச் சுட்டு விழியினிலே
குமிழ்விட் டூறும் உணர்ச்சியிலே
அழகும் பாச வழிநிற்கும்
அழியா அன்பின் ஒளிநிற்கும் !

பள்ளிக் கேகும் பருவத்தே
பயிலும் விழியின் சுழற்சியிலே
துள்ளும் களிப்பு வாழ்வின்பம்
துளிர்த்தே விழியில் சுழலுங்காண்!

பருவ வடிவின் வார்ப்பினிலே
பைந்தமிழ் இன்பச் சுழற்சியிலே
இரும்பை இழுக்கும் காந்தத்தை
இட்டார் கண்ணில் யாரம்மா?

கன்னங் கரிய விழிகளிலே
கவிதை ஊறும் காரணமென்?
கண்ணில் நாணம் தானேறி
கன்னம் சிவந்து பூப்பதுமேன்?

தாய்மைப் பேற்றின் உச்சத்தில்
தளிர்க்கும் அன்பு கூத்தாடச்
சேய்தனை நாடும் விழியிடையே
சேரும் ஒளியின் விரிவென்ன?

வாழ்வின் இன்ப துன்பத்தில்
வாழ்ந்து தாழ்ந்தே உலகினையே
ஊழ்வினை யென்று நினைக்கின்ற
உருவ விழியைப் பாரம்மா!

முதிர்ந்த இலையே உரமாக
முதிராப் பயிருக் களிப்பதுபோல்
முதிர்ந்த கிழவி கண்வளர்ப்பில்
முதிராக் குடும்பம் வளர்தல்காண்!

இவையோடு நீயும்...

சிவாம்ருதம்

மலர் போல் தூய மனம் வேண்டும்
மதிபோல் சாந்த குணம் வேண்டும்;
புலரும் கதிர் போல் மதி வேண்டும்;
புனல் போல் பெருகும் நிதி வேண்டும்

மலைபோல் குலையா பலம் வேண்டும்;
மழைபோல் அன்பால் அழவேண்டும்

அலைபோல் பணிசெய்திடல் வேண்டும்;
அனல்போல்தீமையைச்சுடல்வேண்டும்

இயற்கையின் செல்வங்கள் இத்தனையும்
இறைவா! எனக்குத் தரவேண்டும்
துயரம் முழுதும் தீர்ந்திடவே
துணையாய் நீயும் வரவேண்டும்



வ. சா. நாகராஜன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அம்மா கொஞ்சம் கொஞ்சமாக ஒடுங்கினாள். அப்படியே ஒரு நாள் நிரந்தரமாக ஒடுங்கியே போனாள்.

அப்பாவின் சகப் பள்ளி ஆசிரியர்கள் அம்மாவின் காரியத்தை நடத்திக் கொடுத்தார்கள்.

ஒரு மாதம் கழித்து நான் தான் அப்பாவிடம் சொன்னேன். "இனிமேல் இந்த ஊரில் இருக்க வேண்டாம்ப்பா. வேறு எங்கேயாவது போவோம்ப்பா..." என்று.

"நான் நினைத்துக்கொண்டே இருந்தேன். நீ சொல்லி விட்டாய்" என்றார்.

திருவாபுரத்தில் என்னுடன் சேர்ந்து படித்துச் சென்னைக்குப் போய்க் கொஞ்ச நாள் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்த சிநேகிதியின் விலாசத்தை நினைவுக்குக் கொண்டு வந்து அவளுக்கு எழுதினேன். அவளிடமிருந்து பதில் வந்தது. நாங்கள் சென்னைக்கு வருவதை வரவேற்று எழுதியிருந்தாள். நான், அப்பா, உமா மூவரும் திருவாபுரத்தின் மண்ணை உதறிவிட்டுச் சென்னைக்கு ரயில் ஏறினோம்.

கோடம்பாக்கம் ரயிலடிக்கு மேற்கே இருந்த பெரிய சாலையிலிருந்து தெற்கே பிரிந்த ரோட்டில் கொஞ்ச தூரம் போனதும் எங்களுக்காக அவள் பார்த்து வைத்திருந்த இடம் இருந்தது. வெளிப்புறம் காம்பவுண்ட் சுவரை அடுத்து இரு வரிசைகளிலும் பத்துப் பத்து வீடுகளாகச் சேர்ந்தாற்போல் இருபது வீடுகள் இருந்தன. மேலே ரயில் ஓடு. வெளியூர்களில் இருக்கும் போலீஸ் லைன் வீடுகளைப் போன்று இருந்தது.

அந்த வீட்டில் குடியேறிய நான்கைந்து நாட்களுக்குப் பிறகு என் சிநேகிதியின் சொல்படி அவள் உதவியுடன் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் எங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டோம்.

நான்கு மாதங்களுக்குள் உமாவுக்கும் எனக்கும் நல்ல வேலைகள் கிடைத்துவிட்டன. அப்பாவுக்கும் நாலைந்து இடங்களில் ட்யூஷன்கள் கிடைத்தன. எங்கள் மூவருக்கும் அவரவர்களுக்கு அன்றன்றைய வேலைகளைச்செய்து முடிப்பதற்கே நேரம் சரியாக இருந்தது. சென்னையின் அவசர

மும் நிர்ப்பந்தங்களும் கூடிய அந்தப் புதுவித வாழ்க்கையில் வேறு எதைப் பற்றியும் அதிக நேரம் நினைத்துக் கொண்டிருக்க முடியாத நிலை எங்கள் மனத்துக்கு நிம்மதியாகக் கூட இருந்தது.


மாதங்கள் ஓடி, வருஷம் ஒன்றும் ஆகியது.

வது போனால் அதுகூடச் செய்வதில்லை. எனக்காக ஒன்றும் செய்ய வேண்டாம்'' என்றார் சாஸ்திரிகள்.

''பலகாரம் செய்ய எத்தனை நேரமாகப் போகிறது? நாம் பேசிக் கொண்டிருக்கும் போதே ஆகிவிடும்'' என்று அப்பா அவரை உட்கார்த்தி வைத்து ஆவலுடன் திருவாபுரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

பலகாரம் சாப்பிடும்போது நாங்கள் எந்த அலுவலகத்தில் வேலை பார்க்கிறோம், சம்

தேவி



ஒரு நாள் மாலை. நாங்கள் இருவரும் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்து உடை மாற்றிக் கொண்டு இரவு உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தோம். கோயிலுக்குப் போயிருந்த அப்பா திரும்பி வரும்போது தம்மோடு ஒருவரை அழைத்து வந்தார். அவர்... திருவாபுரத்தில் மேல வீதிக் குளத்தினருகில் குடியிருந்த சாஸ்திரிகள். பழைய சைக்கிள் ஒன்றில் அந்த ஊரில் சதா பரபரப்புடன் சுற்றுபவர்.

அவர் உள்ளே வந்து எங்களைப் பார்த்ததும், ''என்னம்மா, சௌக்கியமாக இருக்கிறீர்களா? என்ன நினைவிருக்கிறதா?'' என்று விசாரித்தார்.

''இங்கே ஒரு கல்யாணத்துக்காக வந்திருந்தாராம். கோவில் சந்நிதியில் பார்த்தேன்'' என்று சொன்ன அப்பா ''இரவுச் சாப்பாட்டுக்கு என்ன இருக்கிறது?'' என்று விசாரித்தார்.

''சனிக்கிழமை ராத்திரி நான் சாப்பிட மாட்டேன். பலகாரம். வெளியில் எங்கேயா

பளம் எவ்வளவு, பஸ் சார்ஜ் என்ன ஆகிறது, டிபன் சார்ஜ்..... என்று ஒன்று விடாமல் விசாரித்தார் சாஸ்திரிகள்.

மறுநாள் காலை காப்பி சாப்பிட்டதும் அவர் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார். அப்பாவுக்கும் ஒரு வருஷம் கழித்துச் சொந்த ஊர் மனிதர் ஒருவரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்ததில் மன நிறைவு. அந்த சாஸ்திரிகளின் விஜயம் அதோடு நிற்கவில்லை. அடிக்கடி வரலானார். ஏதேதோ காரணங்களைக் கூறிக் கைமாற்றுகப் பணம் கேட்டார். வாங்கிய பணத்தைத் திருப்பித் தராமற்போகவே சாஸ்திரிகளின் சென்னை விஜயம் 'குதிரைப் பந்தய' மோகம் என்பதை அறிந்தோம். அதன்பின் அவருக்குப் பணம் தர அப்பா மறுத்து விட்டார். பலன், ஒரு வருஷத்துக்கும் மேலாக எங்கள் மனத்தில் நிலவிய நிம்மதி குலைந்தது. ஆம், எங்களைச் சுற்றி நாங்கள் சில மாறுதல்களை உணர்ந்தோம். சென்ற ஒரு வருஷமாகத் தாயில்லாத பெண்கள் என்று சொல்லி

ஆதரவு காண்பித்து வந்த மூன்றாவது வீட்டு மாமி திடீரென்று இங்கே வருவதைக் குறைத்துக் கொண்டு நிறுத்திக் கொண்டார். மற்றும் அக்கம் பக்கத்தில் உள்ள எங்கள் வயதொத்த பெண்கள் கூட எங்களைக் கண்டதும் இதுவரை முகம் மலர்ந்து சிரிப்பவர்கள் திடீரென்று எங்களைக் கண்டதும் ஒதுங்கிக் கொண்டு நகர்ந்தார்கள்.

இவற்றுக்கெல்லாம் காரணம் புரிந்து கொள்வது கஷ்டமாக இல்லை. குதிரைப் பந்தயத்துக்குப் பணம் கொடுக்க முடியாது என்றதால் ஆத்திரம் அடைந்த சாஸ்திரிகள் அதுவரை பந்தயத்தில் தோற்ற ஆத்திரத்தையும் சேர்த்துக் கொண்டு இங்கே வீடு வீடாகப் போய் எங்களைப் பற்றி ஏதேதோ சொல்லியிருக்கிறார். இந்த நிலையில் நானோ உமாவோ யார் வீட்டுப் படியேறி எங்களைப் பற்றி என்னவென்று சொல்லிக் கொள்வது?

ஒரு நாள் மாலை டியூஷனுக்குப் போய்விட்டு வந்த அப்பா, முன்பு அம்மா குளத்திலிருந்து திரும்பி வந்த அன்று இருந்த அதே நிலையில் உள்ளே வந்து நடு அறையில் கீழே விழுந்து புரண்டு தலையில் அடித்துக் கொண்டார். ''டியூஷனுக்குப் போன இடத்தில் என்னவெல்லாமோ கேட்கிறார்களே... என் மானம் பறிபோகிறதே...நான் எங்கே போய் ஒளிந்து கொள்வேன்...? என்ன செய்வேன்...எப்படி வெளியில் தலை காட்டுவேன்? நீ பிறக்காமலேயே இருந்திருந்தால் எத்தனையோ நிம்மதியாக இருந்திருக்குமே! அம்மா போனதுக்குப் பதில் நீ போயிருந்தாலும் நிம்மதியாக இருந்திருக்குமே!'' என்று தம்மை மறந்து ஏதேதோ சொல்லித் தலையைத் தரையில் மோதிக் கொண்டார்.

அன்று இரவு பாதித் தூக்கத்தில் கண் விழித்துப் பார்த்தபோது என்றுமில்லாத வழக்கமாக உமா என்னைக் கட்டி அணைத்தபடி தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டேன். அழுது அழுது அவள் கண்களிலிருந்து படிந்திருந்த கண்ணீர்க் கோடுகள் மங்கிய விளக்கொளியில் தெரிந்தன.

மறு நாள் காலை உமா சமையல் செய்து வழக்கம்போல் என்னை முன்னாலேயே அலுவலகத்துக்கு அனுப்பினாள்.

மாலை வழக்கம் போல் ஐந்தரை மணிக்கு பஸ் ஸ்டாண்டில் இறங்கி வீட்டை நோக்கி நடந்தேன். தெரு முனை திரும்பி நடந்து வீட்டுக் காம்பவுண்டை நெருங்கியபோது உள்ளே ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது தெரிந்தது. அந்தக் கூட்டமே என் உயிர் நிலையை ஆட்டுவித்து ஏதோ நடந்திருக்கிறது என்று உணர்வித்தது. கால்கள் எழும்பவில்லை. எப்படியோ வீட்டை அடைந்தேன். இரண்டு மூன்று போலீஸ்காரர்களும் தெரிந்தனர். வீட்டின் முன்பக்கத்து வராந்தா அறையில் அப்பா அலங்கோலமாகக் கிடந்தார். யார் யாரோ அவருக்கு விசிறிக் கொண்டிருந்தார்கள். கையில் இருந்ததை வீசி எறிந்து விட்டு அப்பாவிடம் குனிந்தேன். யாரோ உள்ளே கையைக் காண்பித்தார்கள். உள்ளே போகத் திரும்பினேன்.

அங்கே... ஐயோ...!

உமா அலங்கோலமாகத் தரையில் கிடந்தாள். விழிகள் பிதுங்கி, நாக்கு வெளியில் தொங்கி... ஐயோ...!. அவள் பக்கத்தில் ஒரு கயிறு.... என் நினைவும் தப்பியது.

உமா எரியும் நெருப்பில் குளிர்ந்தாள்.

இருபது நாட்களுக்கு மேல் ஆயிற்று. அப்பாவிடம் நான் சொன்னேன். ''இனி மேல் இங்கே இருந்து என்ன செய்கிறது? ஊருக்கே போவோமா?'' என்று.

அப்பாவுக்கு நான் சொன்னது காதில் விழவே யில்லை. நெடுநேரம் கழித்துச் சொன்னார்: ''எந்த ஊருக்குப் போவது? எதற்காகப் போவது? எனக்கு ஒன்றுமே புரியவே யில்லை....''

ஒரு மாதம் ஓடிற்று.

ஒரு நாள் பத்திரிகையில் பம்பாய்ப் பள்ளிக்கூடம் ஒன்றில் 'தமிழும் ஹிந்தியும் ஆங்கிலமும் போதிக்கத் திறமை வாய்ந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியை தேவை' என்ற விளம்பரம் கண்ணில் பட்டது. அப்பாவைக் கூடக் கேட்காமல் அதற்குப் பதில் எழுதி வைத்தேன். அதற்குப் பதில் வரும் என்றுகூட நினைக்கவில்லை. மறு வாரமே பதில் வந்தது. என் நிலையை விளக்கி எழுதி அப்பாவுக்கும் எனக்கும் மாத்திரம் ஏற்றதாய்த் தங்குவதற்கு இட வசதி கிடைக்குமா என்று கேட்டதற்கு அவர்கள் ஏற்பாடு செய்து தருவதாகப் பதில் எழுதினார்கள்.

அப்பாவிடம் கேட்டேன்.

அப்பா மௌனமாகத் தலையை ஆட்டினார்.

பம்பாய் பெரிய நகரம். நான் நினைத்துப் பார்த்திருந்ததை விட நூறு பங்கு பெரிய நகரம். இமயமலையைப் போன்றிருந்த அதில் சிற்றெறும்புகளாக நாங்கள் அங்கே குடிபுகுந்தோம்.

பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகச் சில மாதங்கள் வேலை பார்த்த அனுபவம் மாத்திரம் எனக்கு இருந்தது. இந்த வேலைக்கு அனுபவத்தை விட ஆர்வமே அதிகமாகத் தேவை என்பதைப் பள்ளி நிர்வாகிகள் உணர்ந்தது சரிதான் என்பது எனக்குப் புரிந்தது. தினந்தோறும் காலை எட்டு மணிக்கு அன்றலர்ந்த மலர்களென என் வகுப்பறையை நிறைவிக்கும் குழந்தைகள் என் உள்ளத்தையும் நிறைவித்தார்கள். கள்ளம் கபடறியாத அவர்களிடம் நான் தெய்வத்தின் சந்நிதானத்தை உணர்ந்தேன்.

அப்பாவும் நானும் உமாவை மறக்கும் முயற்சியில் அவளைப் பற்றி ஒருவருக்கொருவர் நினைவுபடுத்திக் கொள்ளக் கூட அஞ்சி அவரவர்கள் சிந்தனைகளை அவரவர் மனத்தினுள் புதைத்துக் கொண்டிருந்தோம். பகல் வேளைகளில் பள்ளி வேலைகளிலும் மற்ற வேலைகளிலும் ஈடுபட வேண்டியிருந்ததால் அந்த நேரங்களில் உமாவைப் பற்றி அதிகமாக நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஆனால் இரவு வந்தால் என் பக்கத்துப் படுக்கையில் அவள் படுத்துக் கொண்டிருக்கும் பிரமையிலிருந்து என்னால் விடுபடவே முடியவில்லை.

பள்ளியில் நிம்மதியுடன் என் வகுப்புகளைக் கவனித்துவந்தேன். நான் கவனித்து வந்தது சின்னஞ் சிறு குழந்தைகள் படிக்கும் ஆரம்பப் பள்ளி. அங்கே என்னுடன் மேல்

வகுப்புகளுக்கு ஆசிரியைகளாக இருந்த பத்துப் பதினைந்து பேரில் அனு என்ற பெண்ணிடம் எனக்கு மற்றவர்களிடம் ஏற்படாத கவர்ச்சியும் அன்பும் பெருகிற்று. வாழ்க்கையில் எந்தச் சின்ன விஷயத்தைக் கூட ஓர் அனுதாபக் கண்ணோட்டத்தோடு பார்க்கும் அனுவை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

அனு எத்தனையோ தடவை தன் வீட்டுக்கு வரும்படி என்னை அழைத்தாள். இனி யார் வீட்டுக்கும் போவதில்லை, யாருடனும் நெருங்கிய பழக்கத்தை வைத்துக்கொள்வதில்லை என்று உறுதியாகத் தீர்மானித்திருந்ததால் அவள் வீட்டுக்கு ஒருதடவை கூடப் போகவில்லை.

பள்ளிக்கு வந்தால் குறைந்தது நாலைந்து தடவையாவது கூடிக் கூடிப் பேசும் அனு திடீரென்று நாலைந்து நாட்களாகப் பள்ளிக்கு வரவில்லை. அவளுக்கு உடல் நலம் சரியில்லை என்று தெரிய வந்தது. பத்து நாட்களுக்குப் பிறகு அவளுக்கு அதிகமாக ஜுரம் என்று கேள்விப்பட்டதால் முதல் முதலாக அவள் வீட்டுக்குப் போனேன்.


அவர்கள் பணக்காரர்கள். அனுவின் அப்பா ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குபவர் என்று தெரிந்ததால் அவர்கள் வீட்டுக்குக் கூச்சத்துடனேயே போனேன். படுக்கையிலிருந்த அனு பத்து நாட்களில் இளைத்துத் துரும்பாகி யிருந்தாள். நான் வந்து விசாரித்ததில் மிகவும் சந்தோஷமடைந்தாள் அனுவின் அம்மா.

நான் அனுவின் கட்டில் அருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது புயலடித்தது போன்ற வேகத்துடன் ஒருவர் உள்ளே வந்து அனு இருப்பதைக் கூடக் கவனியாமல் மூலையில் இருந்த பீரோவைத் திறந்து அதிலிருந்து உடைகளை எடுத்துக் கொண்டு பீரோவின் கதவைச் சாத்தியவர் கண்ணாடிக் கதவில் என்னைப் பார்த்து விட்டு ஒரே கணத்தில் பதற்றம் மாறி அனுவிடம் திரும்பி, "எப்படி இருக்கிறது. அனு. உடம்பு?" என்று என்னைப் பார்த்தபடியே விசாரித்தார். நான் நகர்ந்து அறையின் கோடிக்குப் போனதும் நான் உட்கார்ந்த இடத்தில் அமர்ந்து அனுவின் கையைப் பிடித்துப் பார்த்து விட்டு. "கரெக்டாக நேரப்படி மருந்தைச் சாப்பிடு... ஜாக்கிரதை... நான் வரட்டுமா?..." என்று என் மீது வைத்த பார்வையை அகற்றாமல் அறையின் கோடிக்குப் போய் மீண்டும் ஒரு தடவை பார்த்துவிட்டுப் போனார்.

அவர் போன பிறகு. "என் அண்ணா. ஏ.ஜீ.ஸ் ஆபீஸில் வேலை பார்க்கிறான்" என்று சொன்னாள் அனு.

நான் அந்நேரிக்குத் திரும்பினேன்.

அனுவுக்கு உடல் தேறி வருவதாகத் தெரிந்தது. அதன் பின்னர் நான் அவர்கள் வீட்டுக்குப் போகவே யில்லை. அனுவுக்கு உடல் நலம் தேறி, படுக்கையில் எழுந்து உட்கார்ந்த நிலைக்கு வந்த பிறகு என்னை மீண்டும் வந்து பார்க்கும்படி ஒரு குழந்தை மூலம் சொல்லியனுப்பியதால் போனேன். அனுவைவிட அவள் அம்மா என்னிடம் அன்பைக் கொட்டிப் பேசினாள். அன்றுதான் அனுவின் அப்பாவைப் பார்த்தேன். அந்தக்



"ஜாக்கிரதை! உன் காருக்குப் போடுற 'எல்', ரோடில் போகிறவர்களுக்கு என் ஆகிவிடப் போகிறது!"

குடும்பத்தைப் பார்க்கப் பார்க்க, நாலைந்து வருஷங்களுக்கு முன்னர் திருவாபுரத்தில் எங்கள் குடும்பம் இருந்த நிலை நினைவுக்கு வந்தது.

அனு பள்ளிக்கு வர ஆரம்பித்தாள்.

ஒரு நாள் மாலை. பள்ளி விட்டபிறகு ஸ்டேஷனுக்கு வந்து கொண்டிருந்தேன். மணி நாலரைநான் ஆகியிருந்தது. டிலாங் ரோடு மூலையில் அனுவின் அம்மா நின்று கொண்டிருந்தவள் என்னைப் பார்த்ததும் விரிந்த முகத்துடன், "உஷா! வீட்டுக்கு வாயேன்..." என்று அழைத்தாள். நான் ஏதோ பதில் சொல்வதும் தயங்கித் தயங்கி, "உன்னுடன் கொஞ்சம் பேசணும். இப்படி வா. கோயில் பக்கம் போவோம். அவசரமாக வீட்டுக்குப் போகணுமா?" என்று என்னை அழைத்துக் கொண்டு ராமர் கோயிலுக்குப் போனாள். நாலரை மணி வேளையில் அங்கே யாருமே இல்லை. இருவரும் கோயிலைச் சுற்றி வந்தோம். தெற்குப் பக்கத்தில் அனுவின் அம்மா தயங்கி நின்றாள். "உன்னிடம் ஒன்று கேட்கணும். எப்படிக் கேட்பது என்று தெரியாமல் தவிக்கிறேன். நான் ஒன்று சொல்கிறேன். கேட்கிறாயா? அனுவின் அண்ணாவை நீ பார்த்திருக்கிறாய் இல்லையா? அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்கணும். உன்னைப் பார்க்கலாம் என்று நாங்கள் ஆசைப்படறோம். ஏன் இப்படிப் பயப்படறே? உன் முகமும் கண்களும் ஏன் இப்படி நடுங்குகின்றன? பயப்படாதே.... இந்த விஷயத்தை இப்படி ஆரம்பிக்கக் கூடாதுதான். அவனும் உன்னைப் பார்த்த அன்றைக்கு முதல் பார்வையிலேயே என் மனதை இழந்து விட்டேன். நீதான் என் பின்னாலுக்கு மனைவியாக வந்து... வந்து.... அப்பா... சரியா... உனக்கு அப்பா இருக்கிறார் என்று அனு சொன்னாள். நானும் அனுவின் அப்பாவும் அவரை வந்து பார்க்கிறோம்."

இப்படிப்பட்ட திடீர்த் தாக்குதலால் அதிர்ச்சி அடைந்தாலும் உடனேயே சமாளித்துக் கொண்டு, ''நாங்களோ ரொம்ப ஏழைகள். நீங்களோ பெரிய பணக்காரர்கள். நீங்கள் இருக்கும் அந்தஸ்துக்கு எங்களை ஏன் பார்க்கிறீர்கள்? அதோடு இன்னொரு விஷயம்: என்னைத் தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்படியான மனம் இல்லை'' என்றேன்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்றரை மணி இருக்கும். காப்பி தயாரித்துக் கொண்டிருந்த போது வாசற் பக்கத்துக் கதவை யாரோ தட்டவே அப்பா திறந்து பார்த்தார். அனுவின் அம்மாவும் அப்பாவும் நின்று கொண்டிருந்தார்கள். உள்ளே வந்த அனுவின் அம்மா ஒரு தட்டு நிறையப் பழங்கள், பூவை மேஜையின் மேல் வைத்தாள். அறிமுகம் ஆனபிறகு அனுவின் அப்பா பேச்சை ஆரம்பித்தார். நான் பிரமை பிடித்து நின்றேன். முன்பின் எச்சரிக்கை இல்லாமல் இப்படி இரண்டு பெரிய மனிதர்கள் வந்து தாக்கவே அப்பாவும் என்ன பேசுவது என்று தெரியாமல் தவித்தார். அப்பாவிடம் அதைப் பற்றி நான் தெரிவிக்கவே இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட அனுவின் அம்மா என்னிடம் கேட்டாள்: ''ஏன் அப்பாவிடம் தெரிவிக்கவில்லை? சொல்லியிருப்பாய் என்றல்லவா நினைத்தேன்?''

நான் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பா என்ன பேசுவது என்று புரியாமல் தத்தளித்தார்.

ஒரு வழியாக அவர்கள் கிளம்பினார்கள்.

அவர்கள் போன பிறகு அப்பா என்னைப் பார்த்தார். ''என்னால் நம்பவே முடியவில்லை. நடப்பது உண்மையா, கனவா என்று தெரியவில்லை. ஊரைப் பற்றி ஏதாவது விசாரிப்பார்களோ என்று பயந்து தடுமாறினேன். அவர்கள் பேசுவதைக் கேட்டால் நாம் சம்மதம் என்று சொன்னால் அடுத்த முகூர்த்தத்தில் வேண்டுமானாலும் கலியாணத்தை வைத்துக் கொண்டு எல்லா ஏற்பாடுகளையும் அவர்களாகவே பார்த்துக் கொள்வார்கள் போலிருக்கிறதே!'' என்றார்.

அப்பாவின் கேள்வி கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல் கேட்டது. ''ஏன் அம்மா பதிலே சொல்ல மாட்டேன் என்கிறாயே... அவர்கள் வீட்டுக்கு அனுவைப் பார்க்கப் போயிருந்த போது அந்தப் பிள்ளையையும் பார்த்திருப்பாயே.... ஏதாவது ஏமாற்று வேலையாக இருக்குமோ? அவர்களாகவே ஏன் இப்படி நம்மிடம் குழைகிறார்கள்?''

நான் பதில் ஏதும் சொல்லவில்லை. அப்பாவும் அப்போதைக்கு அது போதும் என்று எழுந்து சென்றார்.

நான் வீட்டில் இல்லாத வேளைகளில் அனுவின் அம்மாவும் அப்பாவும் இரண்டு மூன்று தடவைகள் என் வீட்டுக்கு வந்து அப்பாவிடம் பேசிச் சென்றிருக்க வேண்டும். அதனால்தான் என் சம்மதத்தைப் பற்றிக்கூட அதிகமாகக் கவலைப்படாமல் கல்யாணம் நிச்சயம் ஆகும் கட்டத்துக்கு வந்து நின்றது.

ஒரு நாள் மாலை பள்ளிக்கூடம் விட்டதும் அனு எனக்காக வெளியில் காத்துக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும், ''உஷா! உன்னுடன் கொஞ்சம் தனியாகப் பேசணும், வருகிறாயா?'' என்று கேட்டு அதிகச் சந்தடி இல்லாத இடமாகப் பார்த்து அழைத்துச் சென்றாள். முகவுரை எதுவும் இல்லாமல் அனு தன் வழக்கம்போல் பளிச்சென்று தொடர்ந்தாள்: ''என் அண்ணாவைப் பற்றிச் சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டேன். கல்யாணம் ஆனபிறகு தெரிவதைவிட முன்பாகவே தெரிவது நல்லது இல்லையா? எப்படியும் இதைப் பற்றிக் கல்யாணத்துக்கு முன்னாலேயே சொல்லிவிட வேண்டும் என்று பார்த்தேன். இன்றுதான் அதற்கான தைரியம் வந்தது. அண்ணா... அவனைப் பற்றி நானே உன்னிடம் எப்படிச் சொல்வேன்...? அவனைப் பற்றிச் சொல்ல என் நாக்குக் கூசுகிறது. உனக்கு அவனைப் பற்றிய விவரம் தெரிந்திருக்க வேண்டும். அண்ணா...அவன் மனிதப் பிறவியே இல்லை. உஷா ...இப்படித் திடீரென்று சொல்வதற்கு என்னை மன்னித்துவிடு...அவனுக்குத் தங்கையாக இருப்பதுகூட எனக்கு அவமானம்.... அவனைப் பற்றி முழுதும் சொல்லி விடுகிறேன். முழுதும் கேட்ட பிறகு என் அம்மா அப்பாவுக்காகவும் என்னை நினைத்தும் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிப்பதாக இருந்தால் சம்மதி. இல்லாவிட்டால்...

''அண்ணா மனிதப் பிறவி இல்லை... அவன் ஒரு மிருகம்.... அதுவும் பெண்கள் விஷயத்தில் அவன்.... அதை எப்படிச் சொல்வேன்.....? இது வரை அவன் பார்த்திருக்கும் பெண்களுக்குக் கணக்கு வழக்கு இல்லை. நாளுக்கு ஒருத்தி. வேளைக்கு ஒருத்தி என்று அவனுக்கு இந்த ஊரில் பெண்கள் அகப்படுகிறார்கள். இதையெல்லாம் எப்படி நான் என் வாயால் சொல்வேன்.... இப்படிக் கெட்டலைபவனை எப்படித் திருத்துவது என்று அம்மாவின் கவலை. அவன் நெறி கெட்டு நடந்து கொண்டிருந்த இடங்களில் எத்தனையோ தடவை அவனைக் குற்றுயிரும் குலை உயிருமாக அடித்துக் கூடப் போட்டிருக்கிறார்கள். ஒரு தடவை போலீஸ் வழக்காக உருவெடுத்து, அப்பா மானத்தையெல்லாம் விட்டுத் தலை குனிந்து யார் யாருக்கோ ஆயிரமும் நூறும் கொடுத்து அவனை மீட்டு வந்திருக்கிறார். உஷா, உன் குணமும் உன் பழக்கமும் உன்னிடமிருந்து எதையுமே மறைக்கக் கூடாது என்று என்னை எச்சரிக்கின்றன.... கலியாணம் ஆன பிறகு அண்ணாவின் குணம் மாறாமல் இருந்தால் நீ அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டாய். ஒரு வேளை உயிரை விட்டாலும் விட்டு விடுவாய் என்று என் அந்தரங்கம் சொல்கிறது. அதனால்தான் எல்லாவற்றையும் சொல்லி விட்டேன்....'' என்று முடித்தாள்.

வீட்டுக்குப் போனதும் அப்பாவாகப் பேச்சை ஆரம்பித்தார்.

''எல்லாம் சரி.... உங்களுக்கு அவரைப் பற்றி ஏதாவது தெரியுமா?''

என் கேள்வி அப்பாவுக்குத் தூக்கிவாரிப் போட்ட மாதிரி இருக்கிறது.

''உனக்கு ஏதாவது தெரியுமா?''

''தெரியும்.....''



தகுதிவாய்ந்த திட்டம் ஒன்று உங்களிடம் இருப்பின், அதற்கான நிதி உதவி வழங்குகிறோம் நாங்கள்

செம்மையான திட்டம் ஒன்றும், தேவையான வழிவகையறிவும், அதனை வெற்றிகரமாக நடத்துவதற்கான திறமையும் உங்களிடம் இருப்பின், எங்களை நாடிவாருங்கள். சொந்தமாக உங்கள் சிறுதொழிலைத் துவக்க நாங்கள் உதவிதருகிறோம்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

S. 338 A, TM

நெஸ்கா:.பே

சுவையே சொல்லும்:

1 அது உயர்ந்த தென்னிந்திய காபிக் கொட்டையினால் தயாரிக்கப்படும் 100% தூய காபி

2 அது இன்ஸ்டன்ட் காபி தயாரிப்பதில் உலகிலேயே அதிக அனுபவம் உடையவர்களால் தயாரிக்கப்படுகிறது.

3 அது நீங்கள் விரும்புமளவுக்கு ஸ்டிராங்காக இருக்கிறது.

சிறிதளவு சம அளவு குவிபலாக

அது சிக்கனமானதும் கூட
தேவையான அளவே உபயோகியுங்கள்
அதில் வீணாகப்போவது எதுவுமில்லை



NESCAFÉ*
நெஸ்லே தயாரிப்பு

தனிச்சிறப்புள்ள தரமான காபி

*நெஸ்கா:.பே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டார்ட் டிரேட் மார்க்காகும்.

NC6 1969 TAM-AI

''யார் சொன்னார்கள்?''

''அனு சொன்னான். என்னை எதற்காக இப்படி வலிய வந்து கலியாணம் செய்து கொள்ளத் துடிக்கிறார்கள் தெரியுமா? தெய்வங்களுக்குப் புஷ்பங்களையும் நிவேதனங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். துர்த் தெய்வங்களுக்கு உயிர்ப் பலி கொடுக்க வேண்டும். என்னை உயிர்ப் பலியாகக் கொடுத்து ஒரு துர்த் தேவதையைத் திருப்திப்படுத்தப் பார்க்கிறார்கள்....''

''அப்படியெல்லாம் தெய்வம், துர்த் தெய்வம் என்றெல்லாம் பேசாதே அம்மா. நானும் அவனைப் பற்றிக் கேள்விப்பட்டேன். விசாரித்தேன். சில ஆண் பிள்ளைகள் கல்யாணத்துக்கு முன்னால் அப்படி இருப்பது வழக்கம் உண்டு. கல்யாணம் ஆனால் எல்லாம் சரியாகிவிடும்.... அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாதே.... அந்த அம்மாவும் நீயும் சேர்ந்து முயற்சி செய்தால் அவனும் நல்லவனாகி விடுவான்......''

''எல்லாவற்றையும் நீங்களே தீர்மானித்து விட்டீர்களா, அப்பா ?''

''தீர்மானிக்கிறது என்ன அம்மா ? எப்படிக் கெட்டதெல்லாம் நம்மைக் கேட்காமலே வந்ததுவோ அப்படி நல்ல காரியங்களும் தாமாக நம்மை வந்து அடையும்.''

''என் மனம்......''

''அது எனக்குத் தெரியும்.... நீ வீணாக உமாவைப்பற்றியெல்லாம் நினைத்துக் கொண்டிராதே..... அவள் விதி.....''

''அப்பா..... !''

''ஒருவர் தலை விதிக்காக ஒருவர் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் உலகத்திலே காரியமே நடக்காது. உமாவின் முடிவு அவள் விதி...... !''

வாழ்க்கையில் முதன் முதலாக அப்பாவின் மீது எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. அந்த வெறுப்பு ஜுரம் ஒரே வேளையில் ஆளைக் கீழே தள்ளுவது போல் 'சர்' என்று ஏறியது. இத்தனை நாட்களாக அப்பாவாக இருந்தவர் இப்போது ஓர் ஆண் பிள்ளையாகத் தெரிந்தார். ஆம்.... இவர் அப்பா மாத்திரம் இல்லை. இவர் ஓர் ஆண் பிள்ளை ! பெண்ணைப் பற்றி யாரோ ஏதோ சொன்னார்கள் என்ற ஒரே நினைவிலேயே உருகித் தேய்ந்து போனாள் அம்மா. ஏனென்றால், அவள் பெண் ! அதன் பிறகு இழந்த கௌரவத்தைக்கூடச் சென்னை வாழ்க்கையில் மீட்டுக் கொண்ட போது மறுபடியும் அந்த வார்த்தை காதில் விழுந்ததும், விழி பிதுங்க, நாக்குத் தொங்கத் தன் வாழ்க்கையையே முடித்துக் கொண்டாள் உமா. ஏனென்றால், அவள் ஒரு பெண்.....! இத்தனையும் தெரிந்தும்.... இத்தனைக்கும் சாட்சியாக இருந்தும் அப்பா சொல்கிறார்..... உமாவின் முடிவு அவள் விதியாம் ! அவள் விதியா அது ? காரில் வந்த அவன் முகத்தில் காறித் துப்பிவிட்டு வந்த உமாவின் விதியா அது? அப்பாவா இப்படிச் சொல்கிறார்? ஆம், அப்பா, அப்பா மாத்திரம் இல்லை.... அப்பா ஓர் ஆண் பிள்ளை.....!

''சரி, நேரமாகிறது. தூங்கு.... நாளை அவர்களுக்குச் சரி என்றே சொல்லி விடுகிறேன்'' என்று தூங்கப் போனார் அப்பா.

சிந்திப்பதானால் நிதானமாகச் சிந்தியுங்கள்; செயல்படுவதானால் உறுதியோடு செயல்படுங்கள்; விட்டுக் கொடுப்பதானால் மனதார விட்டுக் கொடுங்கள்; எதிர்ப்பதானால் திடமாக எதிருங்கள்

கோல்டன்

அனுப்பியவர்: வி.ச.வாசுதேவன்

என் மனம் பறந்தது. நிலை கொள்ளவே இல்லை.... சகாரா பாலைவனத்தில் ஒரு சொட்டுத் தண்ணீரைத் தேடி அலையும் ஜீவனாக மனம் அலைந்தது.

எனக்குக் கல்யாணமா.....? ஓர் ஆண் பிள்ளையுடனா.....? அதுவும்.....

எவனோ ஒரு கார்க்காரன் என்றோ ஒரு நாள் மறைந்து செய்த சதியால் உமாவைக் கையால் தீண்ட முயன்றதற்கே அவளும் அம்மாவும் தீய்ந்து கருகிப் போனதைக் கண் முன் பார்த்தவள் நான். இந்த மனிதர் ஆயிரம் உமாக்களையும் அவர்கள் அம்மாக்களையும் கருக வைத்திருப்பவராக இருந்திருக்க வேண்டும். போயும் போயும் இவரையா என் மனம் ஏற்றுக் கொள்ளும்? ஒரு நாளும் இது நடக்காது !

இரவு முழுதும் இதைப் பற்றியே பயங்கரமான கனவு.... பகல் முழுவதும் கனவை விடப் பயங்கரமான நினைவுகள்....

நான் என்னிலிருந்து நழுவி வேறானேன்.

இந்தக் கல்யாணத்துக்கு ஒரு நாளும் சம்மதிக்க முடியாது !

போயும் போயும் இவன் முன்னால் கழுத்தை நீட்டினேன் என்பது தெரிந்தால் உமாவின் ஆவி என்னைச் சும்மா விடுமா?

அம்மா....

அம்மா.... உமா... நானும் உங்களைப் போன்றவள்தான். இந்த உலகம் முழுதும் அப்பாவும் சேர்ந்து.... வேறாக இருக்கட்டும். இந்தக் கொடுமைக்கு நான் நிச்சயம் உடன்படமாட்டேன்.

ஒருவன் மூச்சுக் காற்றே உங்கள் இருவர் உயிரையும் குடிக்கச் சக்தி வாய்ந்ததாக இருந்திருந்தால் அதைப் போல் ஆயிரம் மடங்கு விஷமுடைய வேறு மூச்சுக் காற்றும் உடலும் என் மீது பட வேண்டாம்.

எனக்குத் தெரிந்த வழி ஒன்றுதான்..... இனியும் யோசித்துக் கொண்டிருந்தால் என் பெயரை அவன் பெயருக்கு எதிரே போட்டு அச்சடித்து விடுவார்கள்....

தினமும் ரயில் வருகிறது.

காலை ஆறு மணிக்கு ஒரு ரயில் வருகிறது. சரியான நேரம்....

ஒரு கணம்...

திரும்பிப் போய்விடலாமா...?

யாராவது பார்த்து விட்டுத் தூக்கி அப்பால் போட்டு விடுவார்களோ...?

அதோ உமாவின் முகம் தெரிகிறதே.... அம்மாவின் முகத்தில் துலங்கும் பெரிய குங்குமப் பொட்டுத் தெரிகிறதே...! இதோ வந்து விட்டேன்....!

ரயில் வருகிறது...

உமா...! அம்மா...! உமா...! அம்மா !

கண்ணை விழித்துப் பார்க்கும் போது ஆஸ்பத்திரி... டாக்டர்கள்... நர்சுகள்...

தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்து கொண்டதாக என்மீது வழக்கு...

வைதிக் கூண்டு... மாஜிஸ்திரேட்.... போலீஸ்காரர்கள்...

என் மனம் துளிக்கூடக் கலங்கவில்லை.... கோர்ட் ஹாலில் உள்ள அத்தனை பேரும் என்னை அதிசயப் பிறவியாகப் பார்க்கிறார்கள். நான் உஷாகூட அல்ல... மறு பிறவி.... இன்னும் கடினமான மனம் அமைந்த பிறவி.

மாஜிஸ்திரேட் வழக்கை ஆரம்பிக்கிறார்.

''தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்ததாக உன் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது..... குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா....?''

''நான் ஏதாவது கேட்கலாமா ?''

''வழக்குக்குப் புறம்பானதாக இல்லாமல் இருந்தால் என்ன வேண்டுமானாலும் கேட்கலாம்......''

'' இப்படிக் கேட்பதற்கு என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். தங்களுக்கு ஒரு பெண் இருக்கிறாளா ? என் வயதொத்த கல்யாணம் ஆகாத பெண்....?''

''அதைப் பற்றி என்ன?''

''தயவுசெய்து சொல்லுங்கள்.... இருக்கிறாளா....? அவளை ஓர் ஆண் மகன் இடறென்று கட்டிப் பிடித்து... அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள் ?''

''...................... ''

''நீங்கள் பதில் சொல்ல மாட்டீர்கள்.... எனக்குத் தெரியும். என்ன செய்வீர்கள் தெரியுமா...? அவனைச் சுட்டு விடுவீர்கள். உங்கள்மீது வழக்கு வரும், போலீஸ்காரர் வருவார்கள், வேறு ஒரு மாஜிஸ்திரேட் விசாரணைக்கு வருவார் என்பதெல்லாம் நினைவுக்கு வராது...ஆனால்...என் வயதில் ஆண் பிள்ளை இருந்து அவன் யாரோ ஒரு பெண்ணைக் கட்டிப் பிடித்தால்... அவனைச் சுட்டப் போக மாட்டீர்கள்.... 'ஏண்டா, இப்படித் தப்புக் காரியம் செய்கிறாய்? உனக்கு அழகான பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன். இந்தப் பெண் கேவலம்...' என்பீர்கள்.... பெண், கற்பு என்பதைப் பற்றியெல்லாம் இந்த உலகத்தில் குளக் கரையிலும் கோயிலிலும் கோர்ட்டிலும் பேசுகிறார்களே... என்ன கேவலம்! என்ன வேண்டுமானாலும் எனக்குத் தண்டனை கொடுங்கள். நான் தற்கொலை செய்து கொள்ளத்தான் முயற்சி செய்தேன்... எனக்குத் தீர்ப்பளிப்பதற்கு முன்னால் இதற்குப் பதில் அளியுங்கள்... ஒரு குற்றத்தை ஓர் ஆண் மகன் செய்தால் அது ஒன்றும் தண்டனை பெறத்தக்க குற்றம் இல்லை.... மன்னித்து விடலாம், மறந்துவிடலாம்...அதே குற்றத்தை ஒரு பெண் செய்தால் அநீதி! ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி! இது என்ன நியதி? சீ..சீ..! இப்படிப்பட்ட உலகில் இன்னுமா நான் வாழ வேண்டும்....?''

''ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை அளிக்கிறேன்....''

போலீஸ்காரர்கள்.... சிறை....


அப்பா வாரா வாரம் வருகிறார். அனுவின் அப்பா என். ஆர். ஐயர் வருகிறார். அனுவும் அவள் அம்மாவும் வருகிறார்கள். அனுவின் அண்ணாகூட எட்டி நின்று வணங்குகிறார்.

மார்ச், ஏப்ரல், மே... செப்டம்பர்...


அப்பா வருகிறார். கையில் தேவி மாகாத்மியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு...

''நேற்றிலிருந்து நவராத்திரி ஆரம்பம் அம்மா...யாரோ தேவிமாகாத்மியம் வாசிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது நான் படித்துப் பார்த்தேன். இதைப் படித்த பிறகுதான் இதுவரையில் விளங்காத எத்தனையோ விஷயங்கள் விளங்குகின்றன. உன்னைப் பற்றியும் உன் கேள்விகளைப் பற்றியும்கூட இதைப் படித்ததிலிருந்து புரிய ஆரம்பித்திருக்கிறது...நீயும் இதைப் படித்துப் பார். உனக்கும் எத்தனை எத்தனையோ அர்த்தங்கள் தெரியும்...''

நான் மௌனமாக உட்கார்ந்திருக்கிறேன். அப்பா தொடர்ந்து பேசிக் கொண்டு போகிறார், ஒரு பிரசங்கிபோல. ''உன் கேள்விகளைப் பற்றி இப்போதுதான் புரிந்தது என்றேனே, அது என்ன தெரியுமா? இப்போது நான் கேட்பதற்குப் பதில் சொல். இந்த உலகத்தைப் படைத்தவன் யார்? பிரும்மா... அவன் படைப்பதற்குச் சக்தி அளிப்பது யார் தெரியுமா? தேவிதான்... இந்த உலகைக் காப்பாற்றுபவன் விஷ்ணு. அவனுக்கு அந்தச் சக்தியை அளிப்பது யார் ? சாட்சாத் தேவிதான். தேவியின் அருள் இல்லாவிட்டால் மற்ற எந்தத் தெய்வங்களுக்குமே மதிப்பில்லை... ஆம்... இந்த உலகிலும் வேறு எந்த உலகிலும் தேவிதான் உயர்ந்தவள். அவளுக்கு மேலே உள்ள சக்தி வேறு எதுவும் இல்லை. இதைப் புரிந்து கொண்டு உன் சந்தேகத்தை நினைத்துப் பார்... ஒரு குற்றத்தை ஓர் ஆண் மகன் செய்தால் அதற்குத் தண்டனை இல்லை. ஏன் தெரியுமா? அவன் சாதாரண, கேவலம் ஓர் ஆண் மகன்.... ஆனால் அதே குற்றத்தை ஒரு பெண் செய்ய முடியாது. ஏன்? ஒவ்வொரு பெண்ணும் தேவியின் அம்சம். ஆண் மகன் ஒரு நாளும் பெண்ணுக்குச் சமமாக முடியாது. தந்தையாக ஆவதில் பெருமை இல்லை. தாய்மையே தெய்வம். இந்த உலகில் எல்லா இடத்திலும் ஒரே சமயத்தில் தான் இருக்க முடியாது என்பதற்காகத்தான் ஆண்டவன் தாய்மையைப் படைத்தான். இப்போது தெரிந்து கொள். சாதாரணமான பெண்ணாக இருந்தாலும் அவள் தேவியின் அம்சம். அதனால் சமத்துவம், நீதி இதற்கெல்லாம் பெண்மைக்கும் தாய்மைக்கும் ஆணுடன் சேர்ந்து ஒரே தராசில் இடம் இல்லை. இந்த உலகைவிடத் தாய்மையும் பெண்மையுமே பெரியது... தேவிக்கும் மேற்பட்ட சக்தி இல்லை. உஷா.... இந்த உலகில் அனுவின் அண்ணனைப் போல் நூறு நூறு ஆண் பிள்ளைகள் இருக்கலாம். ஆனால் பெண்கள் அப்படி இருக்க முடியாது. ஆண்கள் அப்படி இருக்கிறார்கள் என்பதே ஒரு தண்டனை. பெண்கள் அப்படி இருக்க முடியாது என்பதே அவர்களுக்கு மேன்மை. ஏனெனில், ஒவ்வொரு பெண்ணும் தேவியின் அம்சம்.... எனக்கு இன்னும் விளக்கமாகச் சொல்லத் தெரியவில்லை... புத்தகத்தை முழுதும் அமைதியாகப் படி.... தேவியின் அநுக்கிரகம் உனக்குப் பூரணமாகக் கிட்டும்.''



ஸிக்னல் 24 மணி நேரமும் உங்கள் பற்களைப் பாதுகாக்கிறது



சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழிக்கும் ஹெக்ஸாக்ளோரபீன் இருக்கிறது ஸிக்னலின் செவ்வரிகளிலே.

பிரஷ்ஷுக்கு எட்டாத இடம் எங்கும் எட்டி, சிதைவுக் கிருமிகளை வேட்டையாடுகிறது ஸிக்னல். அதன் நுரையின் செயல்வேகம்...வாய்மலரும் தூய்மை. அதோடல்ல. துலக்கி நெடுநேரம் ஆனபின்னரும் உங்கள் வாய்நலனைக் காத்துநிற்கும். இவ்வளவு செய்ய இயலுமோ சாமானியப் பற்பசைகளால்?



லின்டாஸ்-SG. 25-140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

கர்ப்பம் ஏற்பட்டுவிடுமே என்று அச்சமின்றி இல்லற வாழ்க்கையை இன்பமாக அனுபவியுங்கள்.


குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் பத்திரமான முறை ஆண்களுக்கு இப்பொழுது உண்டு. அதுதான் **நிரோத்**

ஆடவர்களின் உபயோகத்திற்கு உகந்த உயர்தரமான குடும்பக் கட்டுப்பாடு சாதனம்.

நிரோத்


குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

மூன்றின் விலை 15 பைசா
அரசாங்க ஆதரவு விலையில்
கிடைக்கிறது.



davp 69/106

கண்டக்டர் கண்ணோட்டம்!





உயர்ந்த கட்டுரை

"'குறிஞ்சி மல''ரைப் படித்து இன்புற்ற தல்லாமல் நேரே சென்று பார்த்தும் அதன் உண்மை உருவை மிக நுணுக்கமாய் உணர்ந் துள்ள சமயத்தில் அம்மலரைப் பற்றி ஓர் உயரிய கட்டுரையும் அதே ஆசிரியரால் படைக்கப்பட்டு அதே பத்திரிகையில் வெளி வந்து படிக்க நேர்ந்ததில் பேருவகை அடைந் தேன்.

சென்னை—11
28—8—69 அ. கா. இசாக்

இரட்டிப்பு மகிழ்ச்சி!

காலங்கள் மறையலாம்; எண்ணங்கள் சிதறலாம். ஆனால் பூரணியும் அரவிந்தனும் இணைந்து மானஸீகமான நினைவில் களிப் படைந்து எங்களுக்கும் அதே நிறைவைத் தந்து எங்கள் நினைவில் 'குறிஞ்சி மல'ருடனும் குறிஞ்சி ஆண்டவர் கோவிலுடனும் நிற்கும் காட்சியை மறக்க முடியவில்லை. அன்று எங்களுக்குப் பரவசமான இன்ப உணர்ச்சி யைத் தரக் காரணமாயிருந்தவரின் கட்டு ரையை அவரது புகைப்படத்துடன் கல்கியில் இன்று காண்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

முகாம்: கோடைக்கானல்,
28—9—69 கோமு, மதுரை—1

தூய்மையான கருத்துக்கள்

ஸ்ரீ ரா. கணபதி அவர்கள் எழுதி வரும் ''காந்திஜி விரும்பிய கீதம்'' என் உள்ளத்தை உருக்குகிறது.

இந்தப் பாட்டின் (வைஷ்ணவ ஜனதோ) முழு அர்த்தமும் கருத்தும் தெரியாமல் போன தினால், காந்திஜிக்கு இந்தப் பாட்டில் என்ன தான் மோகமோ என்று அலட்சியமாக நினைத்ததுண்டு நான்.

திரு ரா. கணபதி அவர்கள் இந்தப் பாட் டின் கருத்தை 'காந்திஜி விரும்பிய கீதம்' என்று தொடராக எழுதத் தொடங்கிய பின் தான் இந்தப் பாட்டில் எவ்வளவு புனிதமான, தூய்மையான கருத்துக்கள் அடங்கியுள்ளன என்பதும், காந்திஜி இதை விரும்பிய காரணமும் புரிந்தது. ராம நாமத்துக்கு எதை இணை கூறமுடியும்?

லேகாஸ்(நைஜீரியா),
25—8—69 ருக்மிணி பார்த்தசாரதி

ஒரு சந்தேகம்

3—8—69 கல்கியில் ரா. கணபதி எழுதி யுள்ள 'அரகம் அற்பமே' என்ற அற்புதமான வரலாற்றில் (பக்கம் 34, பத்தி 2) ''இராமத் தியானம் என்கிற பேதம் அறியாமல் இராமத் தியானத்தில் பன்னிரு ஆண்டுகள் மூழ்கினான்'' என்று உள்ளது. இது ''இரா, மத்தியானம் (அதாவது இரவு—பகல்) என்கிற பேதம் இல் லாமல் இராமத் தியானத்தில் மூழ்கினான்'' என்று இருக்க வேண்டும். சொற் சிலேடைக்கு மிகவும் முக்கியமான ஒரு கமா (கால் புள்ளி) முதல் 'இரா, மத்தியான'த்தில் விடுபட்டு விட்டது என்று எண்ணுகிறேன். சரிதானா?

சென்னை,
30—8—69 பு. வி. கிருஷ்ணகுமார்

(சரிதான்! — ஆசிரியர்)

ஒப்புயர்வற்ற ஓவியர்

இவ்வார கல்கி இதழின் அட்டைப் படம் என்னுள்ளத்தை வெகுவாக ஈர்த்துவிட்டது. ஓவியர் மணியம் அவர்களின் திறனை நினைக்க நினைக்க நெஞ்சம் விம்முகிறது. ஒப்புயர்வற்ற ஓவியரை இழந்துவிட்ட ஏக்கத்தை இந்த இதழ் அட்டைப் படம் மேன்மேலும் தூண்டு கிறது. பூங்குழலியை இவர் வரைந்த ஓவி யத்தின் வாயிலாகக் கண்ட பொழுது அந் நங்கையின் மேல் மேலும் ஒரு மதிப்பு ஏற் படுகிறது. அமரர் கல்கி அவர்களின் உள்ளத்து நாயகியை உருவாக்கிய மணியத்தின் கைத் திறனை என்னென்று உரைப்பது!

குளியம்பாறை,
30—8—69 கலைமணி

உழவுத் தொழில் சொற்கள் தேவை

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் வழங் கும் உழவு (விவசாய)த் தொழில் தொடர் பான சொற்களைத் திரட்டும் பணியை மேற் கொண்டுள்ளோம். திரு சா. வி. இராசேந்திர தாசன் அவர்கள் (இராமநாதபுரம் மாவட் டம் மதகுப்பட்டிப் பகுதியில்) சேகரித்து உதவிய சுமார் 400 (உழவுத் தமிழ்)-சொற்களை அகர வரிசையில் அச்சிட்டு அவற் றின் பொருளையும் கொடுத்துள்ளோம். தங்கள் தங்கள் ஊர்களில் வழங்கும் சொற் களைக் குறித்து அனுப்ப அந்தப் படிவத்தி லேயே இடம் விடப்பட்டிருக்கிறது. இப் பணியில் எங்களோடு ஒத்துழைக்க விரும்பும் அன்பர்கள் எங்களிடம் அந்தப் படிவத்தைப் பெற்று, அதை உரியவாறு நிரப்பி அனுப்பு மாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த உழைப்பு உதவியை வழங்க விரும்பு வோர் மட்டுமே கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்: 3362-1, கிறிஸ்டியன் காலனி, டெல்லி—5 சாலை இளந்திரையன்
11—8—69

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



பரிபூரண அழகு பராமரிப்பு—

எவ்வேளையிலும் எங்குமே

....அதை சாத்தியமாக்குகிறது க்ருக்ஸ் லாக்டோ-காலமைன். சருமத்தின் சவ்வுகளைப் பேணுவதற்கென்றே விட்ச் ஹேசல் மற்றும் காலமைன் சேர்ந்தது லாக்டோ-காலமைன். அது மிகையான எண்ணெய்ப் பசையைப்போக்கி, முகப்பருக்கள் கரும்புள்ளிகள் வராமல் தடுக்கிறது; சருமத்தை மாசு, மருவற்று விளங்கச் செய்கிறது.

ஆனால்..இதுமட்டுமல்ல..காலமைன் மற்றும் விட்ச்ஹேஸல் சேர்ந்திருப்பதினால், லாக்டோ-காலமைன் உங்கள் சருமத்தை இதமாக பேணி அழகூட்டுகிறது...மேலும் இரவு, பகல் எந்நேரத்திலும் உகந்த மேக்-அப் சாதனமான லாக்டோ-காலமைன் ஒப்பனையின் 'அடிப்படை'யாக விளங்குகிறது.

உங்கள் முக எழிலுக்கு உண்மையில் லாக்டோ-காலமைன் தவிர வேறு எதுவுமே வேண்டாம்.

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன்

மாசில்லா அழகுக்கு!



க்ருக்ஸ்இன்டர்:ப்ரான் லிமிடெட
பம்பாய்-25

CIL. 10-TAM

இப்பொழுது சிறிய சைஸ்களிலும் கிடைக்கிறது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon





லைப்பாய்

இருக்குமிடம்: அதுவே... ஆரோக்கியம் இருக்குமிடம்

லைப்பாய் ஸ்நானம் - உற்சாகப் பெருக்கு. உல்லாச ஊற்று..
ஒவ்வொரு குளியலும் உணர்த்தும்: நல்ல சோப்புக்குரிய நன்மைகள்
யாவும் பெறலாம், அதற்கு மேலும் பெறலாம் ஆரோக்கியமுடன்.

அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

லிண்டாஸ்-L. 51-140 TM